# பழமொழிக் கதைகள்-3

கே.வி. குணசேகரம்.

## நூல் விபரம்

| | |
|---|---|
| **நூலின் பெயர்** | **: பழமொழிக் கதைகள் 40** |
| | (கவிதை, உரை, பழமொழி, விளக்கம், கதைகள்) |
| **நூலாசிரியர்** | **: கே. வி. குணசேகரம்.** |
| **பதிப்பாண்டு** | **:** |
| **மொத்தப்பக்கங்கள்** | **:** |
| **விலை** | **:** |
| **விநியோகம்** | **: லங்கா புத்தகசாலை** |
| | **F.L. 1.14, டயஸ் பிளேஸ்** |
| | **குணசிங்கபுர,** |
| | **கொழும்பு – 12.** |
| | **Tel : 011-2-341942** |

# அணிந்துரை

சமணசமயத் துறவியான அரையனார் சங்க காலத்தில் எழுதிய பழமொழிக் கவிதைகளுக்கு இது வரை யாரும் கதைகள் எழுதவில்லை. அவ்வப்போது உரைகளே வெளிவந்தன. அதைவிடப் பழமொழிகளைச் சுவையான கவிதைகளாக அரையனாரைத் தவிர வேறு யாரும் எழுதவில்லை. பழமொழிக் கவிதைகளைச் சிலர் ஆய்வு செய்துள்ளனர். இவை தவிர ஏராளமான பழமொழிகள் மக்களின் அன்றாட வாழ்வில் வாய்மொழிமூலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. அதுவும் தற்போது அருகிவிட்டதென்றே கூறுதல் வேண்டும். இந்நிலையில் எனது நண்பர் பழமொழி நானூறு என் ற நூலில் உள்ள கவிதைகள் அனைத்திற்கும் அருமையான கதைகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

பழமொழிகளை விளங்கிக் கொள்ள நிறைந்த அறிவு தேவை. அதுவும் கவிதை வடிவில் உள்ள பழமொழிகளை விளங்கிக் கொள்வது கடினம். கடினமான பெரியதொரு இலக்கியத்தைப் பாமரர்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் கதைகளாக எழுதியமை பெரியதொருது சாதனையாகும். இரண்டாயிரம் வருடங்களாக எழுதப்படாத நூல்கள் பலவற்றிற்கு உரை, விளக்கம் கதை என்பன எழுதி இரண்டாயிரம் வருடங்களாகப் புரியாதிருந்த பலவற்றை கே.வி. குணசேகரம் புரிய வைத்துள்ளார். அத்துடன் புராண இதிகாசக் கதைகள் பல பழமொழிக் கவிதைகளில் இடம்பெற்றுள்ளன. அவற்றையும் அறியக் கூடியதாக உள்ளது.

இவரது நூல்கள் தமிழ் நாட்டில் பெற்ற மதிப்பை இலங்கையில் பெறவில்லை என்று ஒரு பெரியவர் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். முக்கியமாகத் திருவாவடுதுறை ஆதீனம் இவரது சைவ சமய தத்துவ நூல்களின் கதைகள் தத்துவங்களுக்குப் பொருத்தமான மிகச்சிறந்த கதைகளெனப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

இவரது நோக்கம் சைவ சமயத் தத்துவங்களும், ஒழுக்கக் கருத்துக்களும் மாணவர்களுக்குச் சென்றடைய வேண்டுமென்பதே. அதற்காக மிகவும் எளிமையான சுவையான கதைகளாகத் தத்துவங்களை வெளியிடுகிறார். அதற்கு உதாரணமாகப் பலவற்றைக் கூறலாம். இவற்றுள் மிகப் பெரிய சாதனை பகவத்கீதைக் கதைகளும் திருவருட்பயன் கதைகளும் ஆகும்.

கதைகளுக்கான விளக்கம் பிரமாதம். அதைவிடக் கதைகள் பிரமாதம். ஒவ்வொரு கதையும் தத்துவங்களை அள்ளிக் கொட்டுகின்றன. “நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி தனது அங்குஷத்தை எனக்குத் தந்துள்ளார். அதனால் தான் அவர் சொல்லச் சொல்ல நான் எழுதுகிறேன்” என்று அவர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அது உண்மையான வாக்கியம். தெய்வ அருளில்லாமல் பல ஆயிரக் கணக்கான கதைகளை எழுத முடியாது. நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழும் திரு. கே. வி. குணசேகரம் அவர்கள் தற்பொழுது திருமந்திரப் பாடல்களுக்குக் கதை எழுதி வருகிறார். இன்னும் பல சமயநூல்களை இலகுபடுத்திக் கதைகள் எழுத நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி உதவ வேண்டும் என்று பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

**அ. சிவகுருநாதன்.**

# என்னுரை

'பழமொழி' என்பது பழையமொழி என்றும், நம் முன்னோரின் அனுபவமொழி என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. மக்களின் செம்மையான நல்வாழ்விற்கு உதவுவனவாகப் பழமொழிகள் விளங்குகின்றன. பழமொழியை 'முதுமொழி' என்றும் சொல்வர். இலக்கண இலக்கியங்களை வரையறை செய்த தொல்காப்பியர் பழமொழியையும் வரையறை செய்துள்ளார்.

**"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**
**ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப'**

என்பது தொல்காப்பியரது கூற்று.

அரையனார் என்ற புலவர் பாடிய கவிதையிலான இந்நூலின் முதல் இரு அடிகள் பழமொழி சம்பந்தமான தத்துவங்களைக் கூறுகிறது. பின் இரு அடிகள் முதலிரு வரிகளிற் கூறப்பட்ட தத்துவங்களைக்கான பழமொழியைக் கூறுகின்றது.

பழமொழி நானூறு என்ற இக் கவிதை நூலை முதன் முதலில் அச்சேற்றி வெளியிட்டவர் சோடசாவதானம் சுப்பிராயச் செட்டியார் அவர்கள். 1874ஆம் ஆண்டு இந்நூல் அச்சிடப்பட்டது. இதனை அடுத்து 1914 ஆம் ஆண்டு திருமணம் செல்வக் கேசவராய முதலியார் பதிப்பித்து வெளியிட்டார். 1918 -1922ஆம் ஆண்டளவில் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் 200 பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இதனை அடுத்துத் திரு. புலியூர்க்கேசிகன் அவர்கள் 1989 இல் செய்யுள்களை உரை நடையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், ஆத்திசூடி, பகவத்கீதை, திருமந்திரம், திருவருட்பயன், ஆசாரக்கோவை என்பன தத்துவங்களாகவும் உரைநடைகளாகவுமே இருந்தன. அவற்றை முதன் முதலில் இலகுபடுத்தி உரை, விளக்கம், கதைகள் எழுதியதைப் போல பழமொழி நானூறு என்ற கவிதைகளுக்கும் உரை விளக்கம் கதை என்பன எழுதியுள்ளேன். பழமொழிகளின்

பொருளைச் சிறுவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது நோக்கம்.

உரை எழுதுவதும், ஆய்வுகள் செய்வதும் மிகவும் இலகுவானது. உரையை ஆயிரக்கணக்கானோர் எழுதியுள்ளனர். அதை அப்படியே பின்பற்றி உரை எழுதலாம். ஆய்வையும் ஆயிரக்கணக்கானோர் செய்துள்ளனர். அதில் சில ஆய்வுகளைப் படித்து விட்டு அதைப் பார்த்து மொழி மாற்றம் செய்து புதிய ஆய்வொன்றைச் செய்யலாம். ஆனால் கதைகள் எழுதுவது மிகவும் சிரமமானது. அதனால் தான் யாரும் இந்நூல்களுக்குக் கதைகள் எழுதவில்லை.

காலங்காலமாக எழுதப்படும் உரைகளாலும் ஆய்வுகளாலும் சமூகம் எந்தப் பயனையும் அடையவில்லை. ஒரு சில மாணவர்கள் மட்டும் பயனடைந்தனர். உரைகளை, ஆய்வுகளை சாதாரண மாணவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அதனால் தத்துவங்களை மாணவர்கள் விளங்கிப் பின்பற்ற வேண்டு மென்பதற்காகவே அவற்றைக் கதைகளாக எழுதி வருகிறேன். இந்நூல்களை ஆராய்ந்து ஆலோசனைகள் கூறி எழுத்துப் பிழைகளைச் சீர் செய்து தந்த செல்வி. ப. இறைமகள் ஆசிரியைக்கும், இதைக் கணணி மயப்படுத்தித் தந்த திருமதி. கௌசலா நாகராஜன் அவர்களுக்கும், இந்நூலை வெளியிட்டு விற்பனை செய்து தரும் லங்கா பதிப்பக உரிமையாளர் திரு. கந்தசாமி இராசேந்திரனுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். மீண்டும் சந்திப்போம். எனது ஆக்கங்களை www.kvkuna.com இல் பார்வையிடலாம்.

கே.வி. குணசேகரம்.
பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி,கோப்பாய்.
ஸ்ரீலங்கா.

1 “அன்பானவர்களே, அறிவிற் சிறந்த பெருமக்களை மதித்துப் போற்றி வணங்கி வாழ்த்த வேண்டும். பெரியவர்களைப் போற்றித் தமக்குச் சுற்றமாய் ஆக்கிக் கொண்டால், அவர்கள் தம்மைச் சுற்றமாகக் கொண்டவர்களுக்குத் துன்பங்கள் வரவிடமாட்டார்கள். பெரியவர்கள் பிழையைப் பிழையென்றும், சரியான வழிகள் எவையெவையென்றும் மிகுந்த கவனத்துடன் கூறுவார்கள். அவர்களை மதித்துப் போற்றாவிட்டாலும் பரவாயில்லை ஆனால் அவர்களுடன் முரண்படவே கூடாது. அதுவும் சபையில் பலர் நடுவில் முரண்பட்டால் முரண்படுவோரைத் தம் வாழ்நாள் முழுவதும் நினைத்து நினைத்துத் துன்பப்பட வைத்து விடுவார்கள்“.

“திருமலைராயன் என்ற அரசனின் அவையில் சிலர் தாம் பெரும் கவிராயர்கள் என்று கூறிச் செருக்குடன் இருந்து கவிபாட வரும் ஏழைப் புலவர்களை அவமதித்து வந்தனர். இதைப் பொறுக்க முடியாத காளமேகம் என்னும் பெரும் புலவர் திருமலைராயனின் அரச சபைக்கு வந்தார். அரசவைப் புலவர்கள் திமிருடன் காளமேகப் புலவரைப் பார்த்து, “பணம் பெற வந்தீரா?” எனக் கேலி செய்தனர். அதைப் பொறுக்க முடியாத காளமேகம் ஒரு பாடலைப் பாடினார்.

**“வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு**
**காலெங்கே உட்குழிந்த கண்ணெங்கே – சாலப்**
**புவிராயர் போற்றும் புலவீர் காணீவிர்**
**கவிராயர் என்றிருந்தக் கால்”**

“கவிராயர் என்று குரங்கிற்றும் ஒரு பெயர் உண்டு. எனவே அங்கு செருக்குடன் வீற்றிருந்த கவிராயர்களை நோக்கி, உங்கள் வாலெங்கே? நீண்ட வயிறும் உட்குழிந்த கண்களுமெங்கே? என்று கேட்டார்”.

சபையில் உள்ளோர் ஏளனமாகச் சிரித்தனர். அன்று காளமேகம் செய்த கேலியைப் பற்றி இன்றும் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். ஆகையால் அன்பானவர்களே, பலர் கூடியிருக்கின்ற அவையின் நடுவிலே சான்றோரின் மனம் வருந்தும் படியாக நடந்து கொள்ளக் கூடாது”.

“நாரையூர் மன்னன் கவிஞர்களையும் பண்டிதர்களையும் குறை கூறியும் கேலி செய்தும் வந்தான். அவனது அச்செயலை அடக்க நினைத்த குடியானவன் ஒருவன் பெரும்புலவனைப் போல வேடமிட்டு அசர சபைக்குச் சென்றான்.”

“அரச சபையில் ஏராளமான அறிஞர்கள் இருந்தனர். அவர்களின் வார்த்தைகளையும் புலவர்கள் கூறும் பாடல்களையும் அரசன் விமர்சித்துக் கொண்டிருந்தான். குடியானவனுக்குச் சந்தர்ப்பம் வந்தபொழுது அவன் எழுந்து தனது வாயில் வந்த சொற்களைக் கவிதையாக இராகத்துடன் சொன்னான். அரசனுக்கு விளங்கவில்லை. விளங்காத கவிதைக்கு எவ்வாறு விளக்கம் கூறுவதென்றுபுரியாது தவித்தான்”.

“அரசே, தாங்கள் எல்லோரது கவிதைகளிலும் குறையைக் கண்டு பிடிப்பீர்கள். எனது பாடலில் குறைகள் இல்லை என்பதால் மௌமாக இருக்கிறீர்கள். ஆகவே எனது பாடலில் உள்ள சிறப்பைக் கூறுங்கள்” என்றான்”.

“அரசனுக்குத் தர்மங்கடமாக இருந்தது. பொருள் சொல்லப் போனால் மாட்டிக் கொள்ள நேரிடும் என்று நினைத்துச் சிறந்த பொருள்ள பாடல் ஆயிரம் பொன் பரிசளியுங்கள்” என்றான”.

“அப்போது குடியானவன் சொன்னான்.“அரசே தாங்கள் பெருங்கவிராயர் என்று சொல்கிறார்கள். குறைதான் தங்களுக்குத் தெரியும் என்று  நினைக்கிறேன். குறை கூற முடியாத பாடல்களுக்கு அதன் சிறப்பைக் கூறக் கற்றுக் கொள்ளுங்கள். கவிராயரென்றால் குறை மட்டும் கூறத் தெரிந்தவர் என்று அர்த்தமல்ல” என்றான்”.

“அவன் அப்படிச் சொன்னதும் சபை சிரிப்பால் அதிர்ந்தது. அதன் பின் நாரையூர் மன்னன் சபைக்குப் புலவர்களை அழைப்பதேயில்லை. அதனால் மற்றவர்களை அவமதிக்கும் போது அவமதிப்பவனும் அவமதிக்கப்படுவான் என்று உணர்ந்து கொள்ளுங்கள்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

*பல்லார் அவைநடுவண் பாற்பட்ட சான்றவர்*
*சொல்லார் ஒருவரையும் உள்ளூன்றப் - பல்லா*
*நிரைப்புறங் காத்த நெடியோனே யாயினும்*
*உரைத்தால் உரைபெறுதல் உண்டு.*

எவரையும் இகழ்ந்து பேசுதல் கூடாது. அப்படி இகழ்ந்து பேசினால் பேசுபவர் தீராத அவமானத்திற்குள்ளாவர். **‘உரைத்தால் உரைபெறுதல் உண்டு’** என்பது பழமொழி.

2 “அன்பானவர்களே, நீங்கள் ஒழுக்கமாக வாழாதிருக்கலாம், இல்லாவிட்டால் தவறுகள் பலவும் செய்பவராக இருக்கலாம். ஆனால் ஒருவனைப் பற்றி அதுவும் உங்களோடு நெருங்கிப் பழகும் நண்பர்களைப் பற்றி மற்றவர்களிடம் குறைகூறாமல் இருங்கள். கேட்பவர்கள் நீங்கள் சொன்னவற்றைத்தவறாகப் புரிந்து கொள்வார்கள். அதை விடப் பலரது செவிக்கும் அது எட்டும் போது கதைகள் பலவாக மாறி விடும். இழிவான கனவைக் கண்டவர்கள் பிறருக்கு அதை எடுத்துச் சொல்ல மாட்டார்கள். அது போல அறிவுடையோர் நண்பரை இழிவாகச் சொல்லக் கூடாது. மீறிச் சொன்னால் சொன்னவருக்கும் அவமானம் உண்டாகும்.”

“நல்லைக் குமரனும், சத்தியபாலனும் இணை பிரியாத நண்பர்கள். அவர்கள் ஊருக்கு நல்லவர்கள் போல நடந்து கொண்டு ஊரில் பல தீய செயல்களைச் செய்து வந்தனர். ஒரு பெண் விடயத்தில் இருவருக்கும் இடையே சிறு சச்சரவு தோன்றி அது பெரிதாக வளர்ந்து விட்டது”.

“நல்லைக்குமரன் அவசர புத்திக்காரன். கண்டபடி கதைப்பவன். அவன் ஒரு நாள் சிவன் கோயிலடியில் சொன்னான்; “ நான் தெரியாத்தனமாகச் சத்தியபாலனுடன் சேர்ந்து விட்டேன்.

அவன் தீயவன். தான் செய்யும் தீய செயல்களை என்னையும் செய்யச் சொல்லித் தூண்’டுகிறான். அதனால் தான் நான் அவனை விட்டுப் பிரிந்தேன். அவன் தான் சிவன் கோயில் உண்டியலைத் திருடியவன்” என்றான். ஊரவர்கள் அதை நம்பி நல்லைக் குமரனிடஞ்சென்று அதைப் பற்றிக் கேட்டனர்”.

“நல்லைக்குமரன் அதைப்பற்றி முதலில் சொல்ல விரும்பவில்லை. அதனால் ஊரவர்கள் நல்லைக் குமரன் தான் உண்டியலைத் திருடியிருப்பான் என்று நினைத்தனர். அத்துடன் ஊரில் நடைபெறும் களவுகள் யாவற்றையும் நல்லைக்குமரன் தான் செய்தான் என்றும் நம்பினர். நல்லைக்குமரனின் தீய செயல்களைப் பிடிக்காமையினால் தான் சத்தியபாலன் நல்லைக் குமரனை விட்டுப் பிரிந்தான் என்றும் நினைத்தனர்”.

“சில நாட்கள் செல்ல நல்லைக் குமரன் சொன்னான்; “நாம் இருவரும் சேர்ந்து தான் கோயில் உண்டியலைத் திருடினோம் பங்கு பிரிப்பதில் சச்சரவு உண்டானதால் தான் பிரிந்தோம். கோயில் உண்டியல் சத்தியபாலனிடம் தான் உள்ளது” என்றான். ஊரவர் அந்த உண்டியலைத் தேடியபோது அது சத்தியபாலனது வீட்டுக் கிணற்றில் இருந்தது. உண்மையில் நல்லைக்குமரன் திருடுவதால் தான் சத்தியபாலன் அவனைவிட்டுப் பிரிந்தான். பின் கோயில் உண்டியலைத் தருணம் பார்த்துத் திருடிச்சென்று சத்தியபாலனின் வீட்டுக் கிணற்றுள்ப் போட்டு விட்டான்.”

“அதனால் அன்பானவர்களே, தீயவர்களுடன் சேராதீர்கள், சேர்ந்தால் விலகி  விடுங்கள். அவனைப் பற்றிக் குறை கூறினால் உங்களுக்குத் தான் அவமானம்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

*கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரைப்*
*பழித்துப் பலர் நடுவண் சொல்லாடார் - என்கொல்?*
*விழித்தலரும் நெய்தல் துறைவா! உரையார்*
*இழித்தக்க காணிற் கனா.*

நண்பராக இருந்தவரைப் பற்றிப் பழி கூறித் தூற்றினால் அந்த இழிவு தூற்றுபவரையும் வந்தடையும். ‘**உரையார் இழித்தக்க காணிற் கனா**’ என்பது பழமொழி.

3 “அன்பானவர்களே, உலகில் இல்லாத பொருளுக்குப் பெயர் இருக்க மாட்டாது,  அது போல முடிந்த  செயலுக்கு முயற்சி தேவையில்லை. செய்யத் தொடங்கி முடிவுறாமல் கைவிடப்பட்ட செயலுக்குப் பெருக்கமும் இல்லை, வருமானமும் இல்லை. நட்டம் தான் உண்டாகும். குற்றமற ஒரு செயலைச் செய்து  முடிப்பது தான் பெருமையானது. நல்ல செயல்களைக் காலம் தாழ்த்தாது  எவ்வளவு விரைவாகச் செய்து முடிக் கமுடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்து முடித்து விடல் வேண்டும். தொடங்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட தொழில், தீர்க்காத பகை, அணைக்காத நெருப்பு இம் மூன்றும் எப்பொழுதும் தீமையையே தரும். அதனால் ஒரு செயலைச் செய்யு முன் நன்கு ஆராய்ந்து  அதை முடிக்கக் கூடிய

பொருளையும் கருவிகளையும் தேடி விரைந்து செயற்பட்டு அச் செயலை முடித்தல் வேண்டும்".

"முடிவெடுத்த பின்பு கால தாமதஞ் செய்தால், அத்தொழில் கைவிடப்பட்டதாகவே இருக்கும். எந்தச் செயலையும் குறைபாடு இல்லாமல் செய்து முடித்தல் வேண்டும்".

'வேலூரின் எல்லைப் புறத்தில் நாவலடி என்றொரு கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்தில் நல்ல தண்ணீர்க் கிணறு இல்லாமையால் ஊரவர்கள் நெடுந்தூரஞ் சென்று நல்ல நீரை எடுத்து வந்தனர். அந்தக் கிராமத்திற்கு நல்ல தண்ணீரைப் பெற்றுக் கொடுக்க ஒரு பெரியவர் விரும்பினார். அவர் நீரியல் ஆராய்ச்சியாளரை அழைத்து வந்து அந்தக் கிராமத்தில் நல்ல நீர் ஊற்று இருக்குமிடத்தைப் பரிசோதித்து அறிந்து கொண்டார். அந்தக் கிராமத்தவர்கள்களை அழைத்த அவர் குறிப்பிட்டஇடத்தில் கிணறு தோண்டுமாறு கேட்டார். அதற்குக் கூலியும் தருவதாகச் சொன்னார். கிணறு வெட்டுவோர் அதற்குச் சம்மதம் தெரிவித்தனர். அவர்கள் அயலூரில் இரண்டு கிணறுகளை வெட்ட வேண்டுமென்று கூறினர். அதனால் காலம் சென்றது. பின் அவர்கள் வந்து ஐந்து தினங்கள் வேலை செய்தனர். அதன் பின் அயலூரில் உள்ள ஒருவன் தற்பொழுது பெறும் கூலியை விடக் கூடுதலான கூலி தருவதாகக் கூறித் தனக்கொரு கிணறு வெட்டித்தருமாறு கேட்டான். கிணறு வெட்டுவோர் ஊரில் வெட்டிய கிணற்றை விட்டு விட்டு அயலூருக்குச் சென்று விட்டனர். வெட்டிய கிணற்றுள் நீர் கசிந்து நின்றது. ஊரவர் மகிழ்வுடன் வருணனுக்குப் பொங்கிப் படைத்து விட்டு அந்த நீரைச்

சுவைத்துப் பார்த்தனர். மிகவும் சுவையான நன் நீர் அது. அதனால் அவர்கள் மிகவும் மகிழ்ந்தனர்".

"தமக்கு இனி நீர்த்தட்டுப்பாடு இருக்காதென்று நினைத்தனர். அதன் பின் கிணறு வெட்டுவோர் இன்னொரு கிணற்றைத் தோண்ட ஆரம்பித்தனர். திடீரென்று மழை பெய்ய ஆரம்பித்தது. கிணறு கட்டாததால் இடிந்து விழுந்தது. அதற்குள் நீர் நிரம்பி நின்றது. அதை அறியாது சென்ற மக்களும் கால்நடைகளும் அதில் விழுந்து இறந்தன. கிணறு வெட்டித் தருவதாக ஒப்புக் கொண்ட பெரியவர் விபத்தொன்றில் சிக்கி மரணமடைந்து விட்டார். அதனால் பலவருடங்கள் சென்றும் அக்கிணற்றின் வேலை பூர்த்தியாகவில்லை. அதனால் அந்த ஊர் மக்கள் அயலூருக்குச் சென்றே இப்பொழுதும் நீர் பெற்று வருகின்றனர்."

"அதனால் அன்பானவர்களே, எந்தச் செயலையும் குறைபாடில்லாமல் செய்து முடிக்க வேண்டும். அத்துடன் எமது வேலைக்குத் தான் நாம் முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். பெரியவர் பணம் தருவதாக ஒப்புக் கொண்ட உடனேயே வல்லவர்களாயிருந்தால் கிணற்றை வெட்டி முடித்திருப்பார்கள். தமது சொந்தத் தேவையை விடக்கூலி தான் முக்கியமென நினைத்ததால் தான் தாமதம் உண்டானது".

"காலம், நேரம், பொருள் யாவும் யாருக்காவும் காத்திருக்க மாட்டாது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும். சந்தர்ப்ப

சூழ்நிலைகள் எப்போதும் எம்மைத் தேடி வராது. அது தேடி வந்த வேளை அதைச் சரியாகப் பயன்படுத்துதல் வேண்டும். இப்போது அந்த முடிவுறாத கிணற்றால் ஊரவர்களுக்குப் பெரும் பாதிப்பு உண்டானது. அதனால் அதை ஊரவர்கள்மூடி விட்டார்கள்".

"ஆகவே அன்பானவர்களே, எந்தச் செயலையும் குறைபாடடில்லாமல் முழுமையாகச் செய்து முடியுங்கள்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*முடிந்ததற்கு இல்லை முயற்சி ; முடியாது*
*ஒடிந்ததற்கு இல்லை பெருக்கம்; வடிந்தற*
*வல்லதற்கு இல்லை வருத்தம்; உலகினுள்*
*இல்லதற்கு இல்லை பெயர்*

எந்தச் செயலையும் குறைபாடில்லாமல் செய்து முடிக்க வேண்டும். குறையில் விட்டால் தீமையே உண்டாகும். '**உலகினுள் இல்லதற்கு இல்லை பெயர்**' என்பது பழமொழி.

4 "அன்பானவர்களே, அதிகமாக ஆசைப்படாதீர்கள். உங்கள் உழைப்புக்கேற்றளவு ஆசைப்படுங்கள். அளவுக்கு மீறிய ஆசைகளால் துன்பங்கள் தான் உண்டாகும். அளவுக்கதிகமான செல்வத்தை அடைய வேண்டும் என்று நினைத்து பெருஞ்செல்வந்தனையோ அல்லது அரசனையோ அடைவோர் அவர்களுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளத் தவறின் தாம் நினைத்ததை அவர்கள் அடைய மாட்டார்கள்".

“நாட்டை ஆளும் அரசனுடைய நட்புத் தானே வந்து சேர்ந்தாலும் கூட அறிவிலிகள், பேராசை மிகுந்தவர்கள். ஒரு போதும் சிறந்த பயனை அடைய மாட்டார்கள். இத்தகையவர்கள் உலக்கையின் மேலே இருக்க முயலும் காகத்தைப் போன்றவர்களாவர். நெல்லை உரலிலிட்டு உலக்கையால் ஒரு பெண் குற்றும் போது காகமானது அந்த உலக்கையின் மேலிருந்து உரலில் உள்ள நெல்லைத் தின்ன நினைப்பதைப் போன்றது தான் இவர்களது செயல்”

“வேலூரில் கண்ணபிரான் என்றொரு பெரும் வணிகன் இருந்தான். அவனிடம் பல கப்பல்கள் இருந்தன. அவன் எப்பொழுதும் ஆடம்பரமான உடைகளை அணிவான்; பெறுமதியான அணிகலன்களை அணிவான்; உயர்ந்த ரக வண்டிகளில் உலாவுவான். இதைக் கண்ட உலகநாதன் என்ற ஒருவன் அந்த வணிகனோடு சேர்ந்தால் தானும் பணக்காரனாகலாம் என்று எண்ணி அவனது வீட்டுக்குச் சென்றான். வணிகன் உலகநாதனுடன் ஒன்றாகப் படித்தவன். அதனால் அவன் உலகநாதனை வரவேற்று ஆசனத்தில் இருத்தி அவன் வந்த காரணம் என்னவென்று கேட்டான். உலகநாதன் தனது மனதில் இருந்ததைச் சொன்னான். அதைக் கேட்டு மகிழ்ந்த கண்ணபிரான் தனது கப்பலில் ஒன்றை அவனிடம் கொடுத்து அதைக் கொண்டு முன்னேறச் சொன்னான்”.

“உலகநாதனுக்குக் கப்பலைப் பற்றி எதுவும் தெரியாது. அதனால் தனக்குக் கப்பல் வேண்டாம் என்றான். அதனால் கண்ணபிரான் ஒரு வியாபார நிலையம் அமைத்துக் கொடுத்தான். அதையும் அவனால் நிர்வகிக் முடியவில்லை அதன் பின் ஒருவாகனம் வாங்கிக் கொடுத்தான். அதனை வைத்தும் அவனால் உழைக்க முடியவில்லை அதனால் அவனைத்தனது வியாபார நிலையத்தில் ஒரு சிப்பந்தியாகக் கடமைசெய்யுமாறு கூறினான். அதை விரும்பாத உலகநாதன் வீட்டுக்குச் சென்றான்”.

“அன்பானவர்களே, முதலில் உங்கள் தகுதியை அறியுங்கள். அதன் பின்பே பொருள் தேட முனையுங்கள். அறிவில்லாதவர்கள் அரசனோடு சேர்ந்திருந்தாலும் முன்னேற மாட்டார்கள். உலக்கையில் இருந்து உரலில் உள்ளதை உண்ண முயலும் காகத்தைப் போலத்தான் இவர்களது எண்ணமும் இருக்கும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நிலத்தின் மிகையாம் பெருஞ்செல்வம் வேண்டி***
***நலத்தகு வேந்தருள் நல்லாரைச் சார்ந்து***
***நிலத்து நிலைகொள்ளாக் காலரே காணின்***
***‘உலக்கைமேல் காக்கை’ என்பார்.***

உலக்கையால் குற்றும் போது அதன் மேல் காகம் உட்கார மாட்டாது. உரலில் உள்ளதை உண்ணவும் முடியாது. இது போல அறிவிலிகளின் எண்ணம் பயனற்றுப் போகும். **‘உலக்கை மேற் காக்கை’** என்பது பழமொழி.

5 “அன்பானவர்களே, பகைவர்களைப் பணிந்து போவதன் மூலம் வெற்றி கொள்ள முடியாது. நாம் நல்லவற்றைச் செய்தாலும் அவர்கள் நாம் செய்பவற்றை ஐயுற்று கோபம் கொள்வர். உவர் நிலத்திற்கு எவ்வளவு தான் நல்ல நீரைப் பாய்ச்சினாலும் அதன் உவர்த்தன்மை போகாது. தொடர்ந்தும் உவர்த்தன்மை உடையதாகவே அந்நிலம் இருக்கும். அது போலத் தீயவர்களுக்கு ஒருவர் எவ்வளவு தான் உதவிகள் செய்தாலும், அவர்கள் அவ் உதவிகளை ஒருபொருட்டாக மதிக்க மாட்டார்கள். தம்மிடம் இருந்து எதையோ பெறவோ, அல்லது தமக்குப் பயந்து தான் அவர்கள் நன்மை செய்வதாக நினைப்பார்கள். ஆகவே தீயவர்கள் என்றுதெரிந்து கொண்ட பின் எந்த உதவிகளையுஞ் செய்யாதீர்கள். அத்துடன் பணிந்தும் போகாதீர்கள். இப்படியானவர்கள் கன்னத்தைக் குத்தி உடைக்கின்ற முரடர்களுக்குத்தான் பயப்படுவார்கள். அவர்களைத் தான் மதிப்பார்கள்.”

“நாவலூரிலே கண்ணப்பன் என்றொரு நல்ல மனிதர் இருந்தார். அவர் ஊரவர்க் கெல்லாம் உதவி செய்வார். நடராசா அந்த ஊரில் வாழும் ஒரு கொடிய குடிகாரன். அவனது மனைவி லட்சுமி ஊரில் உள்ள பெரிய மனிதர்களின் வீடுகளுக்குச் சென்று கூலி வேலை செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். அவள் உழைப்பதையும் நடராசா பறித்துச் சென்று விடுவான்”.

“கண்ணப்பன், நடராசாவின் அயல் வீட்டவர். அதனால் நடராசாவின் பிள்ளைகள் அங்குதான் உண்டு வளர்ந்தனர்.

கண்ணப்பன், நடராசாவின் பிள்ளைகள் கற்பதற்கும் உதவி செய்வார். நடராசாவுக்கும் புத்திமதிகள் சொல்வார். அதனால் நடராசா அவரிடம் பிள்ளைகளைச் சாட்டிப் பணம் பெறுவான். அவர் பணம் கொடுக்காவிட்டால் செல்ல மாட்டான். சிலசமயம் அவரின் வீட்டில் திருடுவான். அவர் கேட்டால் சண்டைக்குப் போவான். கண்ணப்பன் பயந்தவர். ஒழுக்க சீலர். அதனால் நடராசாவுடன் எதுவும் கதைக்க மாட்டார். அதைச் சாட்டாக வைத்து நடராசா தனது பிள்ளைகளைக் கொண்டு வேலை செய்விக்கிறார் என்று கூறிப் பணம் வாங்குவான். தனது மனைவியுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்று சொல்வான். அதற்குப் பயந்து கண்ணப்பன் நடராசா கேட்பதையெல்லாம் கொடுப்பார்.”

“இதை அறிந்த கண்ணப்பனின் சகோதரரான துரைசிங்கம் என்பவன் நடராசாவைப் பிடித்து மரத்துடன் கட்டி வைத்து அடித்தான். அதனால் பயந்த நடராசா அதன் பின் கண்ணப்பனை வெருட்டிப் பணம் வாங்குதை விட்டு விட்டான்; இனிக் கண்ணப்பனின் வீட்டுக்குப் போனால் கொலை செய்வன்” என்று மிரட்டினான். அதன் பின் நடராசா கண்ணப்பனோடு பிரச்சினைக்குப் போவதில்லை”.

“அதனால் அன்பானவர்களே, தீயவர்களுக்கு எவ்வளவு தான் உதவிகள் செய்தாலும் அவர்கள் அதை உடனே மறந்து தீமைகள் தான் செய்வார்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தமர் அல்லவரைத் தலையளித்தக் கண்ணும்***
***அமராக் குறிப்பவர்க்கு ஆகாதே தோன்றும்***
***சுவர்நிலம் செய்தமையைக் கூட்டியக் கண்ணும்***
***உவர்நிலம் உட்கொதிக்கு மாறு.***

தீயவர்களுக்கு நன்மை செய்வதன் மூலம் அவர்களை நல்லவராக்க முடியாது. '**உவர்நிலம் உட்கொதிக்குமாறு**' என்பது பழமொழி.

6 "அன்பானவர்களே, செய்த உதவிகளை நன்றியோடு நினைத்துப் பாராத தீயவர்களுக்குக் கொடுத்த கொடையானது, அக்கினியில் இட்ட வைக்கோலைப் போலப் பயனற்றதாகும். தீயவர்கள் கொடுக்கக் கொடுக்க வாங்குவார்களே தவிர நன்மை சொல்ல மாட்டார்கள். நன்மை சொல்லாவிட்டாலும் பரவாயில்லை தீமையாவது செய்யாமல் இருந்தால் பரவாயில்லை. அவர்கள் குறைகூறுவார்கள் ; தீமை செய்வார்கள் ; புறங்கூறுவார்கள்".

"கண்ணப்பன் ஊர்ச் சிவன் கோயில் தலைவராக இருந்தார். சிவன் கோயிலில் ஏராளமான நகைகள் உள்ளன. சிவன் கோயிலின் திறப்பு கண்ணப்பனிடம் தான் இருந்தது. நடராசா கண்ணப்பனின் வீட்டுக்கு அடிக்கடி செல்பவன். அதனால் அங்கு நடைபெறும் நிகழ்வுகள் யாவும் அவனுக்குத் தெரியும். கண்ணப்பன் சிவன் கோயில் திறப்பை அறைக்குள் வைப்பார். கோயிலில் யாரும் இதுவரை திருடியதில்லை. இனியும் திருட மாட்டார்கள் என்று கண்ணப்பன் நம்பியிருந்தார்".

“ஒரு நாள் இரவு எட்டு மணி போல நடராசா கண்ணப்பனின் வீட்டின் பின்புறமாக வந்து அறையில் இருந்த திறப்பை எடுத்துச் சென்று  சிவன் கோயில் கதவைத் திறந்து சில நகைகளை எடுத்து விட்டுக் கோயிலைப் பூட்டித் திறப்பைக் கொண்டு வந்து கண்ணப்பன் வைத்த இடத்தில் வைத்து விட்டான்.”

“மறுநாள்  நடராசாவின் மகன் பாடசாலையில் விபத்துக்கு ள்ளானான். கண்ணப்பன் தான் அவனை வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றார். அவனுக்கான செலவுகள் முழுவதையும் கொடுத்தார். சில நாட்கள் செல்ல நடராசாவின் மகளுக்குத் திருமணம் செய்து வைத்தார்.”

“மூன்று மாதங்களின் பின் சிவன் கோயிலில் திருவிழா ஆரம்பமானது. கண்ணப்பன் கோயில் நகைப்பெட்டியைத் திறந்து பார்த்தபோது, அதில் பல நகைகளைக் காணவில்லை. நடராசா பல முறை திறப்பை எடுத்து வந்து திருடியிருந்தான். கண்ணப்பன் திகைத்துப்போனார். ஊரவர்கள் கண்ணப்பனைக் குறை சொல்லவில்லை. எப்படி இந்தத் திருட்டு நடைபெற்றது என்று ஆராய்ந்து திருடியவனைக் காவல் துறையில் பிடித்து ஒப்படைக்க வேண்டும் என்றனர். “நடராசா, கண்ணப்பன் தான் திருடியிருப்பார்’ என்று அடித்துச் சொன்னான். அவனது நண்பர்களும் அதையே சொன்னனர”.

“அப்பொழுது துரைசிங்கம் ஒரு பெரிய கத்தியுடன் வந்து சொன்னான் ; “தினமும் அண்ணாவின் வீட்டுக்குச் செல்லும் நடராசா, அண்ணாவுக்குத் தெரியாது கோயிலின் திறப்பை எடுத்துத் திருடி வந்தான். திருடிய நகையை நாகராசாவின் துணையோடு பட்டணத்தில் விற்றான்”. என்று கூறியவாறு கத்தியை ஓங்கிய போது நடராசா பயந்து விட்டான்; “என்னை ஒன்றும் செய்யாதீர்கள். நான் தான் திருடினேன்’ என்றான்”.

“மக்கள் ஒன்று திரண்டு அவனைத் தாக்கினர். அப்போது கண்ணபிரான் அவனைத் தாக்க வேண்டாம் என்று கூறினார்”.

“அங்கிருந்த ஒருவர் சொன்னான் ; “கீழ் மக்களுக்கு உதவி செய்தால் அவர்கள் உதவி செய்பவர்களைப் பலவீனர்கள் என்று கருதி அவர்களுக்குத் துன்பங்கள் தான் செய்வார்கள். அவர்களுக்குச் செய்யும் உதவிகள் ஆற்றில் கரைத்தபுளிக்குச் சமனாகும். அவன் திருடன் என்று தெரிந்த பின்பும் இரக்கம் காட்டும் உங்களை நாம் எப்படிப் பெரிய மனிதர் என்று கூறுவது” என்றான்”.

“ஆகவே அன்பானவர்களே, கீழ் மக்கள் தமக்குத் துன்பம் நேரும் போது தம்மைப் பிறருக்கு விற்று விடும் தன்மையானவர்கள். அதனால் அவர்களுக்குச் செய்யும் உதவிகள் இழந்து போன பொருட்களாகவே கருதப்படும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே தான் பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்றொரு முதுமொழியைப் பெரியவர்கள் கூறியுள்ளனர். அதனால்

எச்சரிக்கையாக இருங்கள். இல்லாவிட்டால் நீங்கள் செய்யும் உதவிகளால் நீங்களே துன்பப்பட வேண்டி வரும்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

*'தமராலும் தம்மாலும் உற்றால் ஒன்று ஆற்றி*
*நிகராகிச் சென்றாரும் அல்லா - இவர் திரை*
*நீத்தம் நீர்த் தண்சேர்ப்ப! செய்தது, 'உவவாதார்க்கு*
*ஈத்ததை எல்லாம் இழவு'*

உதவியின் பயனை அனுபவித்துக் கொண்டு உதவியவருக்குத் துரோகஞ் செய்யும் தீயவர்களுக்கு உதவக் கூடாது. '**உவவாதார்க்கு ஈந்ததை எல்லாம் இழிவு**' என்பது பழமொழி.

7 "அன்பானவர்களே, அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். ஒருவர் சொல்லாமலே அவரின் முகத்தைப் பார்த்து அவர் என்ன நினைக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடியும். ஒருவனது கண்களையும் முகத்தையும் பார்த்து அவன் என்ன நினைக்கிறான் என்று அறிந்து கொள்ள முடியாதவர்களுக்குக் கண்கள் இருப்பதால் எந்தப் பயனும் உண்டாகாது. கண் பார்வையின் வேறுபாடுகளைக் கொண்டு அவற்றின் பொருள் என்னவென்று அறிந்து கொள்ளல் வேண்டும். கண்கள் தான் எண்ணங்களின் வாசல். முகம் மனதின் திறவு கோல். ஒழுக்கமுள்ளவனின் கண்களும் முகமும் சாந்தமாக இருக்கும். அதில் கருணை இருக்கும் ; பூரிப்பிருக்கும் ; கவர்ச்சியிருக்கும் ; வசீகரமிருக்கும். தீயவர்களின் கண்களில் கலவரமிருக்கும் ;

மிரட்சியிருக்கும் ; பயமிருக்கும் ; சினமிருக்கும் ; குரோதமிருக்கும். இவற்றைக் கொண்டு இலகுவாக எதையும் புரிந்து கொள்ளலாம்".

"ஒரு திருமண வீட்டில் ஒரு திருட்டு நடைபெற்று விட்டது, வந்தவர்கள் எல்லோரும் இரத்த உறவினர்கள் ; நெருங்கிய நண்பர்கள். யாரைச் சந்தேகிப்பது. சந்தேகித்தால் திருமணம் குழம்பலாம். அல்லது அவர்களது வாழ்க்கை பாதிக்கப்படலாம். அதனால் திருட்டைக் கொடுத்தவர் அதைப் பெரிது படுத்தவில்லை. பெண்ணின் வீட்டில் திருமணம் நடைபெற்றதால் பெண்ணின் தந்தை அதைப் பெரும் அவமானமாகக் கருதினார்".

"சபை நடக்கும் போது பெண்ணின் தந்தை வந்தவர்களுக்கு உணவு பரிமாறினார். அப்பொழுது சபையில் இருந்தவர்களின் முகத்தையும், கண்களையும் பார்த்துக் கொண்டே வந்தார். ஒருவனது கண்கள் மிரண்டிருந்தன. அவருக்கு அவனின் மீது சந்தேகம் வந்தது. அவனைத் தனியே அழைத்து விபரத்தைச் சொன்னார். அவன் முதலில் மறுத்தான். பின் பயந்தபடி; 'நான் தான் எடுத்தேன். என்னைக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள்" என்றான்".

பெண்ணின் தந்தை திருடப்பட்ட சங்கிலியை அவனிடமிருந்து வாங்கி அதை இழந்த பெண்ணிடம் கொடுத்து விட்டுச் சொன்னார் ; பந்தலுக்குள் இருந்து எடுத்தேன்' என்று அதற்கு அந்தப் பெண் இரகசியமாகச் சொன்னாள் ; "இது எனது

சகோதரனின் வேலை. அவன் தான் எனது மகனைத் தூக்கி வைத்திருந்தான். இங்கு கதைத்தால் திருமணம்குழம்பி விடும். வீட்டில் சென்று கதைப்போம் என்றிருந்தேன்" என்றாள்".

அன்பானவர்களே, பலர் குறிப்பால் உணர்வார்கள். சிலர் கண்களைக் கொண்டும், முகத்தைக் கொண்டும் உணர்வார்கள். வெள்ளம் வருகின்றபோது அது வருமிடமெங்கும் ஈரமாவது போலக் கள்ளமான எண்ணமுள்ளவர்களை அவர்களது முகம் காட்டிக் கொடுத்து விடும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வெள்ளம் வருங்காலை ஈரம்பட் டஃதேபோல்***
***கள்ளம் உடையாரைக் கண்டே அறியலாம்***
***ஒள்அமர் கண்ணாய்! ஒளிப்பினும், உள்ளம்***
***படர்ந்ததே கூறும் முகம்.***

உள்ளத்தில் உள்ளதை முகம் காட்டிக் கொடுக்கும். ஆதலால் தூய்மையுடையவராக வாழ வேண்டும். **'உள்ளம் படர்ந்ததே கூறும் முகம்'** என்பது பழமொழி.

8 "அன்பானவர்களே, பெருமைக்குரிய குணம் கொண்டவர்கள் சிறுமதியாளர்களுடன் சேருதல் கூடாது. இழிகுணங் கொண்டோர் தேரின் உள்ளே இருந்து கொண்டு அதனுடைய அச்சாணியைக் கழற்றி எறிந்து விடும் தன்மை வாய்ந்தவர்கள். அதனால் தேருக்கு மட்டுமல்ல தமக்கும் ஆபத்து நேரும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவே மாட்டார்கள். இவர்களைக் கொண்டு ஒரு செயலைச் செய்விக்க

விரும்புகின்றவர்கள், அச்செயல் முடியும் வரை அவருடன் முரண்படக்கூடாது. இப்படியானவர்களைக் கொண்டு ஒரு செயலைச் செய்விக்கக் கூடாது. தப்பித்தவறி செய்ய நேர்ந்தால் மிகவும் அவதானமாக இருந்தல் வேண்டும். விளையாட்டாகக் கூட அவர்கள் விரும்பாதவற்றைச் செய்தல் கூடாது. தவறிச் செய்தால் தேரில் பிரயாணம் செய்பவன் அதனுடன் கோபித்துக் கொண்டு அதன் அச்சாணியைக் கழற்றியது போலாகிவிடும்".

"மார்க்கண்டு நாவலடியில் வாழும் ஒருமுரடன். அவனை ஆபத்தென்றால் கூட யாரும் அழைப்பதில்லை. மார்க்கண்டுவிற்கு ஐந்து பிள்ளைகள். அவனை ஊரில் யாரும் வேலைக்குக் கூப்பிடாததால் அவன் வருமானமின்றி இருந்தான். அவனது மனைவி கார்திகாயினி தோட்டங்களில் கூலி வேலை செய்து பிழைத்து வந்தாள். அவள் வேலை செய்யும் இடங்களுக்கும் மார்க்கண்டு சென்று சட்டம் கதைப்பான் ; கூலிகாணாது என்பான் ; இதனால் அவளையும் யாரும் வேலைக்கு அழைப்பதில்லை"

கதிரேசன் அந்த ஊரில் வாழும் மிகவும் நல்ல மனிதர். ஒழுக்கம் மிக்கவர். இரக்க சுபாவம் உள்ளவர்கள். அவர் மார்க்கண்டு மீது இரக்கப்பட்டு அவனுக்கும் மனைவிக்கும் தொழில் கொடுப்பார். என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என்று முன்பே அவனுக்குக்கூறிவிடுவார். அதன்படி அவன் செய்வான். இடையில் அவர் எதுவும் சொல்ல மாட்டார்"

‘ஒரு முறை வீட்டின் அருகே நின்ற தென்னை மரம் ஒன்று பட்டு விட்டது. அதைத் தறிக்கும் படி மார்க்கண்டைக் கதிரேன் கேட்டுக் கொண்டார். மார்க்கண்டு மரத்தில் உச்சியில்  ஏறி நீண்ட கயிற்றைக் கட்டி விட்டு இறங்கி வந்து அக்கயிற்றை இன்னொரு தென்னை மரத்தில் கட்டி விட்டு மரத்தை அடியில் தறித்தான்.”

“எங்கோ சென்றிருந்த கதிரேசன் வந்து பார்த்தார். மரம் காற்றிற்கு ஆடிக்கொண்டிருந்தது. அதனால் அது வீட்டின் மீது விழுந்து விடுமெனக் கதிரேசன் பயந்தார். மார்க்கண்டுவை அழைத்துச் சொன்னார் ; “சிறு சிறு துண்டுகளாகத் தறித்திருக்கலாம். அல்லது நாலைந்து பேரைக்கூட்டி வந்து கயிற்றைப் பிடிக்கச் சொல்லியிருக்கலாம்” என்று சற்றுக் கடுமையாகச் சொன்னார் ;”

அது மார்க்கண்டுவுக்குப் பிடிக்கவில்லை. அவன் சொன்னான் ; “ நான் பல இடங்களில் மரங்கள் தறித்துள்ளேன். எவ்வாறு தறிப்பதென்று எனக்குத் தெரியும்.”

“அவனது பேச்சுக் கதிரேசனுக்குக் கோபத்தை வரவழைத்தது; “இதனால் தான் உனக்கு யாரும் வேலை தருவதில்லை. தற்செயலாக மரம் வீட்டின் மீது சரிந்தால் இருபத்தைந்து இலட்ச ரூபாய்வீடு பாழாகி விடும். உனக்குச் சொன்னால் பிடிக்காது. சரியாகச் செய்யவும் தெரியாது” என்றார்”

“அதைக்கேட்ட மார்க்கண்டு சொன்னான்; “ எனக்குத் தெரியாதென்றால் தெரிந்தவர்களைக் கூட்டி வந்து தறியுங்கள்” என்று கூறிவிட்டுச் சென்று விட்டான். கதிரேசன் ஊரில் பெரிய மனிதர் ; அதனால் பலர் வந்து அந்த மரத்தை பாதுகாப்பாகத் தறித்தனர்.”

“ஆகையால் அன்பானவர்களே, தீயவர்களைக் கொண்டு ஒரு செயலைச் செய்ய விரும்பும் அறிவுடையவர்கள், தம் செயல் முடிவுறும் வரை அவர்களுக்குக் கோப மூட்டும் வகையில் எதையுஞ் சொல்லக்கூடாது. தவறிச் சொன்னால் பெரும் தீமை உண்டாகும். அதனால் தீயோரைப் பார்ப்பதும் தீது என்று நினைத்து வாழுங்கள்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***சொல்லெதிர்ந்து தம்மை வழிபட்டு ஒழுகலராய்***
***கல்லெறிந்தாற் போலக் கலாந்தலைக் கொள்வாரை***
***இல்லிருந் தாற்ற முனிவித்தல், உள்ளிருந்து***
***அச்சாணி தாம் கழிக்கு மாறு.***

தீயோருடன் சேரக்கூடாது. அவர்களைக் கொண்டு கருமமாற்றினால் அவர்கள் கோபப்படும்படியாக எதுவுஞ் சொல்லக்கூடாது. **‘ உள்ளிருந்து அச்சாணி தாம் கழிக்குமாறு’** என்பது பழமொழி.

9 “அன்பானவர்களே, விதிப்படி தான் யாவும் நடைபெறும். ஒருவனுக்குச் செல்வம் வருவதானாலும், அவனுக்குத் துன்பம் வருவதானாலும் ஊழ்வினைப்படி அது வந்து அவனைச் சேரும்.

கழுமலம் என்ற ஊரின் பட்டத்து யானை அந்நாட்டிற்கு அரசன் தேவை என அறிந்து கருவூர் சென்று அங்கிருந்த சிறப்பு மிக்க கரிகால் வளவனைத் தூக்கி வந்து அரியாசனத்தில் இருத்தியது. அதனால் அவன் சோழ தேசத்திற்கு அரசனானான். எனவே வருவது முயற்சிக்காவிட்டாலும் வந்து சேரும்".

"பொன்னம்பலம் மிகவும் வறியவர். எனினும் ஒழுக்கமானவர். இன்னொருவரின் பொருட்களின் மீது ஆசை கொள்ளாதவர். அவருக்கு நான்கு பெண்பிள்ளைகள். வயது வந்தும் அவர்கள் திருமணமாகாது இருந்தனர்".

"பொன்னம்பலத்திற்குத் தெய்வநம்பிக்கை அதிகம். அதைவிட ஒவ்வொருவரும் செய்யும் செயல்கள் தான் ஊழ்வினை என்ற பெயரில் வந்து மனிதர்களை வருத்துகின்றது என்பதை நம்புபவர். அதனால் சந்தர்ப்ப மேற்படும் போதெல்லாம் ஏழைகளுக்கும், அயலவர்கள், நண்பர்களுக்கும் உதவுவார். பலனை எதிர்பார்க்க மாட்டார்."

"அவரது மனைவி தனது நான்கு பெண் பிள்ளைகளுக்கும் உரிய வயதாகியும் திருமணம் நடக்கவில்லை என்று வருந்தும் போது கூறுவார் ; "எல்லாம் நடக்கும் நேரம் வந்தால் தானாகவே நடக்கும். அதுவரை நாம் பொறுத்துத்தான் ஆகவேண்டும். நாம் விரும்பினாலென்ன, விரும்பாமல் விட்டாலென்ன நடப்பது தான் நடக்கும். அது வரை பொறுத்திருக்கத்தான் வேண்டும் என்பார்."

"கோடி கோடியாகப் பொருளிருந்தாலும் அதை அனுபவிக்க விதி இருக்க வேண்டும். கோடீஸ்வரன் அனுபவிப்பதை விட ஒரு சதமும் இல்லாதவன் அனுபவிப்பான் என்று நினைப்பவர்."

'ஊரவர்களும் இனத்தவர்களும், நண்பர்களும் பொன்னம்பலத்தைக் காணும் வேளைகளில் ஒரு பெண்ணுக்காவது திருமணத்தைச் செய்து வை என்றனர்".

"என்னிடம் பொருள் இல்லை. பொருளுள்ள மயில்வாகனம் தன் ஒரு மகளுக்குத் திருமணஞ் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறான். பொன், பொருள், காணி, பூமியிருந்தால் போதாது விதியும் வரவேண்டும்" என்பார".

"ஒரு நாள் அவர் தனது வளவில் மாங்கன்று நடக் குழி தோண்டினார். அக்குழிக்குள் பெருவாரியான தங்க நகைகள் இருந்தன. அது அவரது தகப்பனின் தகப்பன் யாருக்கும் தெரியாது புதைத்து வைத்த நகை. அடிக்கடி பொன்னம்பலத்தின் தகப்பன் சொல்வார்; "எனது தந்தையார் ஒரு குடம் முட்டத் தங்க நகைகள் வைத்திருந்தவர். என்ன செய்தாரே தெரியவில்லை" என்று அந்த நகைகள் கிடைத்த பின்பும் பொன்னம்பலத்தின் பிள்ளைகளுக்குத் திருமணம் பேசி வரவில்லை. அவரது மனைவி அதனால் கவலைப்பட்டுக் கொண்டேயிருந்தாள்."

"ஒரு நாள் ஒரு கல்யாணத் தரகன் பொன்னம்பலத்தின் வீடு தேடி வந்து சொன்னான்; "அண்ணா, காராளசிங்கம் தனது

நான்கு புத்திரர்களுக்கும் பெண்தேடுகிறார். அவர் பெரும் வணிகர். சீதனமாக எதையும் அவர் எதிர்பார்க்கவில்லை. நல்ல குடும்பங்களாகப் பார் என்றவர். நான் உங்களைப் பற்றிச் சொன்னேன். அவர் ஊரில் விசாரித்தவர். அவருக்கு விருப்பம். எப்போ பெண் பார்க்க வரலாம் என்று கேட்டவர்" என்றான். பொன்னம்பலத்தின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை".

"காராளசிங்கமும் நான்கு புத்திரர்களும் அவர்களது குடும்பமும் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு வந்து பெண் பார்த்தனர். அவர்களுக்குப் பெண்களைப் பிடித்து விட்டது. அடுத்த வாரம் அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றது. ஆகையால் ஒரு காரியம் நடைபெறவில்லையென்று துன்பப்படாதீர்கள். பழம் பழுத்ததும் மரத்திலிருந்து அது தானாக விழுவதைப் போல ஒரு செயல் நடக்கும் காலம் வந்ததும் நடக்கும். அதற்காக வருந்துவதோ , அழுவதோ கூடாது". என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கழுமலத்தில் யாத்த களிறும், கருவூர்***
***விழுமியோன் மேற்சென் றதனால் - விழுமிய***
***வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால***
***தீண்டா விடுதல் அரிது.***

ஊழ்வினைப்படி செயல்கள் நடந்தே தீரும். அதுவரை பொறுத்திருத்தல் வேண்டும். '**உறற்பால தீண்டா விடுதல் அரிது**' என்பது பழமொழி.

10 “அன்பானவர்களே, இன்பமும் துன்பமும் எல்லோருக்கும் பொதுவானவை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உயர்ந்தவர்கள், பெரியவர்கள், சான்றோர்கள், முனிவர்கள், என்றெல்லாம் ஊழ்வினை பாராது. எத்தனையோ அரசர்களுக்குத் துன்பங்கள் வந்தது. அரிச்சந்திரனுக்கு வந்த துன்பதைப் பற்றி உங்களுக்குத் தெரியும். வானவெளியிலே உலாவுகின்ற சந்திரனுக்குக் கூட இராகு கேதுகளாற் துன்பம் வந்தது. அது போல உலகில் உள்ள அனைவருக்கும் துன்பங்கள் வரும். அது ஏழை எளியவர்களுக்கு மட்டும் வருவதில்லை. உயர்ந்தவர்களுக்கும் வரும்”.

“வேலூரில் வாழ்ந்த கைலாயபிள்ளை பெரும் தனவந்தர். அவரிடம் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வேலை செய்து வந்தனர். அவர் கேட்டவர்களுக்கு எல்லாம் அள்ளி அள்ளிக் கொடுப்பார். கோயில் கள் கட்டுபவர் ; பாடசாலைகள் கட்டுவார் ; மடங்கள் கட்டுவார். அவர் கட்டிய பாடசாலைகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மடங்களில் பலர் தங்கியிருந்து மூன்று வேளையும் உணவு உண்கின்றனர்.”

“அவருக்கு ஒரே ஒரு மகன். திருமணமாகிப் பலவருட காலம் பிள்ளையில்லாமல் தவமிருந்து பெற்றவர். ஒரே ஒரு மகன் ஆகையால் அவர் செல்லம் கொடுத்து வளர்த்து வந்தார். அதனால் அவன் பெரிதாகப் படிக்கவில்லை. ஊரில் உள்ள இளைஞர்களோடு கூடித்திரிந்தான்”.

“தனது சொத்துக்களைப் பாதுகாத்தால் போதும் என்று நினைத்த கையாலயபிள்ளை, அவனுக்கு ஒரு திருமணம் செய்து வைத்தார். அவனுக்குத் திருமணமாகிப் பத்து வருடங்கள் கழித்தும் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் அவர் பெருந் துன்பத்துடனேயே வாழ்ந்து வந்தார். கடவுளுக்கு நேர்த்திக்கடன் வைத்தார். சோதிடர்களும், பெரியவர்களும் கூறியவற்றை விதிமுறை தவறாது செய்து வந்தார். இருப்பினும் அவரது மகனுக்குப் பிள்ளை பிறக்கவில்லை.”

“அதனால் அன்பானவர்களே, பெரியவர்கள், அறிஞர்கள், முனிவர்களெல்லாம் பெரிதாக ஆடம்பரமாகத் துன்பங்களின்றி வாழ்கிறார்கள் என்று நினைக்காதீர்கள். சான்றோரின் மனதிலும் அகற்ற முடியாத துன்பங்கள் பல இருந்து அவர்களை வருத்திக் கொண்டே இருக்கும். அதை அவர்கள் மற்றவர்களுக்குத் தெரியாது மறைத்து வாழ்வர். அதனால் துன்பங்கள் வரும்போது அதற்காகக் கலங்காதீர்கள். உங்களை விடப் பெரிய பெரிய துன்பங்கள் மற்றவர்களுக்கும் வரும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்***
***திங்களும் தீங்குறுதல் காண்டுமால் - பொங்கி***
***அறைப்பாய்அருவி அணிமலை நாட!***
***உறற்பால யார்க்கும் உறும்.***

உயர்வான சான்றோருக்கும் துன்பங்கள் வரும். ஒவ்வொருவரின் ஊழ்வினைப் பயனுக்கேற்ற இன்ப துன்பங்கள் வாழ்வில் வருவது

இயல்பு. ‘**உறற்பால யார்க்கும் உறும்**’ என்பது பழமொழி. ‘**வினை வீயாது பின்சென்று அடும்**’ என்றும் ஒரு முதுமொழி உண்டு.

11 “அன்பானவர்களே, இல்லாமைக் கொடுமைகள் பலவற்றினுள்ளும் அறிவு இல்லை என்னும் கொடுமையே பெருங்கொடுமையாகக் கருதப்படுகிறது. புல்லறிவென்பது ஒருவன் தன்னைத்தான் மிக்க அறிவுடையவன் என்று நினைத்துக் கொள்வதாகும். இதனால் அறிவில்லாதவர்கள் தமக்குத் தாமே செய்து கொள்ளும் துன்பம் அவர்கள் தம் பகைவர்களுக்குக் கூடச் செய்ய முடியாததாகும். அறிவில்லாதவர்களுக்குப் பகைவர்கள் தேவையில்லை. ஏனெனில் அவர்களே அவர்களுக்குப் பகையாவர்.”

“கட்டில்லாது அலைந்து திரிந்து மேய்ந்து கொழுத்த எருதைப் போல, அறிவில்லாதவர்களும் நன்மை தீமை பாராது செயல்களைச் செய்வார்கள். கட்டில்லாது அலைந்து திரியும் காளையானது ஊரில் உள்ள விளைநிலங்களை எல்லாம் நாசப்படுத்துவதைப் போல அறிவில்லாதவர்கள் தமது செயல்களால் தம் வாழ்வை அழித்துக் கொள்வர். அவர்கள் அறிவுள்ளவர்களின் பேச்சைக் கேட்கமாட்டார்கள்.”

“மணியூரில் மணியம் என்றொரு புல்லறிவாளன் இருந்தான். அவன் தனக்குத் தான் யாவும் தெரியும் என்று இறுமாந்திருந்தான். கல்யாணி என்றொரு மகள் அவனுக்கு

இருந்தாள். அவள் பேரழகி. அவளை ஊரில் உள்ள பெரும் தனவந்தன் ஒருவன் திருமணஞ் செய்ய விரும்பினான். இதை அறிந்த மணியம் சொன்னான் ; "எனது மகளைத் திருமணஞ் செய்யும் தகுதி இந்த ஊரில் யாருக்குமில்லை. அவர் பெரும் தனவந்தனாக இருக்கலாம். ஆனால் எனது குடும்பத்தில் திருமணஞ் செய்ய அவருக்குத் தகுதி இல்லை".

"மணியத்தின் சகோதரன் கந்தசாமி. அவன் மணியத்திடம் வந்து சொன்னான் ; "அண்ணை, தர்மலிங்கத்தின் குடும்பம் ஊரில் பிரபலமானது . இந்த நாட்டில் அவரைத் தெரியாதவர்கள் யாரும் இல்லை. பெரிய பெரிய தனவந்தர்கள் எல்லாம் அவரின் மகன் கஜமுகனைச் செய்யப் போட்டி போடுகின்றனர். உன்னிடம் சாதாரணமான ஒருவனுக்குக் கூடக் கல்யாணியைச் செய்து கொடுக்கக் கூடிய பொருள் இல்லை. வலிய வரும் சீதேவியைக் காலால் தள்ளாதே. பேசாமல் நீ சென்று கேள். இல்லாவிட்டால் நான் சென்று கேட்கிறேன்" என்றான்".

"மணியம் அவனை ஏசினான் ; "என்னுடைய பிள்ளையின் அழகிற்கு, பெரும் பெரும் இடங்களில் இருந்து பெண்கேட்டு வருகிறார்கள். இவர்கள் எனக்குத் தூசு" என்றான்".

"அதன் பின் கல்யாணத் தரகர் பலர் தர்மலிங்கத்திற்காக வந்து மணியத்திடம் பெண்கேட்டனர். மணியம் சம்மதிக்கவில்லை. அதனால் கஜமுகனுக்குத் தர்மலிங்கம் வேறு இடத்தில் திருமணஞ் செய்து வைத்தார்".

“கல்யாணியின் தாய்க்கு முன்பு ஒரு நோய் உண்டாகி அவளது தலை முடி யாவும் உதிர்ந்து விட்டன. கல்யாணியை விரும்பிக் கேட்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பதிலை மணியம் சொல்லிக் கொண்டிருந்தான். இப்படி ஐந்து வருடங்கள் கழிந்தன. திடீரென்று தாய்கு வந்த நோய் மகளுக்கும் வந்ததால் அவளது தலைமுடி முழுவதும் உதிர்ந்து விட்டது. அதன்பின் அவளுக்கு யாரும் திருமணம் பேசி வரவில்லை”.

“என்னுடைய பிள்ளைக்குத் தகுதியான மாப்பிள்ளை கிடைக்காததால் அவளுக்குத் திருமணம் செய்து கொடுக்க மறுத்தேன். இனித் திருமணம் செய்ய முடியாதென்றால் அவள் என்னுடன் இருக்கட்டும். தகுதி குறைந்த மாப்பிள்ளையை இப்போதும் செய்ய மாட்டேன்” என்றான் மணியம்”.

“ஆகவே அன்பானவர்களே, பெண்களுக்கு உரிய வயதில் திருமணம் செய்து கொடுங்கள். விரும்பிக் கேட்பவர்களுக்கு முதலிடம் கொடுங்கள். குடும்பத்தைக் கொண்டு நடத்தக் கூடியவன் தகுதியானவனாவான். திருமணம் செய்யு முன் பெரும் பணக்காரராய் உள்ளோர் பின் விதிவசத்தால் பிச்சைக்காரராகலாம். கட்டிளங் காளையாக இருந்தவன் பலவீனனாகலாம். அதனால் தாம் தாம் அறிவுடையவர்கள் என்று எண்ணாது உலகைப் புரிந்து வாழுங்கள்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***கூரவிறினார் வாய்க் குணமுடைச் சொல் கொள்ளாது***
***காரறிவு கந்தாக் கடியன செய்வாரைப்***
***பேரறியார் ஆயின பேதைகள் யாருளரோ?***
***ஊரறியா மூரியோ இல்.***

கட்டுக்கடங்காத காளை கொழுத்துத் திமிறி நடப்பது போல, அறிவில்லாதவர்கள் தாம் தாம் பெரும் அறிவாளிகள் என்று நினைத்துச் செருக்கடைவர். இவர்கள் வாழ்வில் முன்னேற மாட்டார்கள். இவர்களது தொடர்பைக் கைவிடல் வேண்டும். '**ஊரறியா மூரியோ இல்**" என்பது பழமொழி.

**12** "அன்பானவர்களே, நிலையில்லாதவற்றை நிலையானவை என்று எண்ணுவதால் தான் வாழ்க்கையில் பெரும் பெரும் துன்பங்களெல்லாம் வருகின்றன. உணர்ந்து பார்த்தால் நாள் என்பது ஒரு கால அளவு. அது உடம்பிலிருந்து உயிரைப் பிரித்தெடுக்கும் வாளாகும். ஒரு நாள்க் கழிய ஒரு வாழ் நாள் குறைகிறது. இப்படியே குறைந்து குறைந்து வருகிறதே தவிர ஒரு போதும் வளர்வதில்லை. நேற்று இருந்தவன் இன்றில்லை என்று சொல்லும் பெருமையை உடையது தான் இந்த உலகம். உடம்பிற்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு கூட்டிற்கும் பறவைக்கும் உள்ள தொடர்பு போன்றது. பறவை எந்த வேளையிலும் கூட்டைவிட்டு வெளியேறலாம். எம்மைப் பெற்றுச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த தாய் தந்தையரே ஒரு நாள் இறந்து போவார்கள் என்று தெரிந்த பின்பும் பலர் தாம் இறக்க மாட்டோம் என்ற நினைவில் வாழ்கிறார்கள். இந்த உயிர் எப்பொழுது செல்லும் என்று தெரியாது.

ஆகையால் உயிர் உள்ள வேளையில் நல்ல கருமங்களைத் தாமதியாது செய்யுங்கள். எதையும் நாளைக்கு என்று ஒத்தி வையாதீர்கள். ஒத்தி வைக்கப்ட்ட செயல் பெரும்பாலும் நடப்பதில்லை"

"வாதவூரன், தணிகாசலத்திடம் தனது காணி உறுதியை ஈடாக வைத்து ஓர் இலட்சம் ரூபா பெற்றார். இரண்டு வருடங்களின் பின் அவரது மகன் கஷ்டப்பட்டு உழைத்து ஒர் இலட்சம் ரூபாவையும் வட்டிப் பணத்தையும் கொண்டு வந்தான். வாதவூரன் அப்பணத்தை உடனே கொண்டு சென்றுகொடாது வேறு காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்".

"மாதம் முடியும் வரை வட்டி கொடுத்தல் வேண்டும் என்பதற்காக அந்தப் பணத்தை வீட்டில் வைத்திருந்தார் . இதை அறிந்த திருடர்கள் அன்று இரவு வாதவூரின் வீட்டை உடைத்துக் களவெடுத்தனர். ஆகையால் எக்கருமத்தையும் உடனுக்குடன் செய்தல் வேண்டும். கடனைப் போலவே தான தர்மங்களையும் ஒத்திப் போடாது உடனுக்குடன் செய்யுங்கள்".

"மலையின்உச்சியில் உள்ள குன்றானது உருளத்தொடங்கினால் அதைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. அது போலவே சாவு வரும் போது அதைத் தடுத்து நிறுத்த எவராலும் இயலாது. அதனால் வாழும் காலத்தில் எதையும் ஒத்தி வைக்காது உடனுக்குடன் செய்து பழகுங்கள். முக்கியமாகத் தான தர்மங்களைச்

செய்யும் தன்மையை ஒரு போதும் ஒத்திவைக்காதீர்கள். ஒத்தி வைத்தால் அதைப் பின் செய்ய முடியாது போய்விடும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***இன்றி யமையா இருமுது மக்களைப்***
***பொன்றினமை கண்டும் பொருளாக் கொள்பவோ***
***ஒன்றும் வகையான் அறஞ்செய்க, ஊர்ந்துருளின்***
***குன்று வழியடுப்ப தில்.***

உடல் நிலையில்லாதது. அதனால் செயல்களை ஒத்தி வைக்காது உடனுக்கடன் செய்யவும். இதன் மூலம் அறச்செயலைச் செய்தல் வற்புறுத்தப்படுகிறது. ‘**ஊர்ந்துருளின் குன்று வழியடுப்பதில்**’ என்பது பழமொழி

13 “அன்பானவர்களே, ஒருவன் சொல்லாமலே அவன் முகத்தைப் பார்த்த அளவிலே அவன் என்ன நினைக்கிறான்? எதற்காக வந்திருக்கிறான்? என்பதை அறிந்து அவனுக்கு உதவி செய்வதே பெரியோரது கடமையாகும். பிச்சைப் பாத்திரமேந்தி ஒரு துறவி வருவானேயானால் ஈகைப் பயன் உணர்ந்தவர்கள் அவனை இருத்தி அவன் கொண்டு வந்த பாத்திரத்தில் அவன் உண்பதற்கு ஏதாவது ஓர் உணவுப்பண்டம் கொடுப்பார்கள். அவன் வாய் திறந்து இரக்கத் தேவையில்லை”.

“அது போல அவையில் அரசன் குறித்துச் சொல்ல வேண்டும் என்று எண்ணாது பொதுவாகச் சொன்னவற்றை ஏற்று நடத்தல் போர்வீரர்களது கடமையாகும். எந்தவொரு வீரனும்

தத்தமக்குத் தனித்தனியே சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டான். அது போல நீங்களும் குறிப்பறிந்து நடந்து கொள்ளல் வேண்டும்".

"நாவலடியிலே கைலாயநாதன் என்றொரு பெரியவர் இருந்தார். அவர் சிவன் கோயிலில் வாராவாரம் சமயப் பிரசங்கம் செய்வார். சமயக் கருத்துக்களையும் வாழ்க்கை முறைகளையும் கதைகள் மூலம் சொல்வார். இறுதியாகப் பொது வேலைத் திட்டங்கள் பற்றிச் செல்வார். அன்று சொன்னார்". "அடியவர்களே, சிவன் கோயில் கோபுரத்திற்கு அருகே உள்ள பெரியதொரு வேப்பமரத்தின்அடி உழுத்துள்ளது. மாரி காலம் தொடங்கினால் அது பாறிக் கோபுரத்தின் மீது சரிந்து விழுந்து விடும். அது சரிந்து விழுந்தால் கோபுரம் சேதமடையும். அதனால் அதைத் தறித்து விற்று விட்டுக் கோயில் நிதியில் சேர்த்து விடுங்கள்"

"உடனே பலர் வீட்டுக்குச் சென்று கோடரி, மண்வெட்டி, கத்தி என்பன எடுத்து வந்து வேலையை ஆரம்பித்தனர். சிலர் அதைக் கருத்திற் கொள்ளவில்லை. சிலர் தமக்கெனக் குறிப்பிட்டுச் சொன்னால் தான் செய்வோம்" என்றனர்".

"நாகராஜா என்பவன் கைலாயநாதனிடம் வந்து அவரைப் பணிந்து சொன்னான் ; "ஐயா, பிரசங்கத்தின் போது நீங்கள் பொதுவாகச் சொன்னதைக் குறிப்பிட்டுச் சொன்னால் எல்லோரும் வந்து செய்வார்கள் தானே" என்றான். அதற்கு அவர் கூறினார் ; "ஆயிரம் பேருள்ள இடத்தில் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

குறிப்பிட்டுச் சொல்வதானால் எல்லோருடைய பெயர்களையும் குறிப்பிடல் வேண்டும். அதில் முன் பின்னாக யாரைக் குறிப்பிடுவது? முதலில் சொல்பவன் மதிப்புள்ளவனென்று பலர் நினைப்பார்கள். தர்ம நோக்கம் கொண்டவர்கள், சேவை மனப்பான்மை உள்ளவர்கள் தான் எப்பொழுதும் வேலை செய்வார்கள். புகழையும் பொருளையும் விரும்புபவர்கள் எப்பொழுதும் சாட்டுப்போக்குச் சொல்லுவார்களே தவிர எதையுஞ் செய்யமாட்டார்கள். சிவன் கோயில் பொதுச் சொத்து. அதைப் பராமரிக்க வேண்டிய கடன் ஊரில் உள்ள அனைவருக்கும் உண்டு. கோயிலுக்கொரு நட்டமேற்பட்டால் அது ஊருக்கு ஏற்பட்ட நட்டமாகும். இதை உணர்ந்தவர்கள் சொல்லாமலேயே செய்வர். சொல்லாமல் செய்கின்றவர்கள் பெரியவர்கள். சொல்லிச் செய்பவர்கள் சிறியவர்கள். சொல்லியும் செய்யாதவர்கள் கயவர்கள் என்று ஒளவையார் கூறியுள்ளார். மேன் மக்கள் தேவை கருதி ஒருவன் வரும் போது அவனது முகத்தில் உள்ள குறிப்புக்களை உணர்ந்து செயற்படுவார்கள். தர்மவானால் மட்டுமே உண்மை களை உணர்ந்து கொள்ள முடியும்." என்றார்".

"ஆகையால் அன்பானவர்களே துறவியொருவன் பிச்சைப் பாத்திரத்துடன் வரும் போது அவன் உணவுக்காக வருகிறான் என்று உணர்ந்து தர்மஞ் செய்வதைப் போல, குறிப்பறிந்து உதவி செய்யுங்கள். உதவி தேவையானவன் கேட்க வேண்டும் என்று எதிர்பாராதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தாரேற்ற நீண்மார்பின் தம்மிறைவன் நோக்கியக்கால்***
***போரேற்றும் என்பார் பொதுவாக்கல் வேண்டுமோ?***
***யார்மேற்றாக் கொள்ளினும் கொண்டீக் காணுங்கால்***
***ஊர்மேற்றதாம் அமணர்க்கு ஓடு.***

ஓடேந்தி வந்தால் ஈகைப் பண்புடையோர் குறிப்பறிந்து ஈவது போல, வீரர்கள் தம் கடமையை உணர்ந்து செயற்படல் வேண்டும். **'ஊர் மேற்றதாம் அமணர்க்கு ஓடு'** என்பது பழமொழி.

**14** "அன்பானவர்களே, தன்னை நோக்கி வரும் அம்பானது ஒரு போதும் குறிதவறி நிலத்தில் விழமாட்டாது. அது போல ஊழ்வினை காரணமாக வரும் துன்பங்கள் ஒருபோதும் வந்தடையாமல் விடாது. அதனால் எத்தனை பெரிய துன்பம் வந்தாலும் அதை ஊழ்வினை என்று நம்பித் திடமுடன் ஏற்றுத் தாங்குதல் வேண்டுமே தவிரக் கலங்கக் கூடாது. கலங்குவதாலோ வருந்துவதாலோ துன்பங்கள் தீரா. துன்பத்தைத் தைரியத்துடன் எதிர்த்தால் துன்பமே துன்பப்படும். செய்யத்தக்கது இதுவெனக் கொள்ளும் அறிவுடையவர்கள் தமக்குத் தாங்கமுடியாதளவு துன்பம் வந்தபோதும் கலங்க மாட்டார்கள். துன்பங்கள் வருவதை யாரும் தடுக்க முடியாது. ஏனென்றால் நாம் செய்த தீவினைகள் தான் துன்பங்களாக வந்து வருத்தும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்."

"வாதவூரன் பட்ட கடனைக் கொடுக்காமல் வைத்திருந்த போது அது களவு போயிற்று. கடன்கொடுத்த தணிகாசலம் உரிய

தவணையில் பணம் கட்டாமையால் மேலும் ஆறு மாதங்கள் தவணை கொடுத்தார். அந்தக் காலப் பகுதியிலும் வாதவூரனால் கடனைக் கட்ட முடியவில்லை. அதனால் வாதவூரன் ஈடாகக் கொடுத்த காணியையும் வீட்டையும் விற்று விட்டுத் தனது முதலையும் வட்டியையும் எடுத்துக் கொண்டு மிகுதிப் பணத்தைக் கொடுத்தார்".

"வீடு விற்பனையானதும் வீட்டை வாங்கியோர் வாதவூரனை வேறு வீட்டில் குடியேறுமாறு பணித்தனர். வாதவூரன் ஏழை. அதனால் வேறு காணி அவரிடம் இருக்கவில்லை. அவர் சிவன் கோயில் மடத்தில் சில நாட்கள் தங்கியிருந்து விட்டுப் பின் இன்னொருவரின் காணியில் சிறிய குடிசை அமைத்து இருந்தார். அவரது மனைவி தினமும் தமக்கு வரும் கஸ்டங்களை நினைத்து நினைத்து அழுவாள். வாதவூரன் சொல்வார் ; "அழுவதால் பிரயோசனம் இல்லை. விழுந்து விழுந்து அழுதாலோ, அல்லது நாள் முழுக்க அழுதாலோ விதிமாறுபடாது. எம்மை வருத்தி நாம் நோயாளியாவது தான் நடைபெறும். அதனால் அழாதே. வரும் கஷ்டங்களை ஏற்றுத்தான் தீர வேண்டும். எம்மை நோக்கி வரும் அம்பு எம்மைத் துளைக்காது நிலத்தில் விழாது. அது போல எமக்கு வரும் துன்பங்களைத் தடை செய்ய முடியாது. அவை எம்மைத் தாக்கியே தீரும்." என்றார்.

"அதனால் அன்பானவர்களே, வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளப் பழகுங்கள். கலங்குவதாலோ, அழுவதாலோ

பிரயோசனமில்லை. பள்ளத்தை நோக்கிச் செல்லும் வெள்ளத்தைப் போல விதி ஒவ்வொருவரையும் துரத்திக் கொண்டே இருக்கும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*நனியஞ்சத் தக்க அவை வந்தால் தங்கண்*
*துனியஞ்சார் செய்வது உணர்வார் - பனியஞ்சி*
*வேழம் பிடிதழூஉம் வேய்சூழ் மலைநாட!*
*ஊழம்பு வீழா நிலத்து.*

வரும் துன்பங்கள் யாவும் ஊழ்வினைப் பயனாலேயே வரும் எனக் கருதி, மனங்கலங்காமல் நல்வினைகளைச் செய்தல் வேண்டும். **'ஊழம்பு வீழா நிலத்து'** என்பது பழமொழி.

15 "அன்பானவர்களே, நீங்கள் பாடுபட்டு உழைக்கும் பணத்தைப் பிற்காலத்திற்குத் தேவைப்படும் என்று நினைத்துச் செலவு செய்யாமல் பெட்டியில் வைத்துப் பூட்டி வைக்காதீர்கள். சேமிக்கும் பணத்தைப் பயன்படுத்தி நன்றாக அனுபவியுங்கள். தானதர்மஞ் செய்யுங்கள். தேவையேற்படும் போது இறைவன் அள்ளித் தருவார். தருமஞ் செய்யப்படும் பணம் இரட்டிப்பாக வந்து சேரும். பறவைகள், விலங்குகளைப் பாருங்கள் அவை விதைப்பதும் இல்லை; அறுவடை செய்வதும் இல்லை ; சேமிப்பதும் இல்லை. அன்றன்று கடவுள் கொடுக்கும் உணவுகளை உண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றன. சேமிப்பதால் தான் துன்பங்கள் உண்டாகின்றன. சேமிப்பு ஆசையைத் தூண்டும், பொறாமையை உண்டாக்கும். அதனால் பின் நாளில் தேவைப்படுமென நினைத்துக்

கவலைப்படாது, உழைப்பதை அனுபவிப்பதோடு தானதர்மமுஞ் செய்யுங்கள்.”

“மணியூரிலே தேவராசா, சுப்பிரமணியம் என்று இரு சகோதரர்கள் இருந்தனர். தேவராசா உழைப்பதில் பெரும் பகுதியைச் சேமிப்பான். அவன் சரியாக உண்ண மாட்டான். தான தருமஞ் செய்ய மாட்டான். அவனுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவளுக்குத் தேவையான ஆபரணங்களை வாங்கி வைத்திருந்தான். சுப்பிரமணியம், தேவராசாவுக்கு எதிர் மாறானவன். அவன் நன்றாக உழைப்பான். அனுபவிப்பான், பின்னடிக்கெனச் சேமித்து வைக்காது தான தர்மஞ் செய்து விடுவான். அவனுக்கு மூன்று பெண் பிள்ளைகள்”

‘தேவராசா சேமித்து வைத்த அந்த சொத்தை திருடர்கள் திருடிச் சென்றுவிட்டனர். சுப்பிரமணியத்திடம் எதுவும் இல்லாததால் அவன் நிம்மதியாக இருந்தான். அவனுக்கு நோய் வந்த போது ஊரவர்கள் வைத்தியசாலையில் நின்று அவனைப் பராமரித்தனர். உணவு, பணம் முதலியவற்றைக் கொடுத்தனர். அவனுக்கு எந்தக் கஷ்டமும் ஏற்பட ஊரவர் விடவில்லை”.

தேவராசா ஒரு நாள் விபத்தில் சிக்கினான். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவனையாரும் சென்று பார்க்கவில்லை. உணவும் பணமும் கொடுக்கவில்லை. சுப்பிரமணியம் தான் தினமும் வைத்தியசாலைக்குச் சென்று அவனைக் கவனித்தான். உணவு கொடுத்தான். சுப்பிரணியத்திற்

காக ஊரவர் சிலர் தேவராசாவைச் சென்று பார்வையிட்டனர். தேவராசாவின் மகளுக்குத் திருமணம் பேசிய போது எல்லோரும் சீதனமாகப் பெரும் பொருளைக் கேட்டனர். அத்துடன் குடும்பம் சரியில்லையென்றும் கூறினர். ஆனால் சுப்பிரமணியத்தின் பெண்பிள்ளைகளைத் திருமணஞ் செய்யப் பலர் போட்டி போட்டனர். அவரிடம் உதவி பெற்றுக் கற்று பெரிய உத்தியோகத்தில் இருந்த மூவர் சீதனமின்றி அவரது மூன்று பெண்களையும் திருமணஞ் செய்தனர்.

" அதனால் அன்பானவர்களே, முறையாகத் தருமஞ் செய்து வந்தால் அந்தத் தருமம் தக்க சமயத்தில் உதவி புரியும். தருமஞ் செய்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் இன்பமாக வாழ்வர். பொருளைத் திருடர்கள் கொள்ளையடிப்பார்கள். சேமித்து வைத்த தருமத்தை எவரும் கொள்ளையடிக்க முடியாது. செய்யும் தருமம் வளரும் தன்மையுள்ளது. ஆனால் அது வளர்ந்து வளர்ந்து செய்பவனை உயர்த்தும். பொருளைச் சேமித்து வைத்தவன் அதை இழந்தால் மீண்டும் பெற முடியாது. அதனால் தருமம் அப்படியானதல்ல. நீங்கள் செல்லுமிடமெல்லாம் அதுவும் கூட வந்து எந்நேரமும் உதவி செய்து கொண்டே இருக்குமே தவிர துன்பங்களைத் தராது. ஆகையால் உழைக்கின்ற ஒவ்வொருவரும் வாழ்க்கையை நன்கு சுவைத்து அனுபவியுங்கள். தான தர்மம் செய்யுங்கள். அந்தத் தருமம் கடவுளாக உங்களுக்கு எந்நேரமும் உதவும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வைத்ததனை வைப்பென்று உணரற்க தாமதனைத்***
***துய்த்து வழங்கி இருபாலும் - அத்தகத்***
***தக்குழி நோக்கி அறஞ்செய்யின், அஃதன்றோ***
***எய்ப்பினில் வைப்பென் பது.***

தருமம் இம்மையிலும் மறுமையிலும் உதவி இன்பம் தரும். இதனை உணர்ந்து பொருளைப் பதுக்கி வைக்காமல் தருமஞ் செய்தல் வேண்டும். '**எய்ப்பினில் வைப்பென்பது**' என்பது பழமொழி.

16 "அன்பானவர்களே, ஆற்றல் மிகுந்த பெரியோரை எந்நாளும் போற்றி வாழுதல் வேண்டும். இதனால் கடல் சூழ்ந்த இவ் உலகில் வாழும் எல்லா மக்களுக்கும் நீங்காத இன்பங்கள் பலவற்றைப் பெறலாம். பெரியோரைப் போற்றி வாழாவிட்டாலும் பரவாயில்லை அறியாமையால் அவர்களைப் பகைத்து வாழக்கூடாது. பகைத்து வாழ்ந்தால் அப்பெரியவர்களால் நீங்காத துன்பங்களுக்கு ஆளாக வேண்டி வரும். கெட்டுப்போக விரும்புபவர்கள் தான் அறியாமையால் பெரியவர்களைப் பகைப்பார்கள். ஆற்றலில் லாதவர்கள் ஆற்றல் உள்ளவர்களுடன் பகைத்துக் கொள்வதென்பது யமனைக் கைதட்டி அழைப்பதைப் போன்றதாகும். மதம் பிடித்த யானை ஒன்று வீதியால் ஓடி வருகிறது. அது வழியில் நிற்கின்ற பெரும் பெரும் மரங்களையெல்லாம் தாக்கி வேரோடு பிடுங்கி வீசி வீசி வருகிறது. அந்த மதம் மிகுந்த யானையை எருக்கம் பற்றைக்குள் மறைந்திருந்து தாக்குவதைப் போன்றது தான் ஆற்றலில்லாதவர்கள் ஆற்றல் உள்ளவர்களோடு பகைப்பது."

“வேலூரிலே சிவசரவணபவன் என்றொரு பெரியவர் இருந்தார். அவர் வேத உபநிடதங்களைத் தெளிவாகக் கற்றவர். பெருந் தனவந்தர். தர்மவான். அந்த ஊரில் இன்னொரு தனவந்தரான சிவகுருநாதன் என்பவர் வாழ்ந்தார். அவர் பெருங் கருமி. சிவசரவணபவனிடம் மக்கள் எல்லோரும் சென்று வருவார்கள். அறிஞர்கள் ஊர்ப்பிரமுகர்கள் எல்லோரும் சென்று தமக்கு விளங்காதவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். பிள்ளைகள் சென்று கல்வி பயில்வார்கள். ஊரில் நடைபெறும் எந்த வைபவமானாலும் அவரது தலைமையில் தான் நடைபெறும். இது சிவகுருநாதனுக்குப் பிடிப்பதில்லை. தானும் பெரும் வணிகன் கற்றவன் என்ற திமிருடன் நடந்து கொள்வார”.

“ஒரு முறை ஊர்ச்சிவன் கோயிலின் நிர்வாகம் தெரிவதற்கான கூட்டம் நடைபெற்றது. பத்துப் பதினைந்து வருட காலமாகத் தலைவராகச் சிவசரவணபவன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு வந்தார். இம் முறை சிவகுருநாதனின் வர்த்தக நிலையத்தில் வேலை செய்வோரும் வேறு சிலரும் சேர்ந்து சிவகுருநாதனைத் தலைவராகப் பிரேரித்தனர். ஊரவர் வெகுண்டெழுந்தனர்”.

“சிவகுருநாதன் சொன்னார் ; “சிவன் கோயில் பொதுச் சொத்து. ஊரவர் எவரும் தலைவராகலாம். கோயில் சொத்தைச் சூறையாடி ருசிகண்டவர்கள் தான் தொடர்ந்தும் பதவி வகிக்க வேண்டுமா...?” என்று கேட்டார். சிவசரவணபவன் எதுவும்

சொல்லவில்லை. மக்கள் தர்க்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அதனால் சிவசரவணபவன் சொன்னார் ; "இம் முறை சிவகுருநாதனைத் தலைவராகத் தெரிவு செய்யுங்கள்" "அதைக் கேட்ட மக்கள் வெகுண்டெழுந்தனர். அதனால் அன்றைய கூட்டம் குழம்பியது. பின் நீதிமன்றத்தின் கட்டளைப்படி காவல் துறையினர் வந்து நிர்வாகத்தைத் தெரிந்தனர். மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சிவசரவணபவனைத் தலைவராக்கினர்."

"ஊர்க்கோயிலுக்கு காவல்த்துறையினர் வந்தது ஊர் மக்களுக்கும், ஊர்ப்பிரமுகர்களுக்கும் பிடிக்கவில்லை. அதனால் சிவகுருநாதனின் வர்த்தக நிலையத்தில் யாரும் பொருட்கள் வாங்கக்கூடாது" என்று சொன்னார்கள்".

"அன்று முதல் சிவகுருநாதனின் வர்த்தக நிலையத்திற்கு யாருஞ் செல்லவில்லை. அவரது கப்பலில் வேலை செய்யும் மாலுமிகளும் வர்த்தக நிறுவனத்தில் வேலை செய்யும் சிப்பந்திகளும் தமது வேலைகளை ராஜினாமாச் செய்தனர். பல மாதங்களாக அவரது கப்பல்கள் தேடுவாரின்றித் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன. அவற்றை விற்பதற்கு முயற்சித்தால் அரைவிலை கால்விலை கேட்டார்கள். அதனால் சிவகுருநாதன் இடிந்து போனார். அறியாமையால் ஆற்றல் உள்ள பெரியவரைப் பகைத்ததற்காக மிகவும் வருந்தினார். ஆகையால் அன்பானவர்களே, ஆற்றல் உள்ள பெரியவர்களுடன்

அவதானமாக நடக்காவிட்டால் உயிரைத் தவிர மற்றெல்லாம் போய்விடும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***எல்லாத் திறத்தும் இறப்பப் பெரியாரைக்***
***கல்லாத் துணையார்தாம் கைப்பித்தல் - சொல்லின்***
***நிறைந்தார் வளையினாய்! அஃ்தால், எருக்கு***
***மறைந்துயானை பாய்ச்சி விடல்.***

“எருக்கம் பற்றைக்குள் இருந்து மதங்கொண்ட யானையைத் தாக்கி அழிப்பவன் போல, பெரியயோர்களை எதிர்க்கும் அறிவிலிகளும் அழிந்து போவார்கள் ; ‘**எருக்கு மறைந்து யானை பாய்ச்சி விடல்**’ என்பது பழமொழி.

17 “அன்பானவர்களே, ஆற்றல் மிகுந்த இருவருக்கிடையில் கோள் சொல்லிப் பிழைப்பு நடத்துபவன் மிக மிக அவதானமாக இருத்தல் வேண்டும். ஏனென்றால் கரணம் தப்பினால் மரணம் என்பது போல ஏதாவது வாய் தவறிக் கூடத் தவறாகச் சொன்னால் இருவராலும் அவனுக்கு ஆபத்து உண்டாகும். வீரம் மிக்க இரு எருதுகள் வைக்கோல் உண்ணுவதில் எழுந்த பிரச்சினைால் முட்டி மோதிச் சண்டை பிடிக்கின்றன. இன்னொரு மாடு அந்த வைக்கோலைத் தின்னும் ஆசையால் இரண்டுக்குமிடையிற் செல்ல இரண்டு காளைகளும் அதை முட்டி மோதிக் காயப்படுத்தின. அது

போலத்தான் பலம் மிகுந்த இரு அரசருக்கு இடையில் சென்று ஏதாவது சொல்பவன் இருவராலும் பாதிக்கப்படுவான்"

"நாகநாதபுரமன்னன் நாகவர்மன் வீரமானவன். அவனது பெயரைக் கேட்டாலே அயல் நாட்டு மன்னர் அஞ்சி நடுநடுங்குவர். அது போல உமையாள் புர மன்னன் கேதீஸ்வரன். அவனும் பெரும் வீரன். இருவரும் நண்பர்களல்லாதபோதும் பகைவர்கள் அல்ல. இருவரும் நீதிநெறி தவறாது ஆண்டு வந்தமையால் மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். நாகநாதபுரத்தில் பரணர் என்றொரு புலவர் வாழ்ந்து வந்தார். அவர் பெரும் புலவரல்ல. அதனால் அவருக்கு அவையில் பாடச் சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை. ஒரு நாள் உமையாள் புரத்திற்குச் சென்றார். மன்னர் அவரை வரவேற்று அவையில் கௌரவித்தான். பெரும்பொருளும் கொடுத்தான். முடிந்தால் பெரும் காப்பியம் ஒன்று எழுதுமாறும் பணித்தான். இதை ஒற்றர் மூலம் அறிந்த நாகவர்மன். பரணரை அழைத்து ஒரு காவிம் பாடும்படி கேட்டுக் கொண்டதோடு பெரும் தொகைநிதியும் கொடுத்தான்".

"இரு நாட்டு மன்னர்களும் பெரும் நிதி கொடுத்துக் காவியம் பாடும்படி சொன்னதால், பரணர் இருநாட்டு மன்னர்களையும் அடிக்கடி சந்தித்தார். அந்தச் சந்திப்பு நட்பாகி நாட்டு விஷயங்களைப் பேசுமளவிற்கு வளர்ந்தது."

“திடீரென்று இருநாட்டு மன்னர்களுக்குமிடையே தேவி புரமன்னனின் மகளின் திருமண விடயத்தில் பகையுண்டானது. தேவிபுர இளவரசி மிகுந்த அழகி. இருவரும் அவளைத் திருமணஞ் செய்யப் போட்டி போட்டனர். ஆசை பகையாயிற்று. இந்த வேளையிலும் பரணர் உமையாள் புரத்திற்குச் சென்று வந்தார். உமையாள் புர மன்னன் கேதீஸ்வரன் நாகநாதபுர மன்னனைப் பற்றி விசாரிப்பான். நாகவர்மன் கேதீஸ்வரனைப் பற்றி விசாரிப்பான். அதனால் இருவருக்கும் தீங்கு ஏற்படாதவாறு பரணர் பல கதைகளைக் கூறிப் பொருள் சேர்த்து வந்தார். பரணரின் கதைகளில் இரு நாட்டு மன்னரும் சந்தேகம் கொண்டனர். போர் தொடங்கும் அறிகுறிகள் தென்பட்டன. பரணர் உமையாள் புரத்திற்குச் செல்லாது. நாகபுரத்தில் இருந்தார். உமையாள்புர மன்னன் பரணரை வரும்படி ஒற்றர்களிடத்தில் கூறி அனுப்பினான். பரணர் செல்லவில்லை. அதனால் பரணரைக் கொல்லும் படி தனது ஒற்றர்களுக்குக் கட்டளையிட்டான். உமையாள்புர ஒற்றர்கள் பரணரின் வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்வதை ஒற்றர் மூலம் அறிந்த நாகவர்மன் அவரைக் கைது செய்து சிரைச் சேதஞ் செய்தான்”.

“ஆகையால் அன்பானவர்களே, இரண்டு முரட்டுக் காளைகள் போரிடும் போது வைக்கோலின் மேல் ஆசைப்பட்டு ஒரு மாடு இடையிற் செல்ல, இரண்டு காளைகளும் சேர்ந்து அதைத் தாக்கிக் காயப்படுத்தின. அது போல இரண்டு வலிமையானவர்கள் அவையில் வாதிடும் போதோ, அல்லது இரு அரசர்கள் போரிடும் போதோ குறுக்கே செல்லக் கூடாது. குறுக்கிட்டால் இருவரும் சேரந்து

தாக்குவார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*செருக்கு உடைய மன்னர் இடைப்புக்கு அவருள்*
*ஒருத்தற்கு உதவாத சொல்லின் தனக்குத்*
*திருத்தலு மாகாது தீதாம் ; அதுவே*
*எருத்திடை வைக்கோல் தினல்*

பலமான இருவருக்கிடையே புகுந்து இருவரிடமும் இலாபம் பெற நினைப்பவன் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் இருவராலும் கேடு உண்டாகும் ; '**எருத்திடை வைக்கோல் தினல்**' என்பது பழமொழி.

18 "அன்பானவர்களே, நீங்கள் மனமுவந்து எப்பொருளையும் கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை. ஆனால் எப்பொழுதும் வஞ்சனை இல்லாத இன்சொற்களையே பேசுங்கள். உள்ளம் விரும்பி ஒருவனுக்குப் பொருள் கொடுத்து உதவுவதை விட முகம் மலர்ந்து இன்சொற்களைப் பேசுவது மிகவும் உயர்ந்தது. இன்சொற் பேசுபவர்களை மக்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள். பொருள் வயிற்றை நிரப்பும். இன்சொல் ஆத்மாவை வசீகரிக்கும். பணிவுள்ளவனாகவும் இன்சொல் பேசுபவனாகவும் இருப்பவன் உலக இன்பங்கள் யாவற்றையும் ஒன்றாகப் பெறுவான்."

"நாவலூரிலே மதிவாணன் என்றொரு பெரியவர் இருந்தார். கல்வியறிவில் மேம்பட்ட அவர் பெரும் தனவந்தர். அத்துடன்

எல்லோரையும் மதித்து இன்சொல் பேசுவார். தன்னால் இயன்றவற்றைக் கொடுத்து உதவுவார்".

"அதே ஊரில் சிவலிங்கம் என்றொரு பெருந் தனவந்தர் இருந்தார். அவர் அரிய பல நூல்களைக் கற்றவர். தான தர்மம் செய்பவர். ஊரில் நடைபெறும் விழாக்கள், வைபவங்களுக்கு அள்ளிக் கொடுப்பவர். ஆனால் இன்சொல் பேசமாட்டார். பொருட்களைக் கொடுத்து விட்டுச் சொல்வார் ; " நெடுகப் பிறரை நம்பி வாழக்கூடாது. நன்றாக உழைக்க வேண்டும். இரப்பது குலத்திற்கு ஈனம்" என்பார். கோயில், சனசமூக நிலையம் போன்றன கட்ட நிதி கேட்டால் கொடுத்து விட்டுச் சொல்வார் ; "என்னை நம்பி இருக்கிறீர்கள், நாளைக்கு நான் இறந்து போனால் என்ன செய்வீர்கள்? அதனால் எல்லோரும் என்னைப் போலக் கடும் முயற்சி செய்யுங்கள். முயற்சி செய்தால் பணம் வரும். பணம் வந்தால் தரும காரியஞ் செய்யலாம்" என்பார். அதனால் அவரிடம் இரக்கப் போவோர் குறைவு"

"மதிவாணனிடம் யாராவது இரக்கச் சென்றால் முதலில் வரவேற்று உபசரிப்பார். உண்ண ஏதாவது கொடுப்பார். பின் தன்னாலியன்றதைக் கொடுத்து ; "இவ்வளவு தான் என்னால் தரமுடியும். குறை விளங்காதீகள்" என்பார். கட்டிட நிதிக்குச் சென்றாலும் அப்படித்தான் சொல்வார".

“ஊர்ச் சிவன் கோயிலுக்குத் தலைவராக இருந்தவர் திடீரென இறந்தமையால் புதிய தலைவரைத் தெரிவு செய்ய வாக்கெடுப்பு நடந்தது. தொண்ணூறு சதவீதமான மக்கள் மதிவாணனுக்கே வாக்களித்தனர். பத்து வீத மான மக்கள் தான் சிவலிங்கத்திற்கு வாக்களித்தனர். அச்சிவன் கோயிலின் திருப்பணி வேலைகளில் தொண்ணூறு சதவீதமான வேலையைச் சிவலிங்கமே செய்தார். அண்மையில் தனது சொந்தச் செலவில் புதிய தேர் ஒன்றைச் செய்து கொடுத்தார். அத்தேரின் வெள்ளோட்ட விழாவுக்கு மதிவாணனே தலைமை தாங்கினார்”.

“ஆகையால் அன்பானவர்களே, கொடுப்பதை விட இனிமையாகப் பேசுவது தான் சிறப்பானது. ஒருவன் பெரும்விருந்து வைக்க விரும்புகின்றான். நன்கு பருத்துக் கொழுத்த விலையுயர்ந்த எருமை மாட்டை வாங்கி அதை அடித்துக் கறி சமைக்கிறான். அக்கறிக்கு வாசனையையும் , சுவையையும் ஊட்டும் மசாலா வகைகளை அவன் போடவில்லை. அதனால் அந்தக் கறியை உண்டவர்கள் விரும்பி உண்ணவில்லை. அழைத்ததற்காக வந்து வேண்டா வெறுப்பாக உண்டனர். கறிக்குச் சுவையைக் கொடுப்பது உப்பு. கொடைக்குச் சிறப்பைக் கொடுப்பது இன்சொல். பெறுமதியில்லாத கறியாக இருந்தாலும் அதில் கலக்கப்படும் மசாலாவும் உப்பும் தான் சுவையைக் கொடுக்கும். அது போலக் கொடை சிறிதாக இருந்தாலும் கொடுப்பவர் பேசும் இன்சொல் தான் கொடையை உயர்த்தும்”.

"ஆகவே அன்பானவர்களே, தான தர்மங்கள் செய்ய முடியாவிட்டாலும் தான தருமத்திற்கென வருவோரை மகிழ்வுடன் வரவேற்று இன்சொல் பேசி அனுப்புங்கள். உங்களால் பொருட்களைத் தான் கொடுக்க முடியாது. இன்சொல்லையுமா பேச முடியாது? என்று கேட்டார் நமசிவயம் சுவாமிகள்.

***உடுக்கை மருந்து உறையுள் உண்டியோடு இன்ன***
***கொடுத்துக் குறைதீர்த்தல் ஆற்றி – விடுத்தின் சொல்***
***ஈயாமை என்ப, எருமை எறிந்தொருவர்***
***காயக்கு லோபிக்கும் ஆறு.***

எல்லாக் கொடைகளிலும் இன் சொல் வழங்குவதே பெருங் கொடை. இன் சொல் வழங்காத கொடை உப்பில்லாத உணவிற்குச் சமம். **'எருமை எறிந்தொருவர் காய்க்கு லோபிக்குமாறு'** என்பது பழமொழி.

19 "அன்பானவர்களே, எல்லோரும் சமைத்து உண்பதற்கு ஆவனசெய்வதே உண்மையான முயற்சியாகும். அதுதான் உண்மையான கொடையுமாகும். பிறவெல்லாம் பொய்யான செயல்களே. உதவி செய்வார் என்று நம்பி அவரே தஞ்சமென நிற்கின்றபோது அவர் உதவாவிட்டால் இன்னொரு வரைநாடிச் சென்று முயற்சி செய்து சமைத்து உண்பதே கடனாகும். செய்ய முடிந்தளவு உதவிகளைச் செய்தல் வேண்டும். செய்ய முடியா விட்டால் செய்ய முடியாதென்று கூறிவிடவேண்டுமே தவிர அவரை ஏமாற்றக்கூடாது. உதவிகோரிச் செல்பவரும் ஓரிரு முறை கோரி

விட்டு அவர் செய்யாவிட்டால் இன்னொருவரை நாடி உதவி பெறல் வேண்டும்."

"சிவநாதன், பெரும் வணிகனான தனசேகரனின் ஆத்ம நண்பன் என்று சொல்லிக் கொள்வான். அவன் எவ்வேளையிலும் தனசேகரனுடன் வாகனத்தில் ஒன்றாகப் பயணிப்பான். வைபவங்களில் அவனோடு சேர்ந்து கலந்து கொள்வான். தனசேகரனின் வர்த்தக நிலையத்தில் முகாமையாளராகக் கடமை புரிந்தவன் வேறொரு வர்த்தக நிறுவனத்திற்குச்சென்று விட்டான். அதனால் அந்த வேலைக்கு நம்பிக்கையான ஒருவனைத் தன சேகரன் தேடிக் கொண்டிருந்தான். இதை அவ்வூரில் வசிக்கும் கலைவாணன் என்பவன் கேள்விப்பட்டுச் சிவநாதனிடம் வந்து அந்த வேலையைப் பெற்றுத் தருமாறு கேட்டான்".

"கலைவாணன் சிவநாதனின் நெருங்கிய உறவினன். அதனால் அவனது பெற்றோரும் வந்து கலைவாணனுக்கு அவ்வேலையைப் பெற்றுக்கொடுக்கும்படி கேட்டுக் கொண்டனர். அதற்குச் சிவநாதன் சம்மதித்தான். தான் தனசேகரனின் நெருங்கிய நண்பன் என்றும், தான் சொன்னால் அவன் கட்டாயம் கேட்பான் என்றும் சிவநாதன் சொன்னான். அதை நம்பிய கலைவாணனும் பெற்றோரும் கட்டாயம் வேலை கிடைக்குமென்று நம்பியிருந்தனர்".

"நாட்கள் நகர்ந்தது மாதம் ஒன்றாகி விட்டது. கலைவாணன் சிவநாதனிடம் பலமுறை சென்றும் அவன் உறுதியாக எதையும் கூறவில்லை. அதனால் மனம் கலங்கிய கலைவாணன் ஊரில்

உள்ள பெரியவர் ஒருவரிடம் தனது நிலையைக் கூறினான். அதற்கு அவர் சொன்னார் ; “மகனே எதையும் ஓரிரு முறை தான் கேட்க வேண்டும். நீ பலமுறை கேட்டு விட்டாய். அவர் எதுவும் சொல்லவில்லை. அதனால் நீ முயற்சி செய்” என்றார்”.

“அதைக் கேட்ட கலைவாணன் தனசேகரனை நேரிற் சந்தித்துத் தான் கற்ற கல்வியைப் பற்றிக் கூறினான். சான்றிதழ்களைக் காண்பித்தான். தனசேகரன் அவற்றைப் பார்த்து விட்டு சிலவேலைகளைக் கொடுத்தான். அதைக் கலைவாணன் மிகத் திறமையாகச் செய்து முடித்தான். அதைக் கண்ட தனசேகரன் சொன்னான் ; “ கலைவாணா, இது மிகவும் பொறுப்பான வேலை. பலர் பெரிய பெரிய மனிதர்களின் சிபாரிசுகளுடன் வந்தனர். ஆனால் அவர்கள் பொருத்தமானவர்களாக எனக்குத் தெரியவில்லை. சிபாரிசு செய்யும் பெரியவர்கள் வந்து வேலை செய்யமாட்டார்கள். சிபாரிசு செய்யப்பட்டவன் தான் வேலை செய்தல் வேண்டும். உன்னை எனக்குப் பிடித்து விட்டது. உனது திறமையை மட்டும் நம்பி வந்திருக்கும் உனது துணிவைப் பாராட்டுகிறேன். திறமையானவர்கள் பிறரை நம்பாது தனது சொந்தக் காலிலேயே நிற்பார்கள். அது தான் எனக்கும் விருப்பம். இன்றிலிருந்து நீ வேலைசெய்” என்றான்”.

“ஆகவே அன்பானவர்களே, திறமையை மட்டும் நம்புங்கள். ஒருவரிடம் ஓரிரு தடவைகள் மட்டும் தான் நீங்கள் உதவி கோர வேண்டும். அப்படியிருந்தும் அவர் செய்யாவிட்டால் நீங்கள்

முயற்சிக்க வேண்டும். முயற்சித்தால் கட்டாயம் வெற்றியடையலாம்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***சேர்ந்தார் ஒருவரைச் சேர்ந்தொழுகப் பட்டவர்***
***தீர்ந்தாரக் கொண்டு தெளியினும் -தேர்ந்தவர்க்குச்***
***செல்லாமை காணாக்கால் செல்லும்வாய் என்னுண்டாம்***
***எல்லாம் பொய் அட்டூணே வாய்.***

உதவுவார் என நினைத்த ஒருவர் உதவாவிட்டால், உதவி கோரியவர் அவரை விட்டு விட்டுத் தாே ம தம் முயற்சியிலீடு பட வேண்டுமே தவிரத் தொடர்ந்தும் அவரை நம்பியிருக்க கூடாது. ‘**எல்லாம் பொய் ; அட்டூணே வாய்**’ என்பது பழமொழி.

**20** “அன்பானவர்களே, அரசனைச் சார்ந்து வாழ்பவர்கள் அதிகமாக நீங்கிச் செல்லாமலும் மிக நெருக்கமாகப் பழகாமலும் நெருப்பின் முன் குளிர் காய்பவர்களைப் போல இருத்தல் வேண்டும். அத்துடன் அரசன் விரும்பும் எவற்றையும் அரசனோடு நெருங்கிப் பழகுபவர்கள் விரும்பக் கூடாது. அரசன் தனக்கு இளையவர் என்றும் கருதக்கூடாது. அரசரிலும் பார்க்கத் தாம் அறிவுள்வர் என்றும் எண்ணக்கூடாது. அரசன் மனம் நோகும்படியாக எதைச் செய்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமே தவிரப் பகை கொள்ளலாகாது. மீறிப்பகை கொள்வது தூங்கும் புலியைக் கல்லெறிந்து எழுப்புவதற்குச் சமமானது. எனவே அன்பானவர்களே, அரசனைப் போலப் பெரியவர்களையும் மதித்தல் வேண்டும். இல்லாவிட்டால் துன்பங்கள், துயரங்கள் யாவும் ஒன்று சேர்ந்து வந்து தாக்கும்”.

“புலியூர் அரசன் வீரபாண்டியன் மிகவும் நல்லவன். மக்களைத் தன்னுயிர் போலக் காப்பாற்றுபவன். அதனால் மக்கள் அவனைத் தமது தெய்வமாக மதித்தனர். புலியூரின் முதலமைச்சர் வேதவனம். வயதில் மூத்தவர். வீரபாண்டியனின் தகப்பன் ஆட்சி செய்யும் போதே முதலமைச்சராகக் கடமை புரிந்தவர். வீரபாண்டியன் சிறுவனாக இருந்த போது அவரின் கண்டிப்பிலேயே வளர்ந்தான். வீரபாண்டியன் முடிசூடிய பின்பு முதலமைச்சர் தனது சொற்படி வீரபாண்டியன் நடக்க வேண்டுமென்று எண்ணினார். அத்துடன் அவர் பல இடங்களில் திமிராகவும் நடந்து கொண்டார். வயதில் மூத்த அமைச்சரை வீரபாண்டியன் ஆரம்பத்தில் கண்டிக்கத் தயங்கினான். பின் அவன் நேரடியாகக் கண்டிக்கவும் செய்தான். இதனால் வெறுப்படைந்த முதலமைச்சர் தருணம் வரும் வரை பொறுத்திருந்தார்”.

“திடீரென்று மருதமுனை நாட்டு மன்னன் புலியூர் மீது போர் தொடுத்தான். மருத முனைப்படை வீரர்கள் ஆரம்பத்தில் முன்னேறினர். அதனால் புலியூர் தோல்வியடையும் என்று எண்ணிய முதலமைச்சர் வேதவனம் மருதமுனை நாட்டு மன்னனோடு சேர்ந்து கொண்டார். இறுதியில் புலியூர்ப் படைகள் மருதமுனை நாட்டைக் கைப்பற்றின. பின் அதைச் சிற்றரசாக்கிய வீரபாண்டியன் மருதமுனைச் சேனாதிபதியிடம் ஆட்சியை ஒப்படைத்தான்”.

"முதலமைச்சர் வேதவனம் இரண்டு நாடுகளுக்கும் செல்ல முடியாது காட்டில் வாழ்ந்தார். ஒரு முறை வேட்டைக்குச் சென்ற மருதமுனையரசன் காட்டில் வாழ்ந்த வேதவனத்தைக் கைது செய்து அரண்மனைக்குக் கொண்டு வந்தான். வேதவனம் தான் மருதமுனை அரசனுக்குக் கீழ்படிவுள்ளவனாக இருப்பதாகச் சொன்னார். அதற்கு மருதமுனை அரசன் சொன்னான்; "நீதியுள்ள வீரபாண்டிய மன்னனுக்குத் துரோகஞ் செய்த நீர் எப்படி எனக்கு விசுவாசமுள்ளவராக இருப்பீர். அதனால் உம்மைப் புலியூருக்கு அனுப்பி வைக்கிறேன். நான் சிற்றரசன், பேரரசனுக்கு விசுவாசமுள்ளவனாகவும், அவன் சந்தேகம் கொள்ளக் கூடாதவ னாகவும் வாழவேண்டும். நிலையான தெளிந்த அறிவினனாக உடையவர்கள் அரசனுக்குத் தாம் விருப்பமானவர்கள் என்றெண்ணித் தகாத காரியங்களைச் செய்ய மாட்டார்கள்" என்றான்".

"பின் வேதவனத்தைப் புலியூருக்கு அனுப்பிவைத்தான். அகவே அன்பானவர்களே, தனக்கு மேலாக உள்ளவர்களை ஒரு போதும் குறைத்து மதிப்பிடக்கூடாது ; அவர்களோடு திமிராகவும் நடந்து கொள்ளக் கூடாது ; அவர்களை இகழவும்கூடாது. அப்படியல்லாது நடந்து கொண்டால் தூங்கும் புலியை எழுப்பி விட்டுப் பிரயாணஞ் செய்யும் வழிப்போக்கனின் நிலை உண்டாகும்"என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

*வெஞ்சின மன்னவன் வேண்டாத வேசெயினும்*
*நெங்சத்துட் கொள்வ சிறிதும் செயல்வேண்டா*
*என்செய்து அகப்பட்டக் கண்ணும், எழுப்புபவோ*
*துஞ்சு புலியைத் துயில்?*

தூங்கும் புலியை எழுப்பினால் எழுப்பியவர்களை அது கொன்று விடும். அது போல அரசனைப் பகைத்தால் அழிய வேண்டிய நிலை உண்டாகும் “**எழும்புபவோ துஞ்சு புலியைத் துயில்**” என்பது பழமொழி.

21 “அன்பானவர்களே, நல்லவர்களாக இருப்பவர்கள் வல்லவர்களாகவும் இருத்தல் வேண்டும். நல்லவர்களை விட வல்லவர்களைத் தான் உலகம் மதிக்கும். புகழ் மிக்க வலிமையுள்ள அரசர்களையெல்லாம் வென்று அவர்களுக்கு மேற்பட்டவர்களாக இருப்பவர்களையல்லாமல், மதயானைகள் கொண்ட மன்னர் தம்மை வென்ற பின் அடங்கியிருக்கும் நல்ல மன்னர்க்கு மதிப்பேயில்லை. வானம் பாடி என்ற பறவை மழைத்துளியை மட்டும் உண்டு வாழும். தாகம் ஏற்படும்போது மழைத்துளி கிடைக்கா விட்டால் சாகுமே தவிர வேறு நீரை அருந்தாது. அது போல செம்மையாகச் செயல்களைச் செய்பவர்களேயானாலும் எளியவர்களாய் இருந்தால் அவர்கள் இகழப்படுவார்கள். அதனால் அன்பானவர்களே, வலியவர்களாக வாழப் பழகிக் கொள்ளுங்கள்.”

“மயிலூர் மன்னன் மிக மிக நல்லவன். அவன் மக்கள் மீது அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்தான். அதனால் அந்நாட்டு

மக்கள் சட்டதிட்டங்களை மீறி வாழ்ந்தனர். அப்படிச் சட்ட திட்டங்களை மீறி வாழ்வோரை அரச படையினர் பிடித்து வந்தால் அவர்களுக்குப் புத்திமதிகள் கூறி அனுப்பிவிடுவான். அதனால் அரசபடையினர் தாமும் முறை கேடாக நடக்கத் தொடங்கினர். முதலமைச்சர் அரசனுக்குப் பல முறை புத்திமதிகள் சொல்வார்;

"மன்னா, வறியவர்களுக்கு உதவுதல், அறிவுடன் இருத்தல், ஊக்கமுடன் இருத்தல், அச்சமில்லாதிருத்தல் என்பன அரசரின் சிறந்த குணங்கள். ஆனால் மக்கள் எந்நாளும் அச்சத்துடன் தான் வாழ்கின்றார்கள். நீங்கள் நல்லவர்; பண்புகள் உள்ளவர்; இரக்கமுள்ளவர், மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுபவர். ஆனால் அரசருக்குரிய ஒரு சில கடமைகளைக் கடைப்பிடிக்கிறீர்களி ல்லை. யாராக இருந்தாலும் அவர்களின் குற்றத்தை ஆராய்ந்து யாருக்கும் இரக்கங்காட்டாமல் நடுவு நிலையில் நின்று தண்டனைகளை அளிப்பது தான் சிறந்த அரசனின் கடமை. குடி மக்களுக்குத் தன்னாலும் பிறராலும் துன்பங்கள் வராமல் காக்க வேண்டும் , அதே சமயம் கொடிய செயல்களைச் செய்பவர்களைத் தண்டிப்பது ஆழ்பவனுக்குப் பழியாகாது. அது அவனது கடமையாகும். அரசன் கொடிய குற்றங்களைச் செய்வோருக்கு மரண தண்டனை கொடுத்து நல்லோரைக் காப்பாற்றுவது, பயிர்களின் நன்மைக்காக உழவர்கள் களையைப் பிடுங்கி எறிவதற்குச் சமமானதாகும். தாங்கள் வீரர். பல தேசங்களைப் படையெடுத்து வென்ற பேரரசனின் வாரிசு. நால்வகைப் படைகளும் உள்ளன. ஆனால் தங்கள் இரக்க சுபாவம் நாட்டை இழக்கப்

பண்ணிவிடுமென நான் பயப்படுகிறேன். பக்கத்து நாட்டவர் முன்பு கிராமத்தின் எல்லைப்புறங்களைச் சூறையாடினர். இப்போ நாட்டுக்குள் புகுந்து சூறையாடுகின்றனர். அதனால் மக்கள் பயத்துடன் வாழ்கிறார்கள். அயல் நாடான கொக்கூரைத் தாக்கி எமது நாட்டோடு இணைக்க வேண்டும்” என்றார்”.

“சிறு சிறு விடயங்களுக்காக நாம் இன்னொரு நாட்டின் மீது போர் தொடுக்கக்கூடாது. எல்லையைப் பலப்படுத்துங்கள்” என்றான். அரசன். மக்கள் மன்னனைப் பற்றி இழிவாகக் கதைத்தனர். குதிரைப் படைத் தளபதி பாண்டியன் அரசனைக் கொன்று விட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். அவன் சட்டத்திற்கு மாறாக நடப்போரைப் பிடித்துத் தகுந்த தண்டனை கொடுத்தான். இரு முறை கொக்கூர் மன்னனுக்கு எச்சரிக்கை செய்தான். கொக்கூர் மன்னன் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. அதனால் படையெடுத்துச் சென்று கொக்கூரைக் கைப்பற்றினான்”.

“மக்கள் மகிழ்ந்து பெருங் கொண்டாட்டமாக அந்நிகழ்வை கொண்டாடினர். பாண்டியன் அல்லவா மன்னன். முன்னய மன்னன் இழிந்தவன் என இகழ்ந்தனர். அதனால் அன்பானவர்களே, உங்கள் கடமைகளை அஞ்சாது செய்யுங்கள். நீதியாக நடவுங்கள். தான தர்மங்களைச் செய்யுங்கள். ஆனால் வலிமையுள்ளவராக இருங்கள். எளியாரை இகழாதவர் உலகில் இல்லை” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

*ஒளியாரை மீதூர்ந்து ஒழுகுவது அல்லால்*

***களியானை மன்னர்க்கோ கைகடத்தல் ஏதம்***
***துளிண் பறவைபோல் செவ்வனோர்ப் பாரும்***
***எளியாரை எள்ளாதார் இல்.***

நல்லவரானாலும் வலிமையற்றவன் மதிக்கப்பட மாட்டான். **‘எளியாரை எள்ளாதார் இல்’** என்பது பழமொழி.

22 “அன்பானவர்களே, ஒருவன் தான் செய்பவை அனைத்தும் நல்லவையாக இருத்தல் வேண்டும் என்று நினைத்துச் செய்தாலன்றி நல்ல செயல்களைச் செய்ய மாட்டான். கீழானவன் ஒருவன் பத்து நல்லவர்களோடு சேர்ந்தாலும் அவனது குணம் மாறாது. பத்துப் பசுக்கள் ஒரு பன்றியுடன் சேர்ந்தால் அவை பன்றியின் குணத்தைப் பெறுமே தவிர, பன்றி பசுக்களின் குணத்தைப் பெறாது. சமுத்திரம் உப்பு நீரைக் கொண்டது. அச்சமுத்திரத்தில் எவ்வளவு ஆறுகள் எத்தனை ஆண்டு காலமாகச் சென்று கலக்கின்றன. இருந்த போதும் சமுத்திர நீரின் ஒரு பகுதியாவது நன்னீராகவில்லை. அத்துடன் அதன் உப்புச் சுவையும் குறைந்ததில்லை. அது போலத் தீயவர்களுக்கு நன்மை யானவற்றைப் பிறர் எடுத்துக் கூறினாலும் அவர்கள் திருந்த மாட்டார்கள். தானாகவும் எண்ணிச் செய்ய மாட்டார்கள். இத்தன்மை இவர்களுக்கு உயிர் போகும் வரை தீராத நோயாக அமையும். தீயவர்கள் அன்பின் மிகுதியால் நலம் செய்வாரைப் போலத் தோன்றினாலும் அவர்களின் உறவை நீக்குதல் வேண்டும்.”

“நாவலடியில் கஜமுகன் என்றொரு நல்லவர் வாழ்ந்தார். அவருடன் பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் சிவயோகன். எல்லாத் தீயசெயல்களையும் செய்பவன். அவன் கஜமுகனுடன் நண்பனாக இருந்தான். சிவயோகன் செய்யும் தீய செயல்களைப் பற்றிக் கஜமுகன் அறிவான். அதனால் எப்பொழுதும் அவன் சிவயோகனுக்குப் புத்திமதிகள் கூறுவான். ஒவ்வொரு முறையும் புத்திமதிகள் கூறும் போதும் சிவயோகன், ‘இனித் தான் தீய செயல்களில் ஈடுபடமாட்டேன் என்று கூறுவான். பின் அதை விட மோசமான தீய செயல்களைச் செய்வான். சிவயோகனுக்குத் திருடும் பழக்கம் உண்டு. கஜமுகன் தனவந்தன். அதனால் தினமும் சிவயோகனின் செலவுக்கெனப் பணம் கொடுப்பான். பணத்தை வாங்கிக் கொண்ட பின் திருடுவான்”

“சிவயோகன் மதுபானங்களை நன்றாகக் குடிப்பான். குடித்து விட்டுத் தெருக்களிலும் சந்திகளிலும் நின்று ஊரவருடன் சண்டை பிடிப்பான். மறு நாள் கஜமுகன் கண்டிப்பான். கதைக்காமல் விடுவான். இரண்டு மூன்று நாட்களின் பின் சிவயோகன் கஜமுகனின் காலில் விழுந்து மன்னிப்புக்கேட்பான். ‘இனிமேல் அப்படிச் செய்யமாட்டேன்’ என்று சத்தியஞ் செய்வான். பின்பு அதையே செய்வான்.”

“ஒரு நாள் சிவயோகனும் அவனது தீய நண்பர்களும் தனவந்தன் ஒருவனின் வீட்டில் திருடி விட்டனர். சிவயோகனது நண்பர்கள் சென்று விட்டனர். சிவயோகன் கஜமுகனின் வீட்டுக்கு

வந்தான். அப்பொழுது அங்கு வந்த காவல்துறையினர் சிவயோகனையும் கஜமுகனையும் கைது செய்தனர். இரண்டு நாட்களின் பின் திருடனான சிவயோகனுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காகக் கஜமுகனை எச்சரித்து விடுதலை செய்தனர்”.

“ஆகவே அன்பானவர்களே, தீயவர்கள் நல்லவர்களோடு சேர்வதால் திருந்த மாட்டார்கள். தீயவர்கள் என்று தெரிந்தால் அவர்களுடன் உறவாடுவதைக் கைவிட்டு விடல் வேண்டும். இல்லாவிட்டால் நல்லவருக்கும் துன்பம் வரும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**மிக்குப் பெருகி மிகு புனல் பாய்ந்தாலும்**
**உப்பொழிதல் செல்லா ஒலி கடல் போல் – மிக்க**
**இனநலம் நன்குடைய ராயினும், என்றும்**
**மனநலம் ஆகாவாம் கீழ்.**

நல்லவர்களின் தொடர்பினாலும் தீயவர்கள் திருந்த மாட்டார்கள். அவர்களின் மனம் என்றும் தீயதையே செய்யும். **‘என்றும், மனநலம் ஆகவாம் கீழ்’** என்பது பழமொழி.

23

“அன்பானவர்களே, ஒருவனைக் கெடுப்பதற்குத் தீயவர்கள் பல வழியை நாடுவார்கள். வீரன் யாரையும் கெடுக்க நினைக்க மாட்டான். வீரமில்லாத அறிவிலிகள் தான்கெடுக்க நினைப்பார்கள். ஒருவன் இன்னொருவனைக் கெடுப்பதற்காக நாள் தோறும் முயற்சிக்கிறான். அது நடைபெறவில்லை. அதனால்

அவனுடன் நண்பனாகிக் கெடுக்க முயன்றான். இப்படி நடப்பது எப்படியானதென்றால். அம்பினால் ஒருவனைக் கொல்ல முயன்றவன், எய்யப்பட்டவன் அதற்குத் தப்பி விட அவனைப் பின் தனக்குக் காவலாகக் கொள்வது போன்றது. அதனால் உங்களோடு பழகுபவர்களைப் பற்றி மிகவும் அவதானமாக இருங்கள். சிலர் உங்களைக் கெடுப்பதற்காகவும், நண்பர்களைப் போலப் பழகுவார்கள்"

"கடம்பவனம் என்ற காட்டில் வாழ்ந்த நரியொன்று அங்கு வாழ்ந்த மானைக் கண்டது. மான் நன்கு மேய்ந்து கொழு கொழுவென்றிருந்தது. அதன் தோலில் உள்ள புள்ளிகளும் மிகவும் அழகாக இருந்தன. நரி அந்த மானைக் கொன்று தனது இனத்தவர்களுக்கு விருந்து வைக்க விரும்பியது. பல முறை முயன்றும் நரியால் மானைப் பிடிக்க முடியவில்லை. அதனால் அது மானோடு நண்பனாக விரும்பியது. நரியைக் கண்டதும் மான் தப்பி ஓடிவிடும். அதனால் ஒரு நாள் ஒரு மரத்தின் மேல் ஏறி இருந்தது. அந்த மரத்தில் திராட்சைப் பழக்கொடி ஒன்று பழுத்துச் சிலிர்த்து இருந்தது. அந்த மரத்தில் கீழ் விழும் திராட்சைப் பழங்களைத் தின்பதற்காக மானும் வேறு மிருகங்களும் வருவது வழக்கம். அன்று மான் தனியே வந்தது. என்றுமில்லாதவாறு திராட்சைப்பழங்கள் நிலத்தில் விழுந்து கிடந்தன."

"மானுக்குச் சந்தேகமேற்பட்டது. பழங்களை உண்ணாது மேலே நிமிர்ந்து பார்த்தது. மரத்தின் மேல் நரி நின்றது. அதனால்

மான் அவ்விடத்தை விட்டு மெல்லச் சென்றது. அப்போது நரி, "நண்'பா" என்று அழைத்தது. நண்பா என்றழைத்தும் நிற்காது மான் செல்வதைக் கண்ட நரி சொன்னது; "நண்பா, என்னைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? உனது அழகான உடலமைப்பைப் பார்த்து ஆசை கொண்டு தான் உன்னை நண்பனாக்க முயற்சித்தேன். ஆனால் நீ என்னைக் காணும் வேளைகளில் ஓடித்தப்பி விடுகின்றாய். இப்பொழுது நான் மாமிசம் உண்பதில்லை. காய் கனிகளைத் தான் உண்டு வருகிறேன். உனக்காகத்தான் நான் காத்திருந்தேன். நில்" என்றது".

"அப்போது அதைக் கேட்டுக் கொண்டு நின்ற முயல் சொல்லியது ; "மான் நண்பரே, தீயவர்களின் வார்த்தைகளை நம்பக்கூடாது. அவர்கள் மற்றவர்களை வெற்றிகொள்ள முயல்வர். அதில் வெற்றியடையாவிட்டால் தந்திரமாகப் பேசிக்காரியமாற்ற முயல்வர். யாரை நம்பினாலும் குள்ளப் புத்தியுள்ள நரிகளை நம்பக்கூடாது. நட்பின் உயர்வைக் கருதாது, அதனால் என்ன கிடைக்கும் என்று பயனை எடைபோட்டுப் பார்ப்பவரும், அன்பினை நினையாமல் பொருளை மட்டும் நினைக்கும் விலை மாதர்களும், திருடர்களும் சமமானவர்கள். அத்துடன் இயலாதவர்கள் இனிமையாகப் பேசித் தம் காரியத்தை நிறைவேற்றப் பார்ப்பார்கள். முன்பொருமுறை ஆடு ஒன்றுடன் நரி நட்பாக இருந்தது. ஆட்டிற்கு நரியின் மீது எப்போதும் சந்தேகமிருந்தது. அதை நீக்குவதற்காக ஆடு ஒரு கயிற்றால் நரியைக் கட்டி மரத்தில் கட்டி வைத்திருந்தது. பல நாட்களின் பின் ஆட்டிற்கு நரியின் மீதிருந்த சந்தேகம்

நீங்கியது. அதனால் நரியை அவிழ்த்து விட்டது. ஒரு நாள் ஆடு வெளியே செல்லும் போது தனது குட்டியைப் பார்த்துக் கொள்ளும்படி கூறி விட்டுச் சென்றது. ஆடு சென்றதும் நரி ஆட்டுக் குட்டியைக் கொன்று தின்று விட்டுப் புலியொன்று வந்து ஆட்டுக்குட்டியைக் கொன்று தின்றுவிட்டது என்று கூறியது. அதை ஆடு நம்பியது. அதனால் நண்பரே, தீயவர்களின் நட்புத் தீமையே தரும். நாம் விரைவாக ஓடுவோம் என்றது." அதைக்கேட்டு மான் முயலுடன் சேர்ந்து ஒடியது. ஆகையால் அன்பானவர்களே, வீரமான எதிரியுடன் நட்புக் கொள்ளலாம். கோழையான எதிரியுடன் நடப்புக் கொள்ளக் கூடாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நலிந்து ஒருவர் நாளும் அடுபாக்குய் புக்கால்***
***மெலிந்துஒருவர் வீழாமை கண்டு – மலிந்தடைதல்***
***பூப்பிழைத்து வண்டு புடையாடும் கண்ணினாய்!***
***ஏப்பிழைத்துக் காக்கொள்ளு மாறு.***

ஒருவனை வெல்ல முயன்று முடியாது போனவர்கள், அவனுடன் நண்பராகிக் கெடுக்க முயல்வர். அவர்கள் நண்பரான போதும் என்றும் அவர்களது தீய எண்ணம் மாறாது. **'ஏப்பிழைத்துக் காக்கொள்ளுமாறு'** என்பது பழமொழி.

**24** "அன்பானவர்களே, தாமாகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதவர்கள் வலிமையான சேனையைத் தகர்த்து வெற்றி கொள்ளும் வீரனைப் பகைத்துக் கொள்ளலாமா? பலவீனனான ஒருவன் வீரனைப் பகைத்துக் கொண்டானேயானால்

அவன் அழிவான். அல்லது அவனுக்குப் பித்துப் பிடித்திருக்கும். ஆகையால் வலிமையானவர்களைப் பகைக்கக் கூடாது.”

“கடம்பவனத்தில் பலம் மிக்க யானை ஒன்று வாழ்ந்து வந்தது. ஊன் உண்ணாத மிருகங்கள் யாவும் யானையின் தலைமையில் மிகவும் இன்பமாக வாழ்ந்து வந்தன. இதனால் நரிக்குத் தினமும் வயிறாற உணவு கிடைப்பதில்லை. சிறு சிறு பிராணிகளை வேட்டையாடி உண்டு வந்தது. யானையின் தலைமையில் வாழும் முயல், மான், மரை, ஒட்டகச் சிவிங்கி, காட்டுக்குதிரை, காட்டு மாடு போன்றவற்றின் கொழு கொழுப்பான உடலைப் பார்த்து நரி எந்நாளும் நாவூறியபடி இருந்தது. அதனால் அது சிங்கத்திடஞ் சென்று சொன்னது ; “இராசாவே, கடம்பவனத்தில் ஊனுண்ணாத காட்டு மிருகங்கள் கொழுத்துப் பெருத்துள்ளன. மான்களையும், மரைகளையும் அடித்து உண்டால் எப்படி இருக்கும். ஆனால் யானை விடாது” என்றது”.

“அதற்குச் சிங்கம் சொல்லியது; “நரியே நீ புத்தியள்ளவனென்று நினைத்தேன். மடையனைப் போலப் பேசுகிறாய். போர்க்காலத்தில் தாவிப் பாயும் குதிரைகள் பூட்டிய தேர்களையே தூக்கி வீசிப் பந்தாடும் யானையின் பலத்தை அறியாது பேசுகிறாய். நானே அதன் பலத்திற்கு மதிப்புக் கொடுத்துள்ளேன்” என்றது.

“இராசாவே, நான் தங்களை மதியாமல் கூறுகின்றேன் என்று நினைக்காதீர்கள். நீங்கள் தான் காட்டிற்கு இராசா.

அப்படியிருக்க யானை தான் தோன்றித் தனமாக நடந்து கொள்கிறது. அதைச் சொன்னாலும் உங்களுக்குப் புரியுதில்லை. அதனால் நான் தந்திரத்தால் யானையைக் கொல்வேன்” என்றது.”

“ஆழம் அறியாது காலை விடக்கூடாது. அவதானமாகச் செயற்படு. உனது தந்திரத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு” என்றது சிங்கம். அப்படிச் சிங்கம் சொன்னதும் மகிழ்வின் உச்சிக்குச் சென்ற நரி உயரமான ஒரு மரத்தில் ஏறி யானையின் வரவுக்காகக் காத்திருந்தது. யானை மான்களுடனும், முயல்களுடனும் வந்து கொண்டிருந்தது. தருணம் பார்த்து மரத்தில் இருந்து யானை மீது குதித்த நரி, அதைப் பல முறை கடித்துக் காயப்படுத்தி விட்டு குதித்து ஓடித் தப்பியது. ஓடும் போது சொன்னது ; “யானையே உனக்கு நான்தான் எமன். அவதானமாக இரு” என்று சொல்லியபடி ஓடியது.

“நாட்கள் சில சென்றன. நரி மிகவும் உயரமாக வளர்ந்து நின்ற கோங்க மரத்தின் உச்சியில் குழைகளுக்குள் மறைந்திருந்தது. உயரமான கோங்க மரத்தின் உச்சியில் இருக்கும் தன்னை யாரும் கண்டு கொள்ளமாட்டார்கள் என்று அது நினைத்தது.”

“யானை தாக்கப்பட்ட பின்பு அதன் நண்பர்களான மிருகங்களும், பறவைகளும் நரியைத் தாக்குவதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தன. நரி பகலில் கோங்கை மரத்தின் உச்சியில் ஏறிஇருக்கும். இரவில் மரத்தால் இறங்கி உணவு தேடும்.

கோங்கை மரத்தின் உச்சியில் இருந்த நரியைக் கிளியும், புறாவும் கண்டு விட்டன. அவை யானையைச் சந்தித்து அதைச் சொன்னன. யானை கம்பீரமாக நடந்து வந்து கோங்கை மரத்தை அண்ணாந்து பார்த்தது. குழைக்குள் மறைந்திருந்த நரியை அதனால் கண்டு கொள்ள முடியவில்லை. கிளியும், புறாவும் கோங்கை மர உச்சிக்குச் சென்றன. ஆனால் நரியைக் காணவில்லை. யானை கோங்கை மரத்தைப் பிடித்து உலுப்பியது. கோங்கை மரக் கொப்புகள் முறிந்து விழுந்தன. கொப்புகளோடு நரியும் கீழே விழுந்து இறந்தது.

"அன்பானவர்களே, கோங்கை மரம் வைரமில்லாதது, பலமான ஒருவன் பிடித்து இழுத்தால் கொப்புகள் யாவும் முறிந்து விடும். உயரமானது, மொத்தமானது என்று எண்ணி யாரும் அதைத் தேவைக்குப் பயன்படுத்துவதில்லை" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தாமேயும் தம்மைப் பிறந்தர ஆற்றாதார்***
***வாமான்தேர் மன்னரைக் காய்வது எவன்கொலோ?***
***ஆமாஉ களும் அணிவரை வெற்ப! கேள்***
***ஏமரார் கோங்கு ஏறினார்.***

கோங்கை மரத்தில் ஏறினால் கிளை முறிந்து விழுந்து விடும். பலவீனர்கள் வலிமையுடையவர்களுடன் பகைத்தால் அவர்களால் பலவீனர்கள் அழிக்கப்படுவர் '**ஏமரார் கோங்கு ஏறி**னார்' என்பது பழமொழி.

25

"அன்பானவர்களே, முற்பிறவியிலே ஆராயமல் ஒவ்வொரு வரும் செய்த செயல்கள் தான் இப்பிறவியில் வினைகளாகச் சூழ்ந்து ஒவ்வொருவரையும் வருத்துகின்றதே தவிர வேறு எவையும் வருத்துவதில்லை. இதை உணராதவர்கள் தாம் தம்மை இனசனங்களும் நண்பர்களும் பிறரும் வருந்துவதாக நினைத்துத் துன்பப்படுகிறார்கள். காரணமின்றிச் செயல்கள் நடைபெற மாட்டா. நோய் வந்தாலும் காரணமிருக்கும். அது போலப் பணம் வந்தாலும் காரணமிருக்கும். இவை போன்று தான் துன்பங்களும், இன்பங்களும் காரணத்துடன் வருகின்றன. ஒருவனுக்குப் பணம் வருவதானால் ஏதாவது ஒரு காரணம் இருக்கும். அது போல பணம் வராமைக்கும் காரணம் இருக்கும். அதனால் வரும் துன்பங்களையும், இன்பங்களையும் பிறர் எமக்குச் செய்கின்றனர் எனக்கருதாது நமக்கு நாமே செய்கின்றோம் என்றும், அவற்றை நாமே வரவழைத்துக் கொள்கின்றோம் என்றும் எண்ணி நிம்மதியடையுங்கள்."

"நாவலடியில் ஏகாம்பரம் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெரும் தனவந்தன். ஆனால் கஞ்சன். எச்சிற்கையாற் கூடக் காகம் கலைக்க மாட்டார். அதே ஊரில் சின்னத்துரை என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் பரம ஏழை. அன்றன்றே உணவுக்குக் கஷ்டப்படுபவர். ஆனால் மிகவும் நல்லவர் ; அறிவாளி ; தன்னாலான உதவிகளைப் பிறருக்குச் செய்பவர்".

“ஒரு முறை சின்னத்துரை நோய் வாய்ப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். ஊரே திரண்டு வந்து அவரைக் கவனித்தது. அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தது. இதே போல ஏகாம்பரம் நோய் வாய்ப்பட்டார். அவரை அவரது மனைவி மக்களே கவனிக்கவில்லை. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்குக் கூலி கொடுத்தாலும் நின்று பராமரிக்க யாரும் முன்வரவில்லை.”

“ஏகாம்பரத்தின் மகளுக்குத் திருமணம் பேசினார்கள். பெரிய பெரிய உத்தியோகத்தர்கள் எவரும் அவரின் மகளைத் திருமணம் செய்ய முன்வரவில்லை. கடைசியாக அவரது மருமகன் அவளைத் திருமணஞ் செய்தான். அதன்பின் அவன் பெருங் குடிகாரனாக மாறினான். அவன் தனது மனைவியையும், மாமன், மாமியையும் அடிக்கடி தாக்கிப் பணம் பறிப்பான். சின்னத்துரையின் மகளை அந்தக் கிராமத்தில் உள்ள ஒரு தனவந்தனின் மகன் விரும்பித் திருமணஞ் செய்தான். இதற்குக் காரணம் முற்பிறப்பில் செய்த வினைகள் தான். முற்பிறப்பில் செய்த பழிபாவங்கள் இப்பிறப்பில் அவன் வசதியுள்ளவனாக இருந்தாலும் அவனை அனுபவிக்க விடாது. அதுபோல முற்பிறவியில் செய்த புண்ணியங்கள் இப்பிறவியில் வசதியில்லாத வாழ்வு கிடைத்தாலும் வந்துதவி நன்மைகள் செய்யும்.”

“ஏகாம்பரத்தை மருமகன் அடிக்கடி தாக்கிப் பணம் பெறுவது அவரது முன் வினைப்பயனேயாகும். அவரை அவரது மருமகன்

தாக்கவில்லை. அவர் செய்த பாவங்கள் சூழ்ந்து வந்து தாக்குகின்றன. என்பதை நினைவில் கொள்ளுங்கள்" .

"முற்பிறவியில் செய்த பாவங்களை இப்பிறவியில் நீக்கலாம். ஏகாம்பரம் வசதிகள் இருந்தும் கஞ்சத்தனமாக வாழ்வதால் பாவங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. ஒரு நாள் ஏகாம்பரத்தின் மருமகன் ஏகாம்பரத்தை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். அவர் சிவன் கோயில் மடத்திற்குச் சென்று வாழ்கிறார். சின்னத்துரை மிக மிக வசதியான சொகுசு வாகனத்தில் மகளுடனும் மருமகனுடனும் பேரப்பிள்ளைகளுடனும் புண்ணிய தலங்களுக்குச் சென்று வருகிறார். ஆகையால் அன்பானவர்களே, உங்களைத் தாக்குவது நீங்கள் செய்த பாவங்கள் தான். அதனால் பாவஞ் செய்யாது வாழுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***பண்டு உருத்துச் செய்த பழவினை வந்ததெம்மை***
***இன்றுஒறுக்கின்ற தெனவறியார் - துன்புறுக்கும்***
***மேவலரை நோவதென்? மின்னேர் மருங்குலாய்!***
***ஏவலாள் ஊருஞ் சுடும்.***

பகைவர்களால் உண்டாகும் துன்பங்களையும் நம் பழவினைப் பயனால் வருகின்றனவென்று கருதல் வேண்டும். பகைவர்கள் அவர்களின் ஊழ்வினையின் ஏவலர்கள் என்பதை உணருதல் வேண்டும். '**ஏவலாள் ஊருஞ் சுடும்**' என்பது பழமொழி.

26

“அன்பானவர்களே, குடிப்பிறப்பு ஒரு போதும் மாற்றமடையாது. உயர்குடியில் பிறந்தவரிடத்து நடுவு நிலையும், நாணமும் இருக்கும். அவர்கள் ஒழுக்கம் உடையவர்களாகவும் உண்மை பேசுபவர்களாகவும் தம் வாழ்நாள் முழுவதும் வாழ்வர். அத்துடன் முகமலர்ச்சி, கொடுத்துதவும் தன்மை, இன்சொல், பிறரை இழிவாக எண்ணாமை ஆகிய பண்புகள் அவர்களிடம் எப்போதும் இருக்கும். இவர்களுக்குக் கோடிகோடியாய்ப் பொருளைக் கொட்டிக் கொடுத்தாலும், தன் நிலையை இழக்க மாட்டார்கள். அத்துடன் நேர்மைக்குப் பயப்படுபவர்களே தவிரத் தகுதிக்குப் பயப்பட மாட்டார்கள். இவர்களுக்குப் பெரும் வறுமை வந்த போதும் அவர்களது குடிப்பண்பு மாறாது.”

“நல்ல எருதிற்குப் பிறந்த கன்றானது தாய் பசு இறந்த போது பாலில்லாமல் தவித்தது. புல்லை அதனால் மேய முடியவில்லை. எலும்பும் தோலுமாகி உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு வாழ்ந்தது. பின் ஒருவாறு தேறிப் பலமுடைய எருதானது. அதன் பின் தன் தகப்பனைப் போல நல்லெருதானது. அது போல நல்ல குடியிற் பிறந்தவர்கள் வறுமைப்பட்ட போதும் தன் குடிப்பண்பை இழக்க மாட்டார்கள்.”

“சின்னத்துரை உயர் குடியிற் பிறந்தவர். ஆனால் பரம ஏழை கமம் செய்து தனது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். அவரிடம் ஆலோசனை கேட்டும், விதை தானியங்கள் கேட்டும், உதவிகள் கேட்டும் பலர் செல்வார்கள், ஒரு முறை கத்தரிச் செடிகளுக்கு நோய்

ஏற்பட்டு விட்டது. சின்னத்துரை விவசாயி. மற்றவர்களுக்கும் தேவைப்படும் என்று நிறைய விதைகளை எடுத்து வைப்பர். அதனால் அவரிடம் ஏராளமான கத்தரி விதைகள் இருந்தன. அவர் நாற்று மேடை போட்டார். அம்முறை யாரிடமும் கத்தரிக் கன்று இல்லாததால் எல்லோரும் சின்னத்துரையிடம் வந்தனர். கத்தரி விதை வைத்திருந்த சிலர் நாற்று மேடை போட்டுக் கத்தரிக் கன்றுகளைக் கூடிய விலைக்கு விற்றனர். ஆனால் சின்னத்துரை இலவசமாகவே கொடுத்தார். தனவந்தர்கள் பணம் கொடுத்த போது ; “இது லக்சுமி, பணம் பெறக்கூடாது.” என்று சொன்னார்”.

“அந்த ஊரில் வாழும் சின்னத்தம்பி என்பவன் சாதியின் குறைந்தவன்; குடிகாரன் அவன், உயர்சாதியினரை வாயில் வந்தபடி ஏசுவான். அதனால் அவனை ஊரவர் மதிப்பதில்லை. ஒரு நாள் அவன் குடித்து விட்டு வரும் போது விபத்துக்குள்ளாகி நினைவை இழந்தான். ஊரவர்கள் அவனைக் கொண்டு சென்று வைத்தியசாலையில் அனுமதித்தனர். வைத்தியர் அவனுடன் தங்கியிருந்து அவனுக்குச் சேவை செய்ய ஒருவர் தேவையென்றார். அவனுடைய மனைவி அவனது நிலையைக் கூறி இனத்தவர்களிடம் உதவி கேட்டாள். யாரும் உதவ முன்வரவில்லை. சின்னத்தம்பியோடு சேர்ந்து குடித்து விட்டுக் கலகஞ் செய்பவன் கணபதி. சின்னத்தம்பியின் மனைவி கணபதியிடம் சென்று தனது கணவனுக்கு உதவி செய்யுமாறு கேட்டாள் ; “அக்கா, நான் இரவில் அவருடன் தங்கியிருக்கிறேன். உழைக்கா விட்டால் அடுப்புப் புகையாது. அத்துடன் கைச் செலவுக்கும் காசிராது” என்றான்”.

“சின்னத்தம்பியின் மனைவி சின்னத்துரையிடஞ் சென்று தனது நிலையைக் கூறினாள்; “பார்வதி, உனக்கு என்னுடைய நிலைமை தெரியும். என்னிடம் பெரிதாகப் பணமில்லை. வைத்தியசாலையில் நின்று பராமரிக்கத் தினமும் ஆயிரம் ரூபா கொடுக்க வேண்டும். அவ்வளவு பணத்திற்கு நான் எங்கே போவது..? அதனால் நான் பகலில் சின்னத்தம்பியைப் பராமரிக்கின்றேன்.” என்றார”.

“சின்னத்தம்பியின் மனைவி திகைத்துப் போனாள். “ஐயா, நீங்கள் உயர் சாதிக்காரர்…” என்று அவள் கூறும் போது சின்னத்துரை சொன்னார் ; “மனிதனுக்கு மனிதன் உதவ வேண்டுமே தவிரச் சாதி பேதம் பார்க்கக் கூடாது. நீ வீட்டுக்குப் போ. நான் வைத்தியசாலைக்குப் போகிறேன்” என்றார்.

“ஆகையால் அன்பானவர்களே, உயர் குடியில் பிறந்தோர் வசதிகள் இல்லாவிட்டாலும் தம் குடிப்பெருமையை இழக்குமாறு நடந்து கொள்ள மாட்டார்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஈட்டிய ஒண்பொருள் இன்றெனினும் ஒப்புரவு***
***ஆற்றும் மனைப்பிறந்த சான்றவன் - ஆற்றவும்***
***போற்றப் படாதாகிப் புல்லின்றி மேயினும்***
***ஏற்றுக்கன்று ஏறாய் விடும்.***

குடிப்பிறப்பின் சிறப்பு ஒரு போதும் சான்றோனை விட்டு அகலாது. **‘ஏற்றுக் கன்று ஏறாய் விடும்’** என்பது பழமொழி.

27 “அன்பானவர்களே, எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்தல் வேண்டும். தம்மை மதியாத ஒருவரை மதித்துத் தமது வீட்டுக்கு அழைத்துச் செல்வது எப்பொழுதும் தீமையையே தரும் என்பதை மனதில் வைத்திருங்கள். சிறுபிள்ளைகளைப் பெற்றோர் நீண்ட தூரம் செல்லும் போது தூக்கிச் செல்வர். ஆனால் வளர்ந்த பிள்ளைகளை நீண்ட தூரம் அழைத்துச் செல்லும்போது பிள்ளைகள் தம்மைத் தூக்கிச் செல்லுமாறு கோரி அழுதாலும் பெற்றோர் தூக்கிச் செல்ல மாட்டார்கள். ஏனென்றால் அது பெரும் துன்பம் தரும். அது போலத் தான் தம்மை மதியாதவனை ஒரு போதும் மதிக்கக்கூடாது. மீறி மதித்தால் அதனால் பெரும் பெரும் துன்பங்கள் தான் வரும்.”

“சின்னத்துரை பரம ஏழை, ஏகாம்பரம் பெருந்தனவந்தன். சின்னத்துறின் இனத்தவன். அவன் யாரையும் மதிப்பதில்லை. அதிலும் சின்னத் துரையை மதிப்பதேயில்லை. சின்னத்துரை ஏழையென்பதால் தன்னிடம் கை கட்டி, வாய் பொத்தி நின்று சேவகஞ் செய்ய வேண்டுமென விரும்புவான். அதனால் அவன் பல சந்தர்ப்பங்களில் சின்னத்துரையை அவமதித்துள்ளான். சின்னத்தம்பி கீழ் சாதிக்காரன். அவனுக்கு உதவி செய்த சின்னத்துரையை அவமதிக்க வேண்டும் என்று நினைத்திருந்தான். “ஒரு நாள் சிவன் கோயில் திருவிழாவில் சின்னத்துரையைக் கண்ட

ஏகாம்பரஞ் சொன்னான் ; "பணம் தேவையெண்டால் வீட்டை வாதாறன். அதற்காக் கீழ்சாதிக்காரனுக்கு மலசலம் எடுத்துப் பார்க்கிறதே..? உன்னாலை எமது மானமும் போகிறது." சின்னத்துரை எதுவும் பேசவில்லை. சில தினங்களின் பின் சின்னத்துரையின் மகளுக்குத் திருமணம் நடைபெற்றது. ஏகாம்பரத்தின் சகோதரன் தான் மாப்பிள்ளையின் தகப்பன். அதனால் சின்னத்துரை மாப்பிள்ளையின் தகப்பனிடஞ் சென்று சொன்னார் ; " மச்சான், ஏகாம்பரம் உங்கள் சகோரன். ஆனால் என்னைக் காரணமின்றி அவமதிக்கும் ஒரு பகைவன். என்னைக் கண்டவுடன் காறி உமிழ்வார். கண்டபடி பேசுவார். இருப்பினும் நான் எதுவும் பேசுவதில்லை. வீணர்களுடன் கதைத்தால் பகை அதிகரிக்குமே தவிரக் குறையாது. காரணமின்றி என்னை அவமதிக்கும் அவரை எனது மகளின் திருமணத்திற்கு அழைக் கநான் விரும்பவில்லை. இது பற்றி நீங்கள் தவறாக நினைப்பீர்களா..?" என்று கேட்டார்."

"அதற்கு மாப்பிள்ளையின் தகப்பன் சொன்னார் ; "மச்சான், இது உங்கள் தன்மானப் பிரச்சினை. ஒருவரின் சொந்த விருப்பு வெறுப்புக்களில் தலையிடும் உரிமை எனக்கில்லை. அவர் உங்கள் வீட்டில் சம்பந்தம் செய்யக்கூடாது என்று கண்டிப்புடன் சொன்னவர். அப்படி மீறிச் செய்தால் சாவீட்டிற்குக் கூடக் கலந்து கொள்ள மாட்டேன் என்றவர். சம்பிரதாயத்திற்காக நாங்கள் அவருக்கும் சொல்லவிருக்கின்றோம். நாம் மாப்பிள்ளை பகுதியினர் என்பதற்காக உங்கள் மீது எமது விருப்பத்தைத் திணிக்க மாட்டோம்.

நீங்கள், உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். எமக்காக நீங்கள் அங்கு சென்றால் பெரும் அவமானத்திற்குள்ளாவீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்கள் மகளை எனது மகன் விரும்பினான் என்பதற்காக நான் சம்மதித்தேன் என்று நினைக்காதீர்கள். உங்களுடைய நல்ல குணங்கள் தான் என்னைக் கவர்ந்தன. பணம் பத்தும் செய்யும். அதனால் அதன் தன்மையை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். நீங்கள் ஏழை. பெரும் பணக்காரனான நான் உங்கள் குணத்திற்காக உங்களை வீடு தேடி வந்து பெண் கேட்டேன். எனது அண்ணனான ஏகாம்பரத்திடம் என்னிலும் கூடியளவு பணம் இருக்கிறது. ஆனால் யார் அவரை மதிக்கிறார்கள். அவரது மகள் வயது சென்றும் திருமணமாகாது இருக்கிறாள். அதைப்பற்றியும் அவர் கவலைப்படுபவராகக் காணப்படவில்லை. இதெல்லாம் அவரவரின் கன்ம வினை. உங்களின் எந்த விஷயத்திலும் நானோ அல்லது எனது மகனோ தலையிட மாட்டோம். ஏனென்றால் நீங்கள் நல்லதைத் தவிர வேறு எதையும் அறியாதவர்." என்றார்".

"ஆகையால் அன்பானவர்களே, பகைவர்களை ஒரு போதும் மதித்து நடவாதீகள். அத்துடன் பகைவன் நெருங்கிய உறவினனாலுங் கூட அவனை வீட்டிற்கு அழைத்துச் செல்லாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***முகம்புறத்துக் கண்டால் பொறுக்கலா தாரை***
***அகம்புகுதும் என்றிரக்கும் ஆசை, இருங்கடத்துத்***
***தக்க நெறியிடைப் பின்னும் செலப்பெறார்***
***ஒக்கலை வேண்டி அழல்.***

தம்மை மதியாதவருக்கு மதிப்புக் கொடுத்தலாகாது. மதிப்புக் கொடுத்தாலும் தீமையே உண்டாகும். '**ஒக்கலை வேண்டி அழல்**' என்பது பழமொழி.

28 "அன்பானவர்களே, பகைக்கு எப்பொழுதும் அஞ்சியே தீர வேண்டும். இல்லாவிட்டால் தளர்ச்சி உண்டாகும் வேளையில் அது பெருந் துன்பங்களைக்கொடுக்கும். பகை, பகை கொண்டவனையும் தாக்கி, அவனைச் சேர்ந்தவர்களையும் தாக்கி அழிக்கும். உட்பகை ஒருவனுக்கு இருக்குமானால் அவனது உயிரை அழிக்கக் கூடிய குற்றங்கள் பலவற்றை அது உருவாக்கும். பகையை முற்றாக ஒழிக்க வேண்டும். அதற்காகச் சாம, பேத, தான, தண்டம் என்னும் நான்கு முறைகளைக் கையாண்டு பகையை அழித்தல் வேண்டும். உள்ளத்துள் கபடமில்லாமல் இனிதாகப் பேசுதல், மாண்புடைய பொருட்களைக் கொடுத்தல், தனது வல்லமையால் வசப்படுத்தல், முறைமையாலே முன்னர் அவரைப் பகைத்துக் கெட்டவர்களுக்கு நடுநிலையாகச் சென்று அவரது பகையை அழித்தல் ஆகியவற்றால் தான் பகையை அழிக்கலாம். மீண்டும் சமாதானம் செய்வதால் பகை முற்றாகத் தீராது."

'நாரையூர் மன்னன் நல்லவன்; வல்லவன்; எவரோடும் தேவையில்லாது முரண்படாதவன். குடிகளைத் தன்னுயிரைப் போல நேசிப்பவன். காரைநகர் மன்னன் தீயவன். தீய வழிகளில் பொருள் தேடுபவன். நாரையூரும் காரை நகரும் அருகருகே இருக்கும் நாடுகள். அதனால் காரைநகர் மன்னன் நாரையூர் எல்லைப்பிரதேச

மக்களைத் துன்புறுத்தி வந்தான். அதனால் எல்லைப் புற மக்கள் இடம் பெயர்ந்தனர்".

"நாரையூர் மன்னன்தனது முதலமைச்சரைக் காரைநகருக்கு அனுப்பி நிலைமையை விளக்கினான். இருந்தும் காரை நகர் மன்னன் ஒப்புக்கு ஒப்புக் கொண்டு விட்டுத் திரும்பவும் கொள்ளைகளில் ஈடுபட்டான். பின் நாரையூர் மன்னன் கொள்ளையிட வரும் காரை நகர்த்திருடர்களைப் பிடித்து எச்சரித்து விட்டுப் பொன்னும் பொருளும் கொடுத்து இனிமேல் இவ்வாறு நடக்க வேண்டாம் என்று கூறி அனுப்பினான்".

"அதன் பின்பும் காரைநகர் மன்னன் திருந்தவில்லை. அதனால் காரைநகர் மன்னரின் மாமனான சிங்கபுரம் மன்னனுக்குக் காரைநகர் மன்னனைப் பற்றித் தெரிவித்து அவரைக் கொண்டு காரைநகர் மன்னனுக்குப் புத்திமதிகள் கூறிவித்தான். அதையும் அவன் கேட்கவில்லை".

"சிங்கபுர இளவரசிக்கு நாரையூர் இளவரசனைத் திருமணம் செய்ய சிங்கபுரமன்னன் விரும்பினான். அதை நாரையூர் மன்னன் விரும்பவில்லை. அதனால் பகைகொண்ட சிங்கபுர மன்னன் காரை நகர் மன்னனை ஏவி நாரையூருக்குத் துன்பங்கள் செய்துவித்துக் கொண்டிருந்தான்".

“அன்று நாரையூர் அரச சபைகூடிய போது முதலமைச்சர் சொன்னார்; “மன்னா, நாம் காரைநகர் மன்னன் மீது பகை கொள்ளவில்லை. சிங்கபுரமன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கவே காரைநகர் மன்னன் எமது மக்களுக்கு கொடுமை செய்கிறான். நாம் அரச நீதிப்படி சாமபேத தானமுறைகளைக் கையாண்டு விட்டோம். இனித் தண்டனைகொடுத்துத்தான் பகையைத் தீர்த்துக் கொள்ளல் வேண்டும். அதுதான் வழி. சாம பேத தான முறைக்கு அஞ்சாத பகைவனை அழித்தே தீர வேண்டும். எமது படையை இரண்டாகப் பிரித்து ஒன்றை காரைநகருக்கும் மற்றதை சிங்கபுரத்திற்கும் அனுப்புவோம். இரண்டு நாடுகளையும் ஒன்றாகத் தாக்கி அழிக்கும் வல்லமை எமது படைகளுக்கு உண்டு” என்றார்”.

“நாரையூர் மன்னன் அதற்குச் சம்மதித்தான். மறு நாள் படையெடுப்பு நடைபெற்றது. ஒரு வாரத்தில் காரை நகரும், சிங்கபுரமும் நாரையூர் படைகள் வசமாகின”.

“ஆகையால் அன்பானவர்களே, ஒருவருடன் பகை கொள்ளக்கூடாது. தவறிப் பகை கொண்டால் அதை நீக்கிவிடல் வேண்டும். அன்பாகப் பேசி நீக்கலாம் ; பொருள் கொடுத்து நீக்கலாம் ; இல்லா விட்டால் இன்னொரு பெரியாரைக் கொண்டு நீக்குவிக்கலாம். அது சரிவராவிட்டால் பகையை அழித்து விடல் வேண்டும். ஒடித்து எறிவதால் பகை தீராது. அதாவது இது சிறுசிறு சமாதானங்களால் பகை தீராது.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***மறையாது இனிது உரைத்தல் மாண் பொருள் ஈதல்***
***அறையான் அகப்படுத்துக் கோடல் - முறையால்***
***நடுவணாச் சென்றவரை நன்கறிதல் அல்லால்***
***ஓடியெறியத் தீரா பகை.***

வழுவழுப்பாகப் பேசாது பகையை முற்றாக அகற்றுதல் வேண்டும். பகையை அகற்ற சாமபேத தான தண்ட முறைகளைப் பயன்படுத்தலாம். **'ஓடிஎறியத் தீரா பகை'** என்பது பழமொழி.

29

"அன்பானவர்களே, எப்பொழுதும் நீதியுடனும் நியாயத்து - டனும் நடந்து கொள்ளுங்கள். அயலவர்கள், நண்பர், பகைவர் என எத்தரப்பினரோடும் நடுநிலையோடு ஒருவன் நடக்க வேண்டும். பொதுவாக ஒவ்வொரு மனிதர்களும் நடுவு நிலைமை தவறக்கூடாது. மேலான பதவிகளில் உள்ளோர் மிகவும் கவனமாக நடந்து கொள்ளாவிட்டால் அவர்கள் நடுவுநிலை தவறியவர்களாவர்".

"ஒருவனுக்கு நன்மை வரும். அது போலத் தீமையும் வரும். இது இயற்கை. அந்த வேளையிலும் நடுவு நிலைமை தவறாது நடப்பவரின் புகழ் அவன் இல்லாத காலத்திலும் இருந்து அவனது பெயரைச் சொல்லும். அதே போல நடுவு நிலை தவறும் ஒருவனின் பழி காலங்கடந்து நின்று அவனை இழிநிலைக்குள்ளாக்கும். அதனால் நடுவு நிலையில் இருந்து வாழுங்கள். ஓர் அரசன் நீதிநெறி தவறாது நாட்டை ஆளவேண்டும். மேலதிகாரிகள் பராபட்சம் காட்டாது நடந்து கொள்ளல் வேண்டும். நடுவு நிலை தவறினால் அது பெரும் பழியை மட்டுமல்ல நீங்காத வடுவையும்

அவமானத்தையும் அவனுக்கும் அவனது சந்ததியினருக்குக் கொடுக்கும். இந்நிலை ஒரு தாயானவள் தனது ஒரு பிள்ளைக்கு நீரும், மற்றப் பிள்ளைக்குப் பாலுங் கொடுப்பதைப் போன்றதாகும்.”

“மணியூரில் உலகநாதன் என்றொரு தனவந்தன் இருந்தான். அவனிடம் பலர் வேலை செய்தனர்.அவன் தனது எதிரிகளைப் பற்றிக் கூறுபவர்களுக்கும், தனக்கு வேண்டியவர்களுக்கும் அதிக பணங்கொடுப்பான். ஒழுங்காக வேலை செய்பவர்களுக்குப் பணம் கொடுக்க மாட்டான். அதனால் அவனிடம் வேலைசெய்வோர். இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் கூறிப்பணம் பெற்று வந்தனர்”.

“உலகநாதனிடம் மிகுந்த விசுவாசத்துடன் உழைப்பவன் நாகநாதன். அவன் வேலைக்கென வந்தால் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை ஒழுங்காகச் செய்துவிட்டுச் சென்று விடுவான். உலகநாதனிடஞ் சென்று அவனைப் போற்றிப் புகழ்வதில்லை. மற்றவர்களைப் பற்றிக் குறை சொல்வதில்லை மற்றவர்கள் நாகநாதனை அவனது பகைவனான ஏகாம்பரத்தின் கையாள் என்றனர். உலகநாதனிடம் வேலை செய்யும் சிலர் பணத்திற்காக ஏகாம்பரத்திடஞ் சென்று உலகநாதனின் இரகசியங்களைச் சொல்லிப் பணம் பெற்று வந்தனர்.”

“தனது இரகசியங்களை ஏகாம்பரத்திற்கு நாகநாதன் தான்சொல்கிறான் என்று நம்பிய உலகநாதன் நாகநாதனை

அழைத்துச் சொன்னான் ; “நாகநாதா, எனது இரகசியங்கள் யாவும் எனது எதிரியான ஏகாம்பரத்திற்குத் தெரிகிறது. இதை நீதான் சொல்லுகிறாய், என நான் நினைக்கிறேன். அதனால் இன்றிலிருந்து உன்னை நீக்குகிறேன். நீ ஏகாம்பரத்திடஞ் சென்று வேலை பெற்று வாழ்” என்றான்”.

“இதை எதிர்பாராத நாகநாதன் சொன்னான் ; “ஐயா, நான் நீதி தவறாது வாழ்பவன். அத்துடன் ஏகாம்பரம் யார் என்று கூட எனக்குத் தெரியாது. மேலானவர்கள் எப்பொழுதும் நடுவுநிலை தவறக்கூடாது.செய்திகளை ஆராயாது நம்பக்கூடாது. எனக்குத் தொழில் தரும் எசமான் நீங்கள். அதனால் நான் எப்பொழுதும் உங்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்வேன். மேலாளர் தம்மிடம் வேலை செய்வோரின் தன்மைகளைத் தெரிந்து, நீதியாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ளல் வேண்டும். அத்துடன் தன்னிடம் வேலை செய்பவர்களைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். அப்படியில்லாது ஒருவனை நம்பியும், இன்னொருவனை நம்பாதும் நடப்பதால் தீமையே உண்டாகும் . இது ஒரு தாய்ஒரு பிள்ளைக்கு நீரும், இன்னொரு பிள்ளைக்குப் பாலும் கொடுப்பதைப் போன்றது.” என்று கூறி விட்டுச் சென்று விட்டான்”.

“சில காலங்களின் பின் உலக நாதன் பரம ஏழையாகி உணவுக்கே வழியில்லாது அலைந்து திரிந்தான். ஆனால் நாகநாதனை ஏகாம்பரம் அழைத்துச் சென்று அவனுக்கு உயர் பதவியும் கூடிய சம்பளமும் வழங்கினார். ஆகவே

அன்பானவர்களே, எதையும் நம்பாது நடுநிலை நின்று ஆராய்ந்த பின் முடிவெடுங்கள்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***முறைதெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந் தவர்க்கும்***
***இறைதிரியான் நேரொக்க வேண்டும் - முறைதிரிந்து***
***நேரொழுகா னாயின் அதுவாம், ஒரு பக்கம்***
***நீரொழுகிப் பாலொழு மாறு.***

தன் குடிகளிடையே பாரபட்சம் காட்டி நடத்தல் அரசனுக்கு மிகவும் கேடான செயலாகும். அப்படி நடக்கக் கூடாது. **‘ஒரு பக்கம் நீரொழுகிப் பாலொழுகுமாறு’** என்பது பழமொழி.

**30** “அன்பானவர்களே, நட்பு என்பது ஒருவருக்கொருவர் சிரித்து மகிழ்வதற்காக ஏற்பட்ட தல்ல. நண்பர் நிலை தவறிப் போகும் போது கண்டித்து நல்லுரை கூறித் திருத்துவதற்குமாக அமைந்ததேயாகும். நட்பில் கூடியவர்களுக்குப் பிரிவென்ப தேயில்லை. அதனால் ஒருவரை நண்பராக்கும் போது நன்கு ஆராய்ந்த பின்பே நட்புக்கொள்ளுங்கள். ஆராய்ந்து பாராமல் நட்புக் கொள்வதைப் போலக் கேடு தருவது வேறு எதுவும் இல்லை. ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து நட்புக்கொண்ட ஒருவன் உரிமையோடு செய்யும் செயலை இழிவானது என்று எண்ணாமல் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இப்படி ஏற்று நடப்பது உயர்ந்த நட்பின் இலக்கணமாகும். நட்புக்கு இலக்கணம் என்பது நண்பர் உரிமையோடு செய்யும் செயலை அது இழிவானதாக இருந்தாலும் கூட மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்வதாகும். அப்படி ஏற்றுக்

கொள்பவர்கள் நண்பன் செய்யும் தீவினையைத் தம் முன் வினைப்பயன் என ஏற்றுக் கொள்வர்.”

“மணியூர் மன்னனும் புலியூர் மன்னனும் பெரும் பகைவர்கள். இரண்டு மன்னர்களுடனும் மணிமாறன் என்ற புலவர் நண்பர். புலியூர் மன்னன் மணிமாறன் சபைக்கு வந்தால் எங்குஞ் செல்ல மாட்டான். அவருடனேயே இருப்பான். கலை இலக்கியங்களைப் பற்றிப் பேசுவான். நாட்டு விஷயங்களைப் பற்றிப் பேசுவான். மணியூர் மன்னனும் மணிமாறனின் மீது அளவில்லா அன்பு வைத்திருந்தான். மணிமாறன் வேலூரைச் சேர்ந்தவன். பெருங்கவிஞன் அதனால் எல்லா மன்னர்களும் அவனது நட்பை விரும்பினர். மணியூருக்கு மணிமாறன் வந்தால் அரசன் அவனைப் போக விடமாட்டான். அன்று மணியூருக்கு வந்த மணிமாறன் மன்னனுக்குச் சொன்னான் ; “மன்னா, உனது மகளை நான் எனது மகள் போலவும், உன்னை எனது உயிர் போலவும் கருதுகிறேன். அது உனக்குத் தெரியும். அந்த நட்பின் உரிமையால் நான் உன்னைப் பெண்கேட்கிறேன். புலியூர் இளவரசர் பெரும் வீரர். இரு பெரும் வீரர்களும் காரணமின்றிப் பகைவர்களாக இருப்பதை நான் விரும்பவில்லை. அதனால் நான் உனது மகளைப் புலியூர் இளவரசனுக்கு மணம் முடித்துத் தருகிறேன் என்று கூறிவிட்டேன்” என்றொரு பொய்யைச் சொன்னார்.”

“மணியூர் மன்னின் முகம் விகாரமடைந்தது ; சிவந்தது ; மீசை துடித்தது ; பின் சொன்னான்; “அவன் எனது பரம எதிரி.

நீங்கள் என்னைக் கேளாது முடிவு சொல்லி விட்டீர்கள். அதை உரிமை என்று நினைக்கிறீர்கள். அது பெருந்தவறு. இன்னொருவர் அப்படிக் கூறியிருந்தால் தலையைத் துண்டித்திருப்பேன். எனது உயர்ந்த நண்பர் உரிமைகாரணமாகச் செய்த பிழையை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றான்".

"மறு நாள் மணிமாறன் புலியூர் மன்னனைச் சந்தித்துச் சொன்னான் ; "மன்னா நான் உன் மீது கொண்ட நட்பின் உரிமையால் உன்னைக் கேளாமல் இளவரசனுக்கு மணம் பேசிவிட்டேன்" என்றார்".

"என்ன மணம் பேசிவிட்டீரோ…? உமக்கு அதற்கு உரிமை இருக்கிறது. நீர் எனது ஆத்ம நண்பன். எனக்காக உயிரையும் கொடுப்பீர் யார் எனது மருமகள்?" என்று ஆவலோடு கேட்டான்."

"மன்னா, மணியூர் இளவரசி பெரும் வீராங்கனை, தகப்பனுடன் தானே உனக்குப் பகை. மணியூர் இளவரசியின் அழகும் குணமும் வார்த்தைகளால் சொல்ல முடியாதவை. கொள்ளை அழகும், தாராள மனப்பாங்கும் கொண்ட அவளைத் திருமணம் செய்பவன் பாக்கியசாலி"என்றார்."

"புலியூர் மன்னன் வெகு நேரம் எதுவும் பேசவில்லை. பின் சொன்னான்; "நண்பரே, வருந்தக்கூடிய செயல்களை நண்பர் செய்தால் அதற்கு அறியாமை மட்டும் காரணமல்ல. தம்மிடம்

அவருக்குள்ள உரிமையும் காரணமாகும். மணியூர் மன்னன் எனது கொடிய பகைவன். இருப்பினும் நட்பின் உரிமையை அறிந்தவர்கள் தமக்கு அழிவே நேர்ந்தாலும் பழைமையான நண்பனின் தொடர்பினை அறுத்துக்கொள்ளாது அன்பாகவே நடந்து கொள்வார்கள். இது முன் வினைப்பயனே தவிர உமது செயலல்ல. எனது மகன் மணியூர் இளவரசியைத் திருமணம் செய்ய வேண்டும் என்று விதி உள்ளது. அது தான் நட்பின் பெருமை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்" என்றான்.

புலவர் சென்றபின் மணியூர் மன்னன் யோசித்துப் பார்த்தான்.மணிமாறனின் முகம் கறுத்து விழிகளில் நீர் நிறைந்திருப்பதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் முதலமைச்சரைச் சந்தித்து ஆலோசனை கேட்டான்"

"முதலமைச்சர் ; "மன்னா, கொடிய பகையால் இரு நாடுகளும் துன்பப்படுகின்றன. அதை நீக்கத் தான் புலவர் நட்புரிமையுடன் நடந்து கொண்டார். எனவே புலவரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யுங்கள்" என்றார்"

"மன்னன் பலநாட்களாக யோசித்தான். புலவரை வெறுக்க அவன் விரும்பவில்லை. அதனால் சம்மதித்தான்.

“அன்பானவர்களே. நட்புக்குள்ள சக்தி உலகில் வேறு எதற்கும் இல்லை. அதனால் நண்பரைப் புரிந்து நடவுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தம்தீமை இல்லாதார் நட்டவர் தீமையும்***
***எம்தீமை என்றே உணர்வதாம் - அந்தண்***
***பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப !***
***ஒருவர் பொறைஇருவர் நட்பு.***

நண்பர் செய்யும் தவறுகளைப் பொறுத்தல் உயர்ந்த நட்புக்கு இலக்கணமாகும். **‘ஒருவர் பொறை இருவர் நட்பு’** என்பது பழமொழி.

**31** “அன்பானவர்களே, ஒரு தாயானவள் தனது பிள்ளை சோறு உண்ணாத போது அதை வெருட்டாது பல பொருட்களைக் காட்டி ஏமாற்றி உணவைக் கொடுப்பதைப் போல, அரசர்கள் தீமையான செயல்களைச் செய்தால் அமைச்சர்கள் பொய்யானவற்றைக் கூறியோ அல்லது ஏமாற்றியோ அல்லது மருட்டியோ அரசனை அத்தீய செயலைக் கைவிடச் செய்வது அரச தர்மமாகும். இது பிள்ளையின் நன்மைக்காகத் தாய் சந்திரனையும் வேறு பொருட்களையும் காட்டி ஏமாற்றிக் குழந்தைக்கு உணவைத் ஊட்டுவது போன்றது. இது போலச் சமூகத்திற்கு ஒருவன் அறியாமையினாலோ அல்லது வேண்டுமென்றோ தீமைகள் செய்யின்அவனை ஏமாற்றித் தீய செயல்களைச் செய்யாமற் பண்ணுவது அறிவுடையவர்களின் செயலாகும்.

“கருங்குழி நாட்டின் மன்னன் வேல்மாறன் நீதியானவன். ஆனால் ஆராயாது கருமமாற்றுபவன். அதனால் எவ்வேளையிலும் முதலமைச்சர் மிகுந்த எச்சரிக்கையாக இருப்பார். ஒரு முறை அவன் நகரச் சோதனைக்காகச் சென்ற போது அழகான இளம் பெண் ஒருத்தியைக் கண்டு காமுற்றான். அவனுக்கு வயது ஐம்பத்திற்கு மேல். ஆனால் அவளுக்குப் பதினாறு வயது. அந்தப் பெண்ணைக் கண்ட பின் முதலமைச்சரைச் சந்தித்த வேல் மாறன் அப்பெண்ணை அரச விடுதிக்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.”

‘வேல்மாறனின் விருப்பத்தை உடனே பூர்த்தி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் தனது அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். எப்படியும் இன்று இரவு அரண்மனைக்கு அப்பால் இருக்கும் அரச விடுதிக்கு அப்பெண்ணை அழைத்து வருமாறு கூறினார் . அதிகாரிகள் அப்பெண்ணைத் தேடி நாட்டுக்குள்ச் சென்றனர்.”

“அன்று இரவு மன்னன் ஆடம்பரமான அரசவிடுதியில் தங்கியிருந்தான். அப்போது முதலமைச்சரும் சில சேவகர்களும் அங்கே வந்தனர். முதலமைச்சர் வந்ததும் அப்பெண் வந்து விட்டாள் என நினைத்து முதலமைச்சருக்கும் சேவகர்களுக்கும் பரிசுகள் கொடுக்கத் தயாரானான் மன்னன். அவள் திருமணமான வளானாலும் பரவாயில்லை என்று சொல்லக்கூடியவன் மன்னன் அதனால் முதலமைச்சர் சொன்னார் ; “மன்னா, நீங்கள் விரும்பிய

அப்பெண் திருமணமானவள். அத்துடன் கர்ப்பிணி. மன்னர் நாட்டிலுள்ள எப்பெண்களை வேண்டுமானாலும் மணக்கலாம். ஆனால் திருமணமான பெண்களைத் தாயாக நினைக்க வேண்டும். பிறன் மனைவியை விரும்புகின்றவன் பாவங்களை அஞ்சாது செய்யும் பாவிகளை விடக் கொடியவன். அறம் நீங்கிய செயல்களைச் செய்தாலும் பரவாயில்லை. ஆனால் பிறன்மனைவியை விரும்புதல் பெரும்பாவம் என்பது தங்களுக்குத் தெரியும். அதனால் அவளை மறந்து விடுங்கள்" என்றார் முதலமைச்சர்".

"உண்மையில் அப்பெண் திருமணமாகாதவள். அவளின் பெற்றோர் பணத்திற்காக எதையுஞ் செய்வார்கள். தற்செயலாக மன்னன் அவளை விரும்புவதை அறிந்தால் அவர்களே அவளை அழைத்து வந்து விடுவர். பின் பொருளாசை மிக்க அவர்களால் நாட்டிற்குப் பெரும் கேடு வரும் என்பதை உணர்ந்த முதலமைச்சர் வேண்டுமென்றே ஒரு பொய்யைக் கூறினார். அதனால் மன்னனின் மானங் காப்பாற்ற ப்பட்ட தோடு நாடு பெரும் ஆபத்திலிருந்தும் தப்பியது. அதனால் தேவையேற்படும் போது பொய் சொல்வதும், ஏமாற்றுவதும் தர்மமாகும். மகா பாரதக் கதையிலே துட்டர்களான கௌரவர்களை அழிப்பதற்காக மகா விஷ்ணு எத்தனை தந்திரங்களைக் கையாண்டார் என்பது உங்களுக்குத் தெரியும். ஆபத்து வராமற் காக்க வேண்டுமானால் ஆயிரம்பேரையும் ஏமாற்றலாம்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*செறிவுடைத் தார்வேந்தன் செவ்வியல் பெற்றால்*

***அறிவுடையார் அவ்வியமும் செய்வர் - வறிதுரைத்துப்***
***பிள்ளை களைமருட்டும் தாயர்போல் அம்புலிமேல்***
***ஒள்ளியகாட் டாளர்க்கு அரிது.***

ஆட்சியில் உள்ளவர்கள் தவறான செயல்களைச் செய்தால், அறிவுடையவர்கள் பொய்யுரைத்தோ, மருட்டியோ, ஏமாற்றியோ அச்செயலைத் தடுத்து நிறுத்தி அவரைக் கொண்டு நல்ல செயல்களைச் செய்விக்க வேண்டும். '**ஒள்ளிய காட்டாளர்க்கு அரிது**' என்பது பழமொழி.

32 "அன்பானவர்களே, தம்முடைய கண்போன்றவர் – களானாலும், அவர்கள் குற்றஞ் செய்தால் தகுந்த தண்டனை வழங்குவது தர்மாக ஆட்சி செய்பவனின் கடமையாகும். அதைவிட்டு விட்டுத் தனக்குத் தேவையானவர் என்று பரிவு காட்டினால் அப்பரிவின் மூலம் குற்றஞ் செய்வோர் அஞ்சாது வேறும் பல குற்றங்களைச் செய்வர்".

"குடிமக்களுக்குத் தன்னாலும் பிறராலும் துன்பம் வராமற் காத்து, அதே சமயம் குற்றம் செய்பவர்களை நமர், பிறர் என்று ஆராயாது நடுவுநிலை நின்று தண்டனை கொடுப்பது நீதியான மன்னனின் கடமையாகும். இப்பொழுது மன்னராட்சி இல்லாவிட்டாலும் மன்னரைப் போல அதிகாரமுடைய அதிகாரிகள் நடுவு நிலை தவறாது, பாரபட்சம் காட்டாது குற்றஞ் செய்தவனைத் தண்டித்தல் வேண்டும். இல்லாவிட்டால் அவனால் எந்நாளும் ஆபத்து உண்டாகும்."

"கடம்பவனத்தில் ஆதவன் என்ற யானையின்தலைமையில் பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அக்காட்டில் சிங்கம் இல்லாததால் மிருகங்கள் யாவும் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தன. ஆதவனின் செல்வமகன் சுந்தரன். சுந்தரன் இராசாவின் மகன் என்பதால் காட்டில் அட்டகாசங்கள் பலவுஞ் செய்து வந்தது. மற்றைய மிருகங்கள் சுந்தரனுக்குப் பயந்து நடந்தன; "நீங்கள் யாராவது எனது தந்தையிடம் என்னைப் பற்றிச் சொன்னால், உங்களை எனது தும்பிக்கையால் தூக்கி அடித்துக் காலால் மிதித்துக் கொல்வேன்" என்று சுந்தரன் மற்ற மிருகங்களைப் பயமுறுத்தி வந்தது. அதனால் அவை சுந்தரனுக்குப் பயந்து வாழ்ந்து வந்தன".

"ஒரு நாள் சுந்தரன் காட்டின் அருகே இருந்த வயலில் சென்று நெற்பயிர்களை உண்டது. அத்துடன் வயலை நாசமாக்கியது. அதைக் கண்ட மான் சொன்னது; "குட்டி ராஜா, நாம் அநியாயங்கள் செய்யக்கூடாது. பல வருடகாலமாக மனிதர்கள் இப்பிரதேச வயல்களில் நெற் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் ஒரு போதும் எம்மைத் தாக்குவதில்லை. அதனால் நாமும் வயலை அழிப்பதில்லை. எமது காடு முழுவதும் பச்சைப்பசேலென உள்ளது. புற்களும் குழைகளும் நிறைய உள்ளன. அதனால் அவற்றை உண்டு வாழ்வதை விட்டு விட்டு நாம் வயலை அழித்தால் மனிதர்கள் எம்மைத் தாக்குவார்கள் ; அழிப்பார்கள். அதனால் இனிமேல் வயலுக்குள்ச் செல்லாதீர்கள்" என்றது".

“அதைக்கேட்ட சுந்தரன் கோபத்துடன் மானைத் துரத்தியது. கெட்டவர்களுக்குப் புத்திமதி சொன்னால் அது ஆபத்தில் முடியும் என்பதை அறிந்து எச்சரிக்கையுடன் சொன்ன மான் சுந்தரன் வருவதைக் கண்டதும் தப்பி ஓடி வந்து ஆதவனின் பக்கத்தில் நின்றது. அதற்கு களைப்பாக இருந்ததால் அது மூச்சு வாங்கியது.”

“ஒரு நாளும் இல்லாதவாறுமான் மூச்சிரைக்க வந்து நின்றதைப் பார்த்த ஆதவன் அதனருகே வந்து ; “நண்பா, இன்று உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் வேகமாக ஓடி வந்தாய் உன்னை யாராவது தாக்குவதற்காக வந்தார்களா?” என்று கேட்டது.”

“மான் யோசித்துப் பார்த்தது. ஆதவன் சில சமயம் தனது மகனுக்காக இரக்கப்பட்டுத் தண்டனை அளித்தாலும் பரவாயில்லை. மனிதர்களின் விளை பொருட்களை அழிப்பது பாவம் மட்டுமல்ல ஆபத்தும் கூட. அதனால் உள்ளதைச் சொல்வோம் நடப்பது நடக்கட்டும் என்று நினைத்து நடந்தவற்றைச் சொன்னது.”

“அதைக் கேட்ட ஆதவனுக்குக் கோபம் வந்தது ; “எமக்குத் தீங்கு செய்யாத கொடிய மிருகத்தையும் தண்டிக்கக் கூடாது. தண்டித்தால் அம்மிருகம் எம்மைத் தாக்கும். மனிதர்கள் நல்லவர்கள். அவர்கள் பல காலமாக அங்கே பயிர் செய்து வருகின்றனர். பயிர்களை அழித்தால் அவர்கள் எம்மை அழிக்க முயல்வர். சுந்தரன் எனது மகன் என்ற திமிரில் தீய செயல்களைச் செய்து வருகிறது. அதை நீங்கள் பயத்தின் காரணமாக எனக்குச்

சொல்லவில்லை. அது மகா தவறு. யார் குற்றஞ் செய்தாலும் அதற்குத் தண்டனை உண்டு. குற்றம் செய்பவனுக்குத் தகுந்த தண்டனை கொடுக்காவிட்டால், அவன் மேலும் மேலும் குற்றங்கள் செய்வான். அதனால் எமக்குப் பல தீமைகளும் ஆபத்துக்களும் உண்டாகும். அதனால் சுந்தரனைப் பிடித்துக் கட்டுங்கள். ஆறு மாத காலத்திற்கு அவிழ்த்து விடாதீர்கள்." என்றது ஆதவன்".

"அதனால் அன்பானவர்களே, உங்கள் பிள்ளைகள் தவறு செய்தாலும் அதைத் திருத்த முடியாவிட்டால் தகுந்த தண்டனை கொடுங்கள்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***எங்ஙண் இணையர் எனக்கருதின் ஏதமால்;***
***தங்கண்ணார் ஆயினும் தகவில கண்டக்கால்;***
***வன்கண்ண னாகி ஒறுக்க, ஒறுக்கல்லா***
***மென் கண்ணன் ஆளான் அரசு.***

தனக்கு மிக வேண்டியவர் குற்றஞ் செய்தாலும் பாரபட்சம் காட்டாது தகுந்த தண்டனை அளிப்பதே அரசனின் கடமையாகும். இல்லாவிட்டால் அரசு அழியும். **'ஒறுக்கல்லா மென்கண்ணன் ஆளான் அரசு'** என்பது பழமொழி.

**33** "அன்பானவர்களே, உண்பதற்கு வேண்டிய உணவு வகைகளை உண்டாக்கி அவற்றை உண்பவர்களுக்குத் தானும் ஓர் உணவாகும் சிறப்பு மிக்கது மழை. அப்படிப்பட்ட மழையானது பெய்யாமல் பொய்க்குமானால் கடல் நீரால் சூழப்பட்ட இந்த உலகத்தில் பசியானது நின்று உயிர்களைத் துன்பப்படுத்தும். அவ்வாறான மழையானது பெய்யாது விட்டால் பசும் புல்லின்

தலையைக் கூடக் காண முடியாது. அப்படி மழை பெய்யாமல் வரண்டு போயிருந்த காலத்திலும் கூடப் பாரி வள்ளலினுடைய மகளானவள் தன்னைத் தேடி வந்து இரப்பவர்களுக்கு நீரும் உணவும் கொடுத்து உதவினாள். அது போல எவ்வளவு தான் வறுமை வந்த காலத்திலும் உங்கள் வீடு தேடி இரந்து வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாதீர்கள். இரப்பவர்களுக்கு உதவுவது தான் மேலான இன்பம்."

"கடம்பவனம் என்ற காட்டிலே வாழ்ந்து வந்த மானொன்று ஆறு குட்டிகளை ஈன்று அவற்றிற்குப் பாலூட்டி வந்தது. அக்காட்டில் பன்றியொன்றும் வாழ்ந்து வந்தது. அதுவும் குட்டிகளை ஈன்று விட்டு புல்மேயச் சென்ற போது வேட்டைக்காரர் அதைக் கொன்று விட்டனர். அந்தச் செய்தியை அறிந்த ஆதவன் என்ற யானை பன்றி இறந்த இடத்திற்குச் சென்று குட்டிகளைத் தூக்கிக் கொண்டு வந்தது. யானையின் இருப்பிடத்தில் மிருகங்களெல்லாம் ஒன்று கூடின. "குட்டி ஈன்று மூன்று நாளான பன்றி ஏன் புல்மேயச் சென்றது? உங்களால் அதற்கு உதவிசெய்ய முடியவில்லையா...?" என்று கேட்டது யானை"

"மிருகங்கள் எதுவும் பேசவில்லை. அதனால் யானை சொன்னது ; "ஒருவருக்கொருவர் உதவாமல் உலகில் வாழ முடியாது. பன்றியுடன் நீங்கள் எல்லோரும் முரண்பட்டதால் தான் பன்றி இரைதேடக் காட்டிற்குச் சென்று பலியானது. வன்மமுடைய எதிரிகளாக இருந்தாலும் அவர்களது நிலையை அறிந்து உதவுவது

தான் தர்மம். இது பற்றி நான் உங்களுக்கு எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதை நீங்கள் கேட்பதாக இல்லை. நாளைக்கு உங்களுக்கு இப்படியான ஒரு நிலைமை வந்தால் தான் உங்களுக்குப் புரியும். கண்கூட விழிக்காத இச் சின்னஞ் சிறு குட்டிகளின் பரிதாப நிலையைப் பார்த்தாவது திருந்துங்கள்" என்றது.

"யானை அண்ணா, எனது குட்டிகள் சிறிது வளர்ந்து விட்டன. அவற்றிற்குப் புல் மேய நான் கற்றுக்கொடுக்கிறேன். பன்றிக் குட்டிகள் புல்மேயும் வரை நான் பால் கொடுத்துப் பராமரிக்கிறேன்" என்றது மான்".

"நல்லது. உனது தாய்மை உணர்வையும் தர்ம சிந்தனையையும் நான் பாராட்டுகிறேன். உனக்கு வேண்டிய உணவு வகைகளையும் நீரையும் நான் கொண்டு வந்து தருகிறேன். நீ பன்றியைப் போலப் புல் மேயச் செல்ல வேண்டாம்" என்றது. யானை".

"அன்பானவர்களே, மிருகங்களுக்குக்கும், பறவைக ளுக்கும் கூடத் தாய்மை உணர்வும் பந்த பாசங்களும் இருக்கும். அதனால் தான் நாய், பூனை போன்ற மிருகங்கள் தாயை இழந்த குட்டிகளைத் தமது குட்டிகளாகக் கருதி வளர்க்கின்றன. மனிதர் மட்டும் தான் சாதி , பேதம், காட்டுகின்றனர். உதவி என்று இரந்து யார் வந்தாலும் இல்லை என்று சொல்லாது உதவுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்*

*பாரி மடமகள் பாண்மகற்கு – நீருலையுள்*

*பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்*

*ஒன்றுறா முன்றிலோ இல்*

வீடு தேடி வந்து இரப்பவர்களுக்குக் கட்டாயம் உதவ வேண்டும். இருப்பதைப் பொன் மனங்கொண்டு உதவுதல் வேண்டும். '**ஒன்றுறா முன்றிலோ இல்**' என்பது பழமொழி.

34 "அன்பானவர்களே,நீங்கள் நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் போது மிகவும் அவதானமாகத் தேர்ந்தெடுங்கள். நட்பின் இலக்கணம் என்னவென்றால், எப்பொழுதும் மனம் மாறுபடாமல் முடியும் போதெல்லாம் நண்பனுக்கு உதவி செய்தலே . அழிவு தரும் தீமையிலிருந்து  தடுத்து, நல்ல வழியில் நடக்கும் படி செய்து, அழிவு நேரிடும் என்றாலும் கூட இருந்து துன்பப்படுவதே உண்மையான நட்பு. அன்பின் மிகுதியால் நன்மை செய்பவர்களைப் போல நடித்துத் தம் செயலை நிறைவேற்றிக் கொள்ளும் நண்பர்களின் தொடர்பைத் துண்டித்துக் கொள்ளல் வேண்டும். போர்க்களத்தில் வீரனைத் தள்ளிக் கீழே விழுத்தி விட்டு ஓடும் அறிவற்ற குதிரையைப் போன்றவர்களின் நட்பை விட, நட்பென்பது இல்லாமல் தனியே இருப்பது நல்லது."

"அன்பானவர்களே, வெளியே சிறந்த நண்பர்களைப் போல நடந்து கொண்டு உள்ளத்தில் கபட நோக்கம் கொண்டவர்களை

அறிந்து நீங்களும் அது போலவே வெளியே சிரித்துப் பேசி அவர்களது உறவைத் துண்டித்தல் வேண்டும்.”

“நாவலடியில் வேலாயுதம் என்றொரு உத்தமர் வாழ்ந்து வந்தார். அவரின் நண்பன் கதிரேசு. எந்நாளும் இருவரும் ஒன்றாகவே திரிவார்கள். ஒருவரைப் பிரிந்து ஒருவர் இருக்க மாட்டார்கள் என்று ஊர்மக்கள் பேசிக் கொள்வார்கள். வேலாயுதத்தின் மைத்துனன் கனகரத்தினம். அவன் வேலாயுதத்தின் மகள் மாலதிக்குப் பேசி வரும் திருமணங்களை இல்லாதது, பொல்லாதது சொல்லிக் குழப்பிக் கொண்டிருந்தான். தனது வீட்டு இரகசியம் எப்படி வெளியே செல்கிறது என்று வேலாயுதத்திற்கு தெரிவதில்லை. அவரின் குடும்ப விஷயங்களை அவர் கதிரேசுவிற்கு மட்டும் தான் சொல்வார். கதிரேசு மீது அவருக்கு அளவுக்கதிகமான நம்பிக்கை இருந்தது. கடைசியாக மாலதிக்குப் பேசி வந்த திருமணத்தைப் பற்றி அவர் கதிரேசுவுக்கும் சொல்லவில்லை”.

“சில தினங்களில் மாலதியைப் பெண் பார்த்த மாப்பிள்ளை பகுதியினர் மிகவும் மகிழ்ச்சியுடன் அவளைத் திருமணஞ் செய்ய ஒப்புக் கொண்டனர். திருமணம் கோலாகலமாக நடைபெற்றது. அத்திரு மணத்திற்கு வேலாயுதம் கதிரேசுவுக்குச் சொல்லவில்லை. திருமணம் முடிய வந்த கதிரேசுவுக்கு வேலாயுதம் சொன்னார் ; “ மிக மிக இரகசியமாக வைத்திருந்ததால் தான் மாலதியின் திருமணம் நடைபெற்றது. நான் நட்பின் மிகுதியால் உனக்குச்

சொல்ல, நீ மகிழ்ச்சி மிகுதியால் வேறு யாருக்காவது சொல்ல அதன் மூலம் கனகரத்தினம் அறிந்து திருமணத்தைக் குழப்பப் பெரும் பிரச்சினைகள் வரும். அதனால் தான் இரகசியமாக வைத்திருந்தேன். இனிமேல் யாருக்கும் எதுவும் கூறமாட்டேன்." என்றார்".

"அதன் பின் கதிரேசு வேலாயுதத்தின் வீட்டுக்கு வருவதை நிறுத்திக் கொண்டான். முகம் மலர்ந்து சிரித்துப் பேசி, மனதில் வஞ்சகம் கொண்டளவர்களின் நட்பைத் துண்டித்தால் தான் நன்மை பெறலாம்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***புரையின்றி நட்டார்க்கு நட்டார் உரைத்த***
***உரையும் பொருள் முடிவும் ஒன்றால் - உரைபிறிது***
***கொண்டெடுத்துக் கூறல் கொடுங்கழித் தண்சேர்ப்ப!***
***ஒன்றேற்றி வெண்படைக்கோள் ஒன்று.***

நண்பர்கள் மனமொத்து உறவாடுதல் வேண்டும். மனதில் வஞ்சகத்தோடு பழகுபவரின் நட்பைத் துறத்தல் வேண்டும். **'ஒன்றேற்றி வெண்படைக்கோள் ஒன்று'** என்பது பழமொழி.

**35** " அன்பானவர்களே, வேல்வனம் என்ற காட்டின் அரிகரன் என்றொரு சிங்கம் வாழ்ந்தது. அது சோம்பேறி. மற்றைய மிருகங்களை ஏவி வேலை வாங்கிக் கொண்டிருந்தது. அதன் போக்கைப் புரிந்து கொண்ட நரி சிங்கத்துடன் நெருங்கி உறவாடியது, மற்றைய மிருகங்களைப் பற்றி இல்லாதது, பொல்லாததுகளெல்லாம் கூறி வந்தது. அதனால் மற்றைய மிருகங்கள் சிங்கத்தின் அருகே செல்லப் பயந்தன. அதனால் நரி

மிகவும் சந்தோஷப்பட்டது. சிங்கம் தனக்கு விசுவாசமாக நடக்கும் நரியைத் தனது முதலமைச்சராக்கியது. அதை அது காட்டு மிருகங்களுக்கு அறிவித்தது."

"அமைச்சர் என்பவர் தாம் செய்யும் செயல்கள் அனைத்தையும் மனதாலும், வாயாலும் , உடலாலும் அறிந்து கொள்ளக் கூடியவராகவும், மனம், வாக்கு, உடலால் புனிதமானவராயும் இருத்தல் வேண்டும். அத்துடன் செய்யத் தகுந்த செயல்களை அறிந்து கொள்பவராகவும், அதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து சொல்பவராகவும், துணிவோடு சொல்லக்கூடியவராகவும், பாராபட்சம் இல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். ஆனால் நரி தனக்கு வேண்டாதவர்களைப் பற்றி சிங்கத்திடம் குறை கூறும். ஒரு முறை எருமை மாடு ஒன்றுடன் தான் அமைச்சர் என்ற திமிரில் நடந்து கொள்ள, எருமை அதைத் தன் கொம்பால் தாக்கியது. உயிர் பிழைத்துத் தப்பி ஓடிய நரி சிங்கத்திடஞ் சென்று எருமை மாட்டின் தலைமையில் காட்டு மிருகங்கள் பலவும் ஒன்று கூடிச் சிங்கத்தைக் கொல்லச் சதி செய்வதாக கூறியது. அதை நம்பிய சிங்கம் எருமையைக் கொன்று தின்றது."

"இப்படியே தினமும் நரி மிருகங்களைப் பற்றிச் சிங்கத்திற்கு இல்லாதது பொல்லாததுகளைச் சொல்லச் சிங்கம் நரி சொன்ன மிருகங்களைக் கொன்று தின்றது. சிங்கம் தின்று எஞ்சியவற்றை நரி தின்று வந்தது. இதனால் கவலைப்பட்ட

மிருகங்கள் ஒன்று கூடி அயலில் உள்ள கடம்பவனம் என்ற காட்டுக்குச் செல்லத் தீர்மானித்தன".

"மான் சொன்னது; "அரசனை வழிப்படுத்துவது அமைச்சர். ஆனால் எமது அமைச்சர் தேவையில்லாது விரோதங் கொண்டு தனது பதவியைப் பயன்படுத்தி எம்மை வருத்துகிறார். இந்நிலை தொடருமானால் நாம் எல்லோரும் அழிந்து விடுவோம். ஆகையால் நாம் உயிர் வாழ வேண்டுமானால், இக்காட்டை விட்டுத் தப்பிச் செல்லுதல் தான் சிறந்தது" என்றது".

"அதை எல்லா மிருகங்களும் ஆதரித்தன. அன்றே அவை வேல்வனத்தை விட்டுக் கடம்பவனத்திற்குச் சென்றன. ஆகையால் அன்பானவர்களே, நாட்டை ஆளும் அரசனுக்கு நல்லுபதேசம் செய்பவர்கள் தான் சிறந்த அமைச்சர்கள். வீட்டை எடுத்துப் பார்தாலும் ஒரு குடும்பத்தின் அமைச்சராக விளங்குபவர் மனைவியாவார். அந்த மனைவி அரசனான தனது கணவனை நெறிப்படுத்தி வாழ்க்கையின் தத்துவத்தை உணர்த்தி, அவனை அறவழியில் பொருள்தேட வைத்து, அப்பொருளை அறவழியில் செலவு செய்யப்பண்ணுதல் வேண்டும். இதைக் கணவன்மார் உணர்ந்து கொள்ளல் வேண்டும். மனைவி தீயவழியில் செல்லுமாறு கணவனைத் தூண்டினால், அவன் தீய வழியிலேயே செல்வான். அவனைத் தீயவழியில் செல்லாமல் தடுத்து, சமூகத்திற்கு உகந்தவனாக்குவது அமைச்சரான மனைவியின்

கடமையாகும். இல்லாவிட்டால் குடும்பம் பிரிந்து விடும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*மனதினும் வாயினும் மெய்யினும் சய்கை*
*அனைத்தினும் ஆன்றவிந்தா ராகி – நினைத்திருந்து*
*ஒன்றும் பரியலராய் ஓம்புவார் இல்லெனின்*
*சென்று படுமாம் உயிர்.*

அமைச்சர்கள் திரி கரண சுத்தியுடன் நாட்டின் நன்மை கருதிச் செயற்படல் வேண்டும். இல்லா விட்டால் மக்கள் துன்பப்படுவர். **‘ஓம்புவார் இல்லெனின் சென்று படுமாம் உயிர்’** என்பது பழமொழி.

36 “அன்பானவர்களே, எப்பொழுதும் ஊரோடு ஒத்து வாழுங்கள். உங்களை நம்பி வந்தவர்களுக்குத் துரோகஞ் செய்யாதீர்கள். அவர்கள் உங்களுக்குத் தீங்கு செய்தாலும் அதைப் பொறுத்து நடவுங்கள். அதற்குப் பதிலாக நீங்கள் அவர்களுக்குத் தீங்கு செய்யாதீர்கள்; துறவிகளின் ஒழுக்க நடவடிக்கைகளில் குற்றங் காணாதீர்கள் ; துறவிகள் விசரரைப் போன்றும் நடப்பார்கள். இறைவன் மீது நீங்காத பற்றுக் கொண்ட துறவிகளின் நடத்தை எப்பொழுதும் ஒரு மாதிரி இருக்க மாட்டாது. அதனால் அவர்களின் நடத்தையை வெறுக்காதீர்கள். பொதுவாக ஊரவர்களில் பெரும்பான் மையானோர் செய்யுஞ் செயல்களில் குற்றங்கள் பலவும் இருக்கலாம். அதைக் கண்டிப்பதன் மூலம் நீங்கள் ஊரவரின் வெறுப்புக்குள்ளாவீர்கள்”.

“நாவலூரில் ஒரு துறவி  பன்னசாலை அமைத்துத் தனது சீடர்களுடன் வாழ்ந்து வந்தார். அவர் அந்த ஊருக்கு வந்த பின் அந்த ஊரின் செழுமை அதிகரித்தது. அவர் ஊர்க்கோயிலில் பூசைகள் செய்வார்; சாதகம் பார்ப்பார்; கிரகதோஷங்களுக்குப் பரிகாரங்கள் செய்வார் ; அவர் சொன்னால் சொன்னபடி காரியங்கள் நடக்கும் என்று ஊரவர்களில் பெரும்பான்யையான மக்கள் நம்பினார்கள். ஆனால் கந்தசாமி அத்துறவியை நம்புவதில்லை. அவன் துறவி  ஊரை ஏமாற்றிப் பிழைக்கிறார் என்று சொல்லிக் கொண்டிருந்தான். அதனால் ஊரவர்களுக்கும் கந்தசாமிக் குமிடையே அடிக்கடி சண்டை சச்சரவுகள் நடக்கும்.”

“கந்தசாமியின் மனைவியின் தகப்பனார் இராசையா. இராசையாவுக்கு ஒரே ஒரு மகள். அவர் அயலூரவர். விவசாயி. கந்தசாமி வியாபார நிமித்தம் அயலூருக்குச் சென்ற போது இராசையாவின் மகளைக் கண்டு அவளை விரும்பித் திருமணஞ் செய்து கொண்டான். அதன் பின் இராசையா கந்தசாமியின் வீட்டில் அவனே தஞ்சமென வந்திருந்தார்”.

“மருமகன் ஊரவர்களுடன் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதை விரும்பாத இராசையா ஒரு நாள் கந்தசாமிக்குச் சொன்னார் ; “மருமகனே, நீங்கள் மிகவும் நல்லவர் ; ஊருக்கு உதவுபவர் ; தான தர்மஞ் செய்பவர். ஆனால் நீங்கள் அந்தத் தவசியின் விசயத்தில் ஊராருடன் முரண்படுவதால் ஊரவர்கள் உங்களைப் பற்றித் தவறாக நினைக்கிறார்கள். “ஊருடன்

பகைக்கின் வேருடன் கெடும்” என்றோர் முதுமொழி உண்டு. ஊரவர்கள் எல்லோரும் அந்தத் தவசியை நம்புகின்றனர். அத்துடன் அத்தவசியைக் கேட்காது எக்காரியங்களையும் மக்கள் செய்வதில்லை. அதனால் நீங்கள் அவரை நம்பாவிட்டாதும் ஊரவர்களுடன் பிரச்சினைக்குப் போகாதிருங்கள்” என்றார்”.

“கந்தசாமி அவரின் சொல்லை மதிக்கவில்லை. அவன்சொன்னான் “மாமா எல்லாம் விதிப்படி தான் நடக்கும். இப்போ மாரிகாலம். மழை பெய்தால் குளம் நிரம்பும். குளத்திற்கு அருகே இருப்பவர்கள் மாரிகாலங்களில் நான் அறிந்த காலத்திலிருந்து தமது வளர்புப் பிராணிகளுடன் இடம்பெயர்ந்து வந்து மேட்டு நிலங்களில் இருப்பார்கள். அதைத் துறவி சொல்லியா நாம் அறிதல் வேண்டும். வேலாயுதத்திற்குப் புற்று நோய். அவனது மனைவி அவனது நோயையப் பற்றிக் கேட்டபோது அவன் ஒரு மாதத்திற்குள் இறந்து விடுவான் என்று தவசி சொன்னார். புற்றுநோய் உள்ளவனைத் தவசி சுகப்படுத்தினால் அவரை நம்பலாம். ஆனால் அவன் இறப்பான் என்று தெரியுந்தானே. இப்படியானவற்றைத் தவசி சொல்கிறார். அதை அவரா சொல்ல வேண்டும்? நீங்களும் சொல்லலாம் தானே” என்று கூறிவிட்டுக் கந்தசாமி சென்று விட்டான்.”

“அவனது வார்த்தைகள் உண்மையாக இருந்தாலும் ஊராருடன் தேவையின்றிப் பகை கொண்டால் அது ஆபத்தில் முடியும் என்று இராசையா பயந்தார். அன்றிரவு கந்தசாமியின்

வார்த்கநிலையத்தை யாரோ தீயிட்டுக் கொழுத்தி விட்டனர். அதனால் கந்தசாமிக்குப் பெரும் நஷ்டமேற்பட்டது. அவனது மனைவி சொன்னாள் ; "தவசி உங்களுக்குப் பெரு நட்டம் ஏற்படுமென்று கூறியதாக ஊரவர்கள் பேசிக் கொள்கிறார்கள். இனியாவது தவசியுடன் முரண்படாமல் இருங்கள்" என்றாள்".

"அன்பானவர்களே, ஊரவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமானவர்கள். அவர்களிற் பலர் அறியாமையால் தீமைகள் பலவற்றை ஆராயாது செய்வர். அதனால் அறிவுள்ளவர்கள் அவர்களுடன் முரண்படாதவாறு நடந்து கொள்ளல் வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*செல்லற்க சேர்ந்தாற் புலம்புறச் ; செல்லாது*
*நில்லற்க நீத்தார் நெறியொரீப் - பல்காலும்*
*நாடுக தான்கண்ட நுட்பத்தைக் கேளாதே*
*ஓடுக ஊரோடு மாறு.*

ஊருடன் ஒத்துவாழ வேண்டும். தன்னைத் தஞ்சமடைந் தவர்களையும் துறவிகளையும் பேணுதல் வேண்டும். '**ஓடுக ஊரோடு மாறு**' என்பது பழமொழி.

37 "அன்பானவர்களே, வேல் வனத்தின் அருகே பூங்காவனம் என்றொரு சிறிய காடு இருந்தது. வேல் வனத்திற்குக் கனகன் என்ற சிங்கம் அரசனாக இருந்தது. வேல்வனம் மிகவும் பெரிய அடர்த்தியான வளம் மிக்க காடு. அங்கு பல்வேறு வகையான மிருகங்கள் வாழ்ந்து வந்தன. பூங்காவனத்தை விஜயன் என்ற

சிங்கம் ஆண்டு வந்தது. விஜயன் அடிக்கடி வேல்வனத்திற்கு வந்து கனகனுடன் நட்புப் பூண்டு அங்கு பல நாட்கள் தங்கிச் செல்லும். கனகன் விஜயன் மீது கொண்ட நட்பின் காரணமாக வேல்வனத்தில் வாழ்ந்த மிருகங்களுக்கு விஜயனை அறிமுப்படுத்தி வைத்தது. இதனால் வேல் வனத்தில் வாழும் மிருகங்கள் கனகனுக்குக் கொடுக்கும் மதிப்பையும், மரியாதையையும் விஜயனுக்கும் கொடுத்து வந்தன. வேல் வனத்தின் செழிப்பையும், வனப்பையும் கண்ட விஜயனுக்குச் கனகனைக் கொன்றுவிட்டு வேல் வனத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் மனதில் உருவானது. அதற்கான சந்தர்ப்பம் வரும்வரை விஜயன் காத்திருந்தது. விஜயனின் எண்ணத்தை அறிந்த தேவன் என்ற நரி அதைப்பற்றி முழுமையாக அறிய விரும்பியது. அதனால் அது விஜயனுடன் நெருங்கிப் பழகியது.”

“தேவன் விஜயனுடன் நெருங்கிப் பழகுவதைக் கண்ட கனகன் ஒரு நாள் தேவனைப் பிடித்துக் கொல்ல நினைத்தது. கனகன் சகலவற்றையும் அறிந்து விட்டதென உணர்ந்த தேவன் விஜயனைப் பற்றிய அனைத்து விஷயங்களையும் கூறியது”

“விஜயனின் திட்டத்தை முன்பே அறிந்திருந்த வளவன் என்ற இன்னொரு நரி கனகனுக்குக் கூறியது ; “ சிங்கராசாவே, தமக்குத் தலைமையான ஒரு நிலை இருக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்களை, அரசனானவன் சமாதானப்படுத்தியோ அல்லது நட்புக் காரணமாகவோ சேர்த்து வைத்திருப்பதென்பது ஒரே

குகைக்குள் கொடிய நாகத்துடன் வாழ்வதைப் போன்றதாகும். விஜயன் உங்களுடன் நட்புக் கொள்ளும் போது நான் உங்களை எச்சரித்தேன். அதை மீறி நீங்கள் உங்கள் இனத்தவன் என்று நினைத்து நட்புப் பூண்டதோடு, இவ்வனத்தில் வாழ்கின்ற எல்லா மிருகங்களுக்கும் அறிமுகப்படுத்தி விஜயனுக்கு மதிப்பளிக்கும்படி கூறினீர்கள். அதைப் பயன்படுத்தி விஜயன் காட்டு மிருகங்களை தன்வசப்படுத்தி வருகிறது. இதற்குத் தேவனும் உடந்தையாக இருக்கிறான். வேல்வனம் மிகவும் பெரியது. அனேக மிருகங்களைக் கொண்டது. அத்துடன் உணவு, நீர் என்பன எந்நாளும் கிடைப்பது. பூங்காவனத்தில் மழை பெய்வதே இல்லை. கோடை காலத்தில் மிருகங்கள் நீருக்காக ஊருக்குள் செல்ல மனிதர்கள் அவற்றைத் தாக்கியும் கொன்றும் வருகின்றனர். அதனால் விஜயன் வேல்வனத்தின் தலைவனாக விரும்புகிறான். தலைமைப்பதவிக்கு ஆசைப்படுவோர் பஞ்சமா பாதகங்கள் அனைத்தையும் மனம் கூசாமற் செய்வார்கள். எதனாலும் அவர்களைச் சமாதானப்படுத்த முடியாது. சமாதானப்படுத்தினாலும் அவர்களுடன் பழகுவது பாம்புடன் பழகுவதைப் போன்றது. அதனால் விஜயனைக் கொன்று விடுங்கள்” என்றது”.

“வளவன் சொன்னது சரியானது என்பதை உணர்ந்த கனகன், விஜயன் எதிர்பாராத வேளையில் அதைத் தாக்கிக் கொன்றது. அதன்பின் பூங்காவனத்திற்குச் சென்று அங்குவாழ்ந்த மிருகங்களை வேல்வனத்திற்கு வருமாறு அழைத்தது.

வேல்வனத்திற்கு வந்த பூங்காவனத்தின் மிருகங்கள் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்தன”.

“ஆகையால் அன்பானவர்களே, தலைமைப் பதவியை விரும்பும் எவரும் தம் காரியம் நடைபெறவேண்டும் என்று நினைப்பார்களே தவிரத் தர்மத்தைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள் ஆகையால் இன்னொருவர் தலைமைப் பதவியில் இருந்தால் அதை அடைய விரும்புவோர் தர்மமான முறையில் அடைய வேண்டுமே தவிரச் சூழ்ச்சிகள் செய்யக்கூடாது. அத்துடன் அவர்களைச் சமாதானப்படுத்தி வாழலாம் என்றும் நினைக்கக்கூடாது’” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தலைமை கருதும் தகையாரை வேந்தன்***
***நிலைமையால் நேர்செய் திருத்தல் - மலைமிசைக்***
***காம்பனுக்கும் மென்தோளாய் ! அஃதன்றோ ஓரறையுள்***
***பாம்போடு உடனுறையும் ஆறு.***

தமக்குத் தலைமையான ஒரு நிலைமை இருக்க வேண்டும் என்று கருதுகின்ற ஆணவம் மிகுந்தவரைப் பகைவராகக் கருதி அழித்து விடுதலே அரசனது கடமை. சமாதானம் செய்து வாழலாம் என்று நினைப்பது பாம்புடன் ஓர் அறையில் வாழ்வதை ஒக்கும். **‘ஓரறையுள் பாம்போடு உடனுறையுமாறு**” என்பது பழமொழி.

**38** "அன்பானவர்களே, மனம் எதற்கும் கட்டுப்படாது தான் நினைத்தபடி மனிதனை ஆட்டிப் படைக்கும். ஒருவன் எதைச் செய்ய நினைக்கிறானோ அதைச் சரியென்று கூறுவான். அது பிழையென்றாலும் அதை அவன் ஒத்துக் கொள்ள மாட்டான். பெரியவர்கள் வந்து அவனுக்குச் சரியானவற்றை எடுத்துக் கூறினாலும் அதையும் அவன் ஏற்றுக் கொள்ள மாட்டான். நல்லவற்றை அப்படி விடாப்பிடியாக நின்று செய்தால் பரவாயில்லை. தீயதை அப்படி விடாப்பிடியாக நின்று செய்வதால் அவனுக்கும் அவன் சார்ந்த சமூகத்திற்கும் அது கேடு பயக்கும்."

"நாவலூர் சிவன் கோயிலுக்கு இரண்டு கிணறுகள் இருந்தன. அத்துடன் சிவன் தீர்த்தமாடுவதற்குத் தீர்த்தக் கேணியும் இருந்தது. கோயிக்குச் சிறிது தூரத்தில் இருக்கும் சிவப்பிரகாச வித்தியாலயம், அந்த ஊரில் உள்ள பிரபலமான பாடசாலை. அப்பாடசாலையில் அறுநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வியின்று வந்தனர். அப்பாடசாலைக்குக் கிணறு இல்லை. அதனால் நீண்ட தூரத்தில் உள்ள சிவன் கோயிற் கிணற்றில் இருந்து தினமும் பாடசாலைக்கு நீர் கொண்டு செல்வார்கள். மாணவர்கள் சிலர் பாடசாலை நேரத்தில் வந்து நீர் எடுப்பார்கள்"

'சிவலிங்கம் என்பவரின் மகன் சிவப்பிரகாச வித்தியாலயத்தில் கற்றுப் பின் பல்லைக்கழகம் சென்று கல்வி கற்றான். அவனுக்குப் பட்டணத்தில் ஒரு பெரிய வேலை கிடைத்தது.

அதனால் சிவலிங்கம்  சிவனுக்கு ஒரு கிணறு வெட்டிக் கொடுக்கத் தீர்மானித்துக் கிணறு வெட்டும் வேலையைத் தொடங்கினார்”.

“அவ்வூர் மக்களும், பெரியவர்களும், சிவப்பிரகாச வித்தியாலய அதிபரும் சிவலிங்கதிடம் வந்து வணங்கி, அவரைக் கௌரவப்படுத்தி விட்டுச் சொன்னார்கள்; “ஐயா, உங்கள் மகன் சிவனின் பெயரால் தொடக்கப்பட்ட சிவப்பிரகாச வித்தியாலயத்தில் கற்றவன். அதன் பின் பல்கலைக்கழகஞ் சென்றவன். அதனால் இப்பொழுது அவன் பெரிய நிர்வாகியாக இருக்கிறான். தாங்கள் சிவன் கோயிலுக்கு கிணறு வெட்டிக் கொடுக்கிறீர்கள். கோயிலுக்கு ஏற்கனவே இரண்டு கிணறுகள் உண்டு. அதைவிடச் சிவன் தீர்த்தமாடப் பெரிய கேணியும் உண்டு. ஆகையால் சிவனின் பெயரால் இயங்கி வரும் பாடசாலைக்குக் கிணறு வெட்டித் தாருங்கள். ஆலயமும் பாடசாலையும் ஒன்று என்று பெரியவர்கள் சொல்வார்கள்.  பாடசாலையில் அறுநூறு பிள்ளைகள் கற்கிறார்கள். அவர்கள் ஒரு நாளைக்கு மூன்று தரம் நீர் அருந்தினால் ஆயிரத்தெண்ணூறு முறை நீரருந்துவர். இத் தொகை நாள்தோறும் பெருகும். அதனால் உண்டாகும் புண்ணியம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் வாழ வைக்கும் “ என்றனர்”.

“சிவலிங்கங்கம் யார் சொல்வதையும் கேட்கவில்லை. தரும காரியத்தைத் தடை செய்யும் நீங்கள் தான் பாவத்தை அனுபவிப்பீர்கள். ஊரில் எத்தனை பேர் இருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் ஒரு சிறுதொகைப் பணத்தைக் கொடுத்தால்

பாடசாலையில் கிணறு வெட்டலாம். அதை விட்டு விட்டுப் புண்ணிய கருமம் செய்யும் என்னைத் தடுக்கிறீர்கள். வேண்டுமானால் நான் ஒரு தொகைப் பணம் தருகிறேன்" என்றார்".

"ஊர்ப் பெரியவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாது சிவலிங்கம் கோயில் வீதியில் ஒரு கிணறு வெட்டிக் கொடுத்தார். அவ்வூர் மக்களிடம் பணம் பெறுவதென்பது இயலாத காரியம். சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் பல முறை இரந்து வேண்டியும் ஊரவர் கிணறு வெட்ட ஒத்துழைக்கவில்லை. பாடசாலை அரசாங்கத்தினது. ஆகவே அரசாங்கத்தைக் கேட்டுக் கிணறு வெட்டுங்கள்" என்று மக்கள் கூறினர்."

"அரசஅதிகாரிகள் மக்களைப் போன்றவர்கள். செல்வாக்குள்ள பாடசாலைகளுக்கு மேலதிகமாகக் கட்டிடங்கள், தளபாடங்கள் கொடுப்பார்கள். தேவையானவற்றிற்கு கொடுக்க மாட்டார்கள். கோப்பாயில் நாவலர் பெருமான் கட்டுவித்த பாடசாலையில் உள்ள இரு கட்டிடங்களும் நாவலர் காலத்தில் கட்டியவை. அவை இடிந்து சரிந்துள்ள போதும் அதனுள் தான் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அதற்குக் கட்டிடம் கொடாது பிள்ளைகளில்லாத பாடசாலைகளுக்குக் கட்டிடம் கொடுக்கும் கல்வித் திணைக்களம் எமக்குக் கிணறு வெட்டித் தரவா போகிறது" எனக் கவலையுடன் கூறியபடி சென்றார் அதிபர்".

“மாரிகாலம் வந்தது கிணறுகள் நிறைந்து காணப்பட்டன. அதனால் சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் நீரை வீட்டில் இருந்து கொண்டு வருமாறு மாணவர்களைப் பணித்தார். அன்று இடைவேளை விட்ட போது சிவலிங்கத்தின் இளைய மகன் கண்ணன் நீரெடுப்பதற்காக அதிபருக்குச் சொல்லாமல் சிவன் கோயிற் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் போது தவறி விழுந்து மரணமானான்”.

ஆகவே அன்பானவர்களே, எது தேவையோ அதற்கு முதலிடங் கொடுங்கள். நீங்கள் நினைப்பது தான் சரியானது என்று எண்ணாதீர்கள். பெரியவர்களின் வார்த்தைகளுக்கு மதிப்பளியு ங்கள். இங்கு கல்வித் திணைக்களத்தில் கடமையுரிபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெரியோரைக் கனம் பண்ணி, நேர்மையாக நடந்திருந்தால் முப்பது வருடங்களுக்கு முன்பே கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்குக் கட்டிடடம் கிடைத்திருக்கும். 1872 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இரு கட்டிடங்களையும் கண்டு மனம் வருந்திய ஊவா மாகாண முதலமைச்சரும், மக்களும், அவர்கள் சிங்கள இனத்தவராக இருந்த போதும் புதிய மாடிக்கட்டிடம் ஒன்றைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இனம், மதம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டது தொண்டு என்பதை நினைவில் வைத்திருங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*நீர்த்தன்று ஒருவர் நெறியன்றிக் கொண்டக்கால்,*
*பேர்த்துக் தெருட்டல் பெரியார்க்கும் ஆகாதே,*
*கூர்த்த நுண்கேள்வி அறிவுடையார்க்கு ஆயினும்*
*ஒர்த்து இசைக்கும் பறை.*

பறை அவரவரது கருத்தை ஒட்டி ஒலிப்பது போல, மனமும் அவரது கருத்துப்படியே செயற்படும். அக்கருத்தை யாராலும் எளிதில் மாற்ற முடியாது. '**ஓர்த்து இசைக்கும் பறை**' என்பது பழமொழி.

39 "அன்பானவர்களே, கடன்படாது வாழப்பழகிக் கொள்ளுங்கள். கடன் பெறுதல் என்பது வாழ்வில் செய்யக்கூடாத ஒரு செயலாகும். கடன்படுவதன் மூலம் அவமானமும், தீமையும், பகையும் உண்டாகும். உங்கள் உழைப்புக்கேற்றபடி வாழப் பழகுங்கள். உழைக்கும் பணத்தில் சிறிதளவாவது சேமியுங்கள். சிறு துளி பெருவெள்ளமாவதைப் போல சிறு சேமிப்பு உங்களைப் பெரும் பணக்காரராக்கும். இரப்பவர்கள் அங்கவீனர்களாக, நோயாளிகளாக இருப்பின் கடனாகக் கொடுக்காது தர்மமாகக் கொடுங்கள். உழைப்பவர்களிலும் நன்மக்களுக்கே கடன் கொடுங்கள். பலர் கடன்பட்டு மது அருந்துவார்கள். சிலர் சூதாடுவார்கள். இப்படியானவர்களுக்கு கடன் கொடுத்து அவர்களின் வாழ்க்கையைக் கெடுக்காதீர்கள். தீயவர்களுக்குக் கொடுக்கும் பொருட்கள் திரும்பவும் வந்து சேராது. பொருளின் இயல்பை உண்மையாக உணர்ந்தவர்கள் கீழ் மக்களுக்குக் கடன் கொடுக்க மாட்டார்கள். கீழ் மக்களுக்குக் கடன் கொடுத்தவன் சில சமயங்களில் பாம்புப்புற்றுக்குள்க் கைவைத்து அதனுள் போட்ட பொருளை எடுப்பது போலத் தான் கொடுத்த கடனைப் பெறமுடியும்."

“நாவலூரிலே சிவஞானம் என்றொருவர் இருந்தார். அவர் மிகவும் ஏழை, இருப்பினும் தர்மவான். அவரது தர்ம சிந்தனையைச் சிலர் தமக்குச் சாதகமாகவும் பயன்படுத்திக் கொள்வர். அந்த ஊரிலே சந்திரன் என்றறொருவன் இருந்தான். சந்திரனின் தகப்பன் பெரும் தனவந்தன். சந்திரன் குடிக்கச் சென்ற வீட்டில் இருந்த ஒரு பெண்ணைக் காதலித்து மணந்தமையால் சந்திரனின் தகப்பன் அவனைக் குலத்தை விட்டு ஒதுக்கி விட்டார். சந்திரன் குடிகாரன் ; சூதாடுபவன். அவன் அன்று இரவு பதினொரு மணிபோல சிவஞானத்திடம் மிகுந்த துயருடன் ஓடி வந்தான் ; “ அண்ணை, என்னுடைய மகனை இரவு பாயில் பாம்பு தீண்டி விட்டது. வைத்தியசாலைக்கு கொண்டு சென்றேன். அவர்கள் மருந்து வாங்க ஆயிரம் ரூபா தேவை என்கிறார்கள்” என்று அழுதான்.

“சிவஞானத்திடம் அவ்வளவு பணம் இல்லை. அவர் முப்பது வருடங்களுக்கு முன் திருமணமானபோது அவரது மனைவி அவருக்கு அணிவித்த மோதிரம் விரலில் இருந்தது. அவர் அதைத் தனது உயிர் போலக் காத்து வந்தார். இரண்டு வருடங்களுக்கு முன் அவரது மனைவி இறந்து விட்டாள். அந்த மோதிரம் தான் அவரது இல்வாழ்க்கையை நினைவுபடுத்திக் கொண்டிருந்தது. அதைக் கழற்றிக் கொடுத்து விட்டுச் சொன்னார்; “சந்திரன், இது எனது மனைவி திருமணத்தின் போது எனக்குப் போட்ட மோதிரம். இதை நான் கையை விட்டுக் கழற்றுவதில்லை. அத்துடன் எத்துன்பம் வந்தபோதும் இதை நான் அடைவு கூட வைக்கவில்லை. இதை

யாரிடமாவது கொடுத்து விட்டு ஆயிரம் ரூபா வாங்கு. நான் காலையில் தருகிறேன். மோதிரத்தை வாங்கித் தா" என்றார்".

"இரண்டு நாட்களாகச் சந்திரனைத் தேடித் திரிகிறார் சிவஞானம். சந்திரனது மகனுக்குப் பாம்புக்கடிக்கவில்லை. அவன் பெறுமதியான மோதிரத்துடன் தலைமறைவாகி விட்டான். எனவே அன்பானவர்களே, அபூர்வமான பொருட்களை எக்காரணங் கொண்டும் கடன் கொடுக்கக் கூடாது. அப்படியான பொருட்களைக் கொடுத்தால் அவை மீண்டும் கடன் கொடுப்பவனின் கைக்கு வந்து சேராது. ஆகையால் பெறுமதியான பொருட்களைக் கடன் கொடுக்காதீர்கள். கடன் கொடுக்கும் போது நன்றாக ஆராய்ந்து கொடுங்கள்" என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***கைவிட்ட ஒண்பொருள் கைவரவு இல்லென்பார்***
***மெய்ப்பட்ட வாறே உணர்ந்தாரால் - மெய்யா***
***மடம்பட்ட மானோக்கின் மாமயில் அன்னாய்!***
***கடம்பெற்றான் பெற்றான் குடம்***

கடன் வாங்கியவர்களுக்கு மீண்டும் அதைத் திருப்பிக் கொடுக்க மனம் வருவது மிக மிகக் கஷ்டம். அதனால் பொருளைப் பேண விரும்பவன் தீயவர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது. "**கடன் பெற்றான் பெற்றான் குடம்**" என்பது பழமொழி.

40 “அன்பானவர்களே, சொற்களின் வகை தொகைகளை அறிந்த பெரியவர்கள், அறிவில்லாதவர்கள் கூடியிருக்கும் அவையில் பேசக்கூடாது. அப்படிப் பேசுவது தூய்மையில்லாத இடத்தில் கொட்டிய அமிழ்தம் போலப் பயனற்றதாகும். உயர்ந்த பல நூல்களைக் கற்றாலும் அவற்றின் உட்பொருளை உணராதவர்களுடனும் அதைப் பற்றிப் பேசக்கூடாது. தவறிப்பேசினால் துன்பமும், அவமானமும், பகையும் உண்டாகுமே தவிர நன்மைகள் எதுவும் உண்டாகாது.”

“நாவலடியில் இளங்கோ என்றொரு பெரும் அறிஞர் இருந்தார்.அவர் வேத, உபநிடத்களைக் கற்றுத் தேர்ந்தவர். அவ்வூரைச் சேர்ந்த பெரியவர்களும் பிற ஊர்களைச் சேர்ந்த பெரியவர்களும் தமக்கு விளங்காதவற்றை இளங்கோவிடமே கேட்டுத் தெரிந்து கொள்வர்”

“ஒரு முறை நாவலடிச்சனசமூக நிலையம் ஒரு தமிழ் விழாவை நடத்த விரும்பியது. அதை அவ்வூரில் வாமும் தாமோதரன் என்ற வணிகர்களின் தலைமையில் நடத்த முடிவு செய்யப்பட்டது. தாமோதரன் பெரும் பணக்காரனே தவிர அறிஞன் அல்லன். அவன் தன்னைப் பெரிய அறிஞனாக்க விரும்பித் தனது செலவிலேயே அந்த முத்தமிழ் விழாவைக் கொண்டாட விரும்பினான்.”
“அவ்வூர் பெரியவர்கள் இளங்கோவிடம் வந்து தமிழை ஆய்வு செய்யும் மன்றத்திற்கு உறுப்பினராக இருக்கும்படி வேண்டிக் கொண்டனர்”. “மூடர்கள் கூடியிருக்கின்ற சபையில் உடலளவிலும்

பணத்திலும் மிகுந்திருக்கின்ற ஒரு மூடனுக்கு உறுதியான பொருளைப்பற்றிச் சொல்வது வீணானதாகும். அது நல்ல சுவையான மாம்பழங்களைக் கடலிலே கொட்டுவதற்குச் சமமானதாகும் என்று அறிந்த இளங்கோ; "தாமோதரன் எல்லாம் அறிந்தவர். அவர் எல்லாம் செய்வார். எனது உதவி அவருக்குத் தேவைப்படாது" என்றார்.

"அந்தப் பெரியவரின் கூற்றில் உள்ள உண்மை நிலையைப் புரியாதவர்கள் தாமோதரன் பெரும் அறிஞன் என்றெண்ணிக் கருமமாற்றினர். ஊரிலும் பிற ஊரிலும் உள்ள பெரும் பெரும் அறிஞர்களுக்கும், பெரியவர்களுக்கும் அழைப்பிதழ்களை அனுப்பினர்."

"அன்று மிகவும் கோலாகலமாக விழா ஆரம்பமானது. பெரும் அறிஞனான இளங்கோ வராமையால் ஊர்ப்பிரமுகர்களும் அயலூர் பிரமுகர்களும் விழாவுக்கு வருகை தரவில்லை. தாமோதரனைப் போன்றவர்களே விழாவுக்கு வருகை தந்திருந்தனர். எந்தப் பொருளை எவர் சொன்னாலும் அப்பொருளை அப்படியே ஏற்றுக் கொள்ளாது, அதன் உண்மைப் பொருளை அறிந்து கொள்வது தான் பெரியோரது கடன். ஆனால் அச்சபையில் கூடியிருந்த மூடர்களில் செல்வாக் குள்ளவர்கள் சொல்வதை மறு பேச்சின்றி ஏனையோர் ஏற்றுக் கொண்டனர். தாமோதரன் சொன்னான்; "ஔவையார் சொன்ன ஆத்திசூடி தான் திருக்குறளை விட மேலான நூல். எனவே ஆத்திசூடியைப்

படியுங்கள். திருக்குறளைப் புறக்கணியுங்கள்” என்றான். அவனின் சொல்லில் அம்மகா நாடு நடைபெறுவதாலும், ஆத்திசூடிச் சூத்திரங்களைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டுமெனத் தாமோதரன் விரும்பியமையாலும் அச்சபை தாமோதரனின் கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்டது. ஆகையால், அன்பானவர்களே, கற்றறிந்தவர்கள் மூடர்களின் சபைக்குச் செல்ல மாட்டார்கள். அவர்கள் அவர்களுக்கு நல்லவற்றையும் சொல்ல மாட்டார்கள்.” என் றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நடலை இலராகி நன்னுணரார் ஆய***
***முடலை முழுமக்கள் மொய்கொள் அவையுள்***
***உடலா ஒருவற்கு உறுதி யுரைத்தல்***
***கடலுளால் மாவடித் தற்று***

அறிவுடையவர்கள் மூடர்களுக்கு உபதேசஞ் செய்ய முயலுதல் கூடாது. அவர்களுக்குச் சொல்வது வீணாகும். ‘**கடலுளால் மாவடித் தற்று**’ என்பது பழமொழி.